விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு.
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 10 சனிக்கிழமை (23.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## ஒரு மணி நேர இடைவெளிக்குள்

## 3 வீடுகள்; பஸ் மீது தாக்குதல்

### மோ.சைக்கிளில் வந்த ஆயுதக் குழு அடாவடி




23ஆம் பக்கம் பார்க்க....

# இருதேசம் ஒருநாடு!

### வடக்கு மாகாண சபையில் அமளி

(யாழ்ப்பாணம்)

இலங்கை இரு மாநிலங்களை கொண்ட ஒரு நாடாக பிரிக்கப்பட்டு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உச்ச அளவிலான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்வு திட்டம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு தேசம் ஒருநாடு என்ற வாசகத்தோடு இசைந்து போவதனால் நேற்றைய தினம் வடக்கு மாகாண சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வரை எதிர்த்தால் முழுவதும் எதிர்ப்பாகும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சரினை எதிர்த்தால் மாகாண சபையின் அனைத்து உறுப்பினர்களையும எதிர்க்க வேண்டியிருக்கும் என தென்னிலங்கை இனவாத சக்திகளுக்கு வடக்கு மாகாண 24ஆம் பக்கம் பார்க்க....

## "சமஷ்டியும் தமிழர்களும்" ஜே.வி.பிக்கு விக்கி பதில்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எதைக் கொடுத்தாலும் திருப்திப்படுவார்கள் என்ற எண்ணம் ஜே.வி.பியின் பொது செயலாளர் ரில்வின் சில்வாவின் மனதில் மேலோங்கியிருக்க வேண்டும்.

அல்லது அவர்களை வெருட்டி வழிக்குக் கொண்டுவரலாம் என்று கூட அவர் நினைத்திருக்கலாம். அதனால்தான் சமஷ்டியை தமிழர்கள் கேட்கவில்லை என அவர் கூறியுள்ளார் என ஜே.வி.பி.யின் கருத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் பதிலடி கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் வலம்புரி பத்திரிகையின் செய்தியை மேற்கோள் காட்டி வடக்கு மாகாண முதலமைச்சர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதியுடனும பிரதம மந்திரி 23ஆம் பக்கம் பார்க்க....

## கடுமையான சித்திரவதை!

(கொழும்பு)

கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு உடற்பலமிழந்து உயிராபததுடன் இருக்கும் மகனை மீட்டுத் தருமாறு கிளிநொச்சி பகுதியில் வசிக்கும் தாய் ஒருவர் கொழும்பில் உள்ள மனித உரிமை ஆணைக் குழுவின் அலுவலகத்தில் நேற்றையதினம் முறைப்பாடு செய்துள்ளார்.

கிளிநொச்சி பகுதியில் வசிக்கும் 21 வயதுடைய 02ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளி கிளிநொச்சியில் கைது


(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, ஆனந்தபுரத்தை சேர்ந்த தாமோதரம்பிள்ளை ஜெயகாந்த் என்ற 24ஆம் பக்கம் பார்க்க....

# தொடர்ந்து அடிமைப்பட்டிருக்க எந்த இனமும் விரும்பாது!

### அறிவுபூர்வமான தீர்வு தேவை - விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

எந்த ஒரு இனமும் தொடர்ந்து அடிமைப்பட்டிருக்க விரும்பமாட்டாது. யார் மறுப்புத் தெரிவித்தாலும் நாங்கள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இராணுவத்தினரின் மேலாண்மையின் கீழ்த்தான் வாழ்கின்றோம். இந்தியாவின் அனுசரணையால் வடமாகாண சபை என்ற ஒன்று கிடைத்தாலும் எம்மால் எம்மைச் செவ்வனே ஆள சட்டம் இடம் கொடுக்கவில்லை என்பதே யதார்த்தம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பகிடிவதையைத் தடுக்கச் சட்டம்!

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை, பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றைக் கட்டுப்படுத்தி பல்கலைக்கழக கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர சட்டத்தை உறுதிசெய்ய வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு வருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்படும் என் 02ஆம் பக்கம் பார்க்க....

## 7 தூதுவர்கள் புதிதாக நியமனம்

(கொழும்பு)

ஐந்து புதிய தூதுவர்கள் மற்றும் இரண்டு உயர்ஸ்தானிகர்கள் தமது நியமனம் கடிதங்களை ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவிடம் நேற்று கையளித்தனர்.

இந் நிகழ்வு கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதன்படி, உருகுவே குடியரசின் தூதுவராக, கார் 24ஆம் பக்கம் பார்க்க....

## 5 கைக்குண்டுகள் மீட்பு



(மல்லாவி)

கிளிநொச்சி இரணைமடு காட்டு பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் 5 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு சந்தியில் இருந்து இரணைமடு குளத்திற்கு செல் 24ஆம் பக்கம் பார்க்க....

## தீர்வுத்திட்டம் சபையில் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டம், நேற்றையதினம் உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் குறித்த தீர்வு திட்டம் நிறைவேற்றப்படும்போது சபையில் பத்தொன்பது உறுப்பினர்களே காணப்பட்டனர். 24ஆம் பக்கம் பார்க்க....

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர் ஆட்சேர்ப்பு அதிகரிக்கப்படும்

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை இனிவரும் காலத்தில் அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் தேவைப்பாடுகளுக்கு அமைய சேர்த்துக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட கொள்கையடிப்படையிலான தீர்மானத்தின் படி பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் தேவைப்பாடு தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அதற்கு அமைய இனிமேல் தாமதமின்றி ஆட்சேர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமாக இருக்கும்.

அத்துடன் 2014ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் தோற்றிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான வர்த்தமானி அறிவித்தல் எதிர் வரும் ஜூன் மாதம் வெளியிடப்படும். அதில், மாணவ ஆசிர்களை செப்ரெம்பர் மாதம் அளவில் சேர்த்துக்கொள்வதற்கு திட்டம் வகு க்கப்பட்டுள்ளது.

அவ்வாறே எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களை தேசிய கல்வியற் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதற்கு வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அமைய 2012 க. பொ.த. (உயர்தரம்) ஆண்டுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட 3 ஆயிரத்து 500 ஆசிரிய மாணவர்களுக்குப் பதிலாக 2013 க.பொ.த. (உயர் தரம்) ஆண்டுக்காக ஆசிரிய மாணவர்கள் 4 ஆயிரத்து 700 பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். அவ்வாறே, எதிர்வரும் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஒரு கல்வியாண்டில் சேர்த்துக் கொள்ளப்படும் ஆசிரிய மாணவர் எண்ணிக்கையை 6 ஆயிரத்து 200 வரை அதிகரிப்பதற்கு திட்டம வகுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடையாளம் காணப்பட்டு ள்ள ஆயிரத்து 190 விரிவுரையாளர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தேவைப்பாடுகளுக்கு அமைய புதிய விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## தவறவிடப்பட்டுள்ளது

முல்லைத்தீவு வீதி நீதிபுரம் மாங்குளத்தை சேர்ந்த இராசரத்தினம் கேதீஸ்வரகுமரன் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பேஸ் ஒன்று நேற்றுமுன்தினம அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்திற்கும் மாங்குளத்துக்குமிடையில் தவறியுள்ளது. இந்த பேசில் 843184758V இலக்கமுடைய அவருடைய அடையாளஅட்டை சாரதி அனுமதிப் பத்திரம் மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம் மற்றும் ATM கடனட்டைகள் உள்ளிட்ட பல ஆவணங்கள் காணப்படுகிறது எனவே இதனை கண்டெடுத்தவர்கள் இவரது முகவரியில் ஒப்படைக்குமாறும் அல்லது 0775 117344 என்ற இலக்கத்திற்கு தகவல் தருமாறு கோருகின்றார். (சி-4406)


### வேலைக்கு ஆட்கள் தேவை

- Typing, Page Disigning தெரிந்த பெண்கள் தேவை.
- மல்ரி சென்றறில் வேலைக்கு ஆண்/ பெண்கள் தேவை.

**இராசலிங்கம் மல்ரி சென்ரர்**

பிறவுண் வீதி, (கலட்டிச் சந்தி)

T.P:0779073773, 021 221 5338

(4279)


## இரு பூசகர்களுக்கு தீக்காயம்!

கோவில் வளவை துப்புரவு செய்யும் போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தினால் தந்தை மகன் உட்பட இரு பூசகர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் கந்தர்மடம் புகையிரத கடவைக்கு அருகில் உள்ள வைரவர் கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதில் அக் கோயிலில் பூசை செய்யும் பூசகரான பால சுப்பிரமணியம் குருக்கள் (வயது 62) மற்றும் அவரது மகனான சாந்தஸ் சொருப குருக்கள் (வயது 25) ஆகிய இருவருமே படு காயமடைந்தவர்களாவர். (செ-30)

## பகிடிவதையைத்...

றும் அவர் கூறியுள்ளார்.

பல்கலைக்கழங்களில் பகிடிவதை, பாலியல் மற்றும் பால் நிலை வன்முறைகளைத் தவிர்த்தல் எனும் தொனிப்பொருளில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் உயர்மட்டப் பேச்சு ஆரம்பமானது. இதில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மேலும் கூறுகையில், நாட்டின் சட்டம் சகலருக்கும் சமமான முறையிலேயே கருதப்படுகின்றது. இந்த சட்டத்திட்டங்களுக்கு எதிராக செயற்படுவோர் அல்லது அதனை மீறுவோர் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காகவே பொலிஸாரும் இருக்கின்றனர்.

ஆனால், இந்தச் செயற்பாடானது நாட்டில் இருக்கும் பல்கலைக்கழங்களுக்குள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனாலேயே, பகிடிவதை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலை வன்முறைகள் என்பன அங்கு அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகமே பொறுப்புக் கூறவேண்டும். இவர்களே நாட்டின் சட்டத்தை பல்கலைக்கழகத்திலும் உறுதிசெய்ய வேண்டும். அத்தோடு, தற்போது நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களின் கட்டமைப்புக்களும் 1942ஆம் ஆண்டு இலங்கையின் வரை படத்தைக் கொண்டே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையும் மாற்றமடைய வேண்டும்.

இதற்காக தற்போது சட்டவரைபொன்றும் தயாரிக்கப்படுகின்றது. இது பெரும்பாலும் இவ வருட இறுதியில் அல்லது அடுத்த வருட முற் பகுதியில் வெளியிடப்படலாம் என்றார். (செ-12)

## கடுமையான...

சுப்பிரமணியம் கோகிலன் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்

கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம விடுவிக்கப்பட்ட 39 அரசியல் கைதிகளில் இவரும் ஒருவர். இவருக்கு பிணை நின்ற 2 நபர்களில் ஒருவர் காணாமல் போனதையடுத்து சாவகச்சேரி பகுதியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவத்துக்கு பின்னர் இவருடைய பிணையாளி தொடர்பாக இவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டு கடந்த 10 ஆம் திகதி மறுபடியும் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டார்

11 ஆம் திகதி அன்று பூசாவுக்கு கொண்டு செல்லப்பட்டவரை கடந்த செய்வாய்க்கிழமை அவரது உறவினர்கள் பார்ப்பதற்கு சென்ற போது அவர் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

அதே நேரம் கைது செய்யப்பட்டவரின் சகோதர்களையும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தி வருவதாகவும் தெரிவித்து நேற்றைய தினம் இவர்கள் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர்.(செ-9)

## மோதல் காரணமாக மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நபர்கள் சிலருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலில் முடிந்ததில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் குருநகர் 5 மாடி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த அன்ரனி ஜெயதீஸ்பாலா நிமல்ராஜ் (வயது 22), அன்ரன் டொறின்டன் (வயது 39) மற்றும் குருநகர் வோளாங்கண்ணி வீதியை சேர்ந்த பிலிப் ஜெகதீஸ்வரன் (வயது 21) என்ற மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு பதிவாகியுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-30)

## கார் மோதியதில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது பின்னால் வந்த கார் மோதியதில் குறித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் நாவற்குழி சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த டேவிட் சந்தியாப்பிள்ளை (வயது 63) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)


# மரண அறிவித்தல்

## திருமதி தயாவதி நவகுமாரன்



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் உசன் மற்றும் 17/45, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட தயாவதி நவகுமாரன் 21.04.2016 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இந்து போர்ட் (Hindu Board) இராஜரத்னத்தின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் (முன்னாள் அதிபர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யோகாம்பாள் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் உசனைச் சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் உமா மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் நவகுமாரனின் (ஓய்வுநிலை வங்கி உத்தியோகத்தர் - Commercial Bank, Jaffna.) அன்பு மனைவியும் மாதங்கி (யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 3ஆம் வருட மாணவி), கிருத்திகன் (Sampath Bank Kaytes), தாரங்கி (GCE A/L 2016 Batch மாணவி - யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தனுரங்கி (தரம் 10 மாணவி யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதாவின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணமூர்த்தி, சறோஜினி, சாந்தினி, சிவகுமார், ரவிகுமார், றஜனி, நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (24.04.2016) பி.ப ஒரு மணியளவில் சரசாலை தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
சரஸ்வதி வித்தியாலயம் அருகில்
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:-
ந.நவகுமாரன்
(Rtd Banker, Commercial Bank, Jaffna.)

# அந்தியேட்டி அழைப்பு

மலர்வு 14 - 04 - 1924



உதிர்வு 25 - 03 - 2016

25.03.2016 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வம்

அமரர் **கந்தவனம் தங்கமுத்து**

*எத்தனை செல்வங்கள் வந்தாலுமே*
*எத்தனை சொந்தங்கள் வந்தாலுமே*
*அத்தனையும் ஒரு தாயின் அன்புக்கு ஈடாகுமா*

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 24.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு பொலிகண்டியிலுள்ள அவரது மகளாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி சஞ்சயனம் செய்யப்படும். பகல் 10 மணிக்கு நடைபெறும் சபீண்டிகரண நிகழ்வில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மகன்
**க.சூரியகுமாரன்** முன்னைநாள் கடற்றொழிலாளர் சமாசத்தின் செயலாளர், யாழ்.சம்மேளனத்தின் செயலாளர், வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர்.

(4265)

# கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யவே முடியாது!

## அமெரிக்கா நிராகரிப்பு

(கொழும்பு)

**அமெரிக்கா சென்றுள்ள இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யுமாறு இரு தமிழ் அமைப்புக்கள் இணைந்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் முன்வைத்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.**

தமிழ்ப்போர் ஒபாமா (Tamils for Obama) மற்றும் அமெரிக்கன் தமிழ் போரம் (American Tamil Forum) ஆகிய இரு அமைப்புக்களுமே இவ்வாறு அவசர கோரிக்கையை முன்வைத்திருந்தன.

போர்க் குற்றச்சாட்டுக்களின் முக்கிய நபராக கருதப்படும் ஒருவரை கைதுசெய்து வழக்கு தாக்கல் செய்யும் வாய்ப்பை அமெரிக்கா தவறவிடக்கூடாது என அமைப்புக்கள் வழங்கியுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடானது சர்வதேச நீதிமன்றத்துக்குரிய ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டில்லாததனாலும், கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சர்வதேச பிடியாணைகள் எதுவும் பிறப்பிக்கப்படாதுள்ளதனாலும் அமெரிக்க அரசாங்கம் இந்த மனுவை நிராகரிப்பதாகவும் அந்நாட்டு இராஜாங்க திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

## சிறைச்சாலைகளில் புதிய மொபைல் ஜாமர்கள் பொருத்தப்படவுள்ளன

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் புதிய மொபைல் ஜாமர்கள் பொருத்தப்படவுள்ளன. கைதிகள் தொலைபேசி ஊடாக குற்றச் செயல்களில் ஈடுபடுவதனை தடுக்க இவ்வாறு ஜாமர்கள் பொருத்தப்படவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி முதல் இந்த புதிய திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் துசார உபுல்தெனிய நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தற்போது சிறைச்சாலைகளில் அமுல்படுத்தப்படும் ஜாமர் கட்டமைப்பு போதியளவு பலனைத் தரவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய ஜாமர்களை பயன்படுத்துவது குறித்த சோதனை நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

இப்புதிய திட்டம் முதலில் வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் அமுல்படுத்தப்படவுள்ளது. அதன் பின்னர் ஏனைய சிறைச்சாலைகளிலும் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. (இ-5)

## சீருடைக்கான வவுச்சர் முறையை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை

பாடசாலை மாணவர்களின் சீருடைத் துணியைக் கொள்வனவு செய்வதற்காக கொண்டுவரப்பட்டுள்ள வவுச்சர் வழங்கும் முறையை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

2017ஆம் ஆண்டில், இந்த வவுச்சர் முறையை இரத்துச் செயது, இதுவரை காலமும் இருந்துவந்தது போல், பாடசாலை ரீதியில் சீருடைக்கான துணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரியதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (இ-5)

## சவுக்கம் காட்டை பாதுகாக்கும் பணி ஆரம்பம்





சர்வதேச புவிதினம் நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்ட நிலையில் யாழ். மணற்காட்டில் உள்ள சவுக்கம் காடு 28 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அங்கு சவுக்கம் காட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இராணுவத்தினர், பொலிஸார், அரச உத்தியோகத்தர்கள் என ஆயிரத்திற்கும் அதிகமானோர் வேலையில் ஈடுபட்டிருந்ததுடன் பொதுமக்களும் அவர்களது உழவு இயந்திரங்களுடன் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர், தும்பளைச் செய்தியாளர்)

## ஹெரோயின் பொதியுடன் ராணுவச் சிப்பாய் கைது

கலேவல, வஹகோட்டே பிரதேசதில் உள்ள வீடொன்றில் ஹெரோயின் போதைப் பொருளை பொதி செய்து கொண்டிருந்த அங்கவீனமான இராணுவ வீரர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

14 கிராம் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் மாலை இவர்கள் கலேவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருளின் பெறுமதி 4 இலட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் மேலும் போதைப் பொருள் இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மோப்ப நாய்களின் உதவியுடன் பொலிஸாரால் வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட இருப்பதாகவும், வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் காமினி மீகஹகுபுர தெரிவித்தார். (இ-5)

## வரி தொடர்பிலான தீர்மானங்களை இனி பொருளாதார அமைச்சு மேற்கொள்ளும்

வரி தொடர்பிலான தீர் மானங்களை பொருளாதார அமைச்சு மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவின் கீழ் இயங்கி வரும் பொருளாதார விவகார மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கீழ் நாட்டின் வரி தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட வுள்ளன.

பிரதமர் தலைமையில் பொருளாதார துணைக்குழு ஒன்றை நிறுவி எடுக்கப்படும் தீர்மானங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அறிவிக்கப்படவுள்ளது.

எந்தவொரு நிலையிலும் மக்களுக்கு நெருக்கடி ஏற் படக்கூடிய வகையில் வரி அறவீடுகள் செய்யாத வகையில் வரிக் கொள்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையி லேயே இந்த விசேட குழு நிறுவப்பட்டுள்ளதாக அரசாங்க ஊடகமொன்று செய்தி வெளியிட்டு ள்ளது.

இதன்படி நாட்டின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வரி கொள்கைகள் தொடர்பான தீர்மானங்களை எடுக்க மாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## மகிந்த வென்றிருந்தால் பொருளாதாரத் தடை!

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தால் எமது நாட்டுக்கு எதிராக சர்வதேசம் பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கும் என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். பொல்கஹவலவில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகள் எமக்கு உதவிகளை வழங்க முன்வரவில்லை. சர்வதேசத்தின் முன்னிலையில் எமது நாட்டிற்கு கௌரவம் இருக்கவில்லை. நாடு தனிமைப்பட்டிருந்தது. மூன்று வருடகாலமாக தொடர்ச்சியாக 3 தடவைகள் எமக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை பேரவையில் மூன்று பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாறான பயங்கரமான நிலைமையே கடந்த ஆட்சியில் காணப்பட்டது. உலக நாடுகள் இலங்கையை கைவிட்ட நிலையே காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தால் எமது நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் சர்வதேசம் விடுத்திருக்கும். எமது நாடும், மக்களும் செய்த புண்ணியம் மகிந்த தோல்வி கண்டார். நாடும் மக்களும் பாதுகாக்கப்பட்டனர். அது மட்டுமல்ல மகிந்த வெற்றிபெற்றிருந்தால் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நான்காவது பிரேரணையும் நிறைவேற்றப்பட்டிருக்கும். உலகில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் தலைதூக்கும் என்பதை நன்கு தெரிந்து கொண்ட மகிந்த 2 வருடங்களுக்கு முன்பதாகவே ஜனாதிபதி தேரதலை நடத்தினார் என்றார். (இ-5)

# டென்னிஸ் வீரர் பெடரர் பெயரில் உருவாகிய புதிய வீதி




சுவிட்சர்லாந்து நாட்டின பிரபல டென்னிஸ வீரரான ரோஜர் ஃபெடரர் பெயரில் உருவாகியுள்ள புதிய வீதி ஒன்றை அவரே திறந்து வைத்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

டென்னிஸ் விளையாட்டு வீரரான ரோஜர் ஃபெடரர் தற்போது உலக டென்னிஸ் வீரர்களின் தரவரிசை பட்டியலில் 3-ம் இடம் வகித்து வருகிறார்.

சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த ரோஜர் ஃபெடரரின் டென்னிஸ் விளையாட்டு சாதனைகளை கௌரவிக்கும் வகையில், அவருடைய பெயரில் ஒருவீதியை உருவாக்குவது என கடந்த 2010ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, பேர்ன் மாகாணத்தில் உள்ள Biel என்ற நகரில் Allee Roger Federer என்ற பெயரில் ஒரு புதிய வீதி ஒன்று உருவாகியுள்ளது.

இந்த வீதியை நேற்றுமுன்தினம் 1,500 பேர் பங்கேற்ற நிகழ்ச்சியில் ரோஜர் ஃபெடரர் கலந்து கொண்டு தனது கைகளால் ரிப்பன் வெட்டி திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்ச்சி குறித்து ரோஜர் ஃபெடரர் பேசியபோது, எனது பெயரில் ஒரு வீதி ஒன்று உருவாகி இருப்பது எனக்கு மிகவும் உற்சாகமாகவும், நெகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

இந்த வீதியில் இருந்து எண்ணற்ற டென்னிஸ் வீரர்கள் உருவாகி சுவிட்சர்லாந்து நாட்டிற்கு புகழை சேர்ப்பார்கள்'என உருக்கமாக பேசியுள்ளார்.

ரோஜர் ஃபெடரர் சிறுவயதாக இருந்த போது, டென்னிஸ் விளையாட்டு பயிற்சிகளை தற்போது புதிதாக உருவாகியுள்ள வீதி பகுதியில்தான் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# தொடர்ந்து...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு மற்றும் அரசியல் யாப்புக்கான கொள்கை வரைபு மீதான விவாதம் நேற்று வடக்கு மாகாண சபையில் நடைபெற்றது. இதன்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கள் ஆவணத்தில் கூறியிருக்கும் விடயங்கள் எவையும் புதியவையல்ல. காலஞ்சென்ற தந்தை செல்வா போன்றவர்கள் கூறியதையே நாங்கள் இங்கு வலியுறுத்தியுள்ளோம். பிரிவினைக்கு எதிர்மாறான் ஒரு கருத்தையே முன்வைத்துள்ளோம். நாட்டினுள் அதிகார அலகுகளை உண்டாக்குவது அந்தந்த மக்கட் கூட்டங்கள் தத்தமது இடங்களில் தங்கள் விடயங்களைத் தாங்களே கையேற்று நிர்வகிக்கவே. இதுவே ஜனநாயகம்.

பல நாட்களின் பிரயத்தனங்களின் பின்னர் இக் கொள்கை முன்மொழிவை உங்கள் முன் சமர்ப்பிக்கக் கூடியதாக இருப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன். குறைமாதக் குழந்தைபோல நாங்கள் உங்கள் முன் சமர்ப்பித்த ஆரம்ப சமர்ப்பணங்கள் நாடு பூராகவும் பவனிவந்து பலத்த விமர்சனங்களை ஏற்கெனவே எதிர்நோக்கியுள்ளன. இவ் ஆவணமானது எம் எல்லோரின் எதிர்பார்ப்பையும் எடுத்தியம்பும் ஆவணமென்றே கூற வேண்டும்.

எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வகையில் இந்த ஆவணத்தைத் தயாரித்துள்ளோம். கூடியவகையில் முரண்பாடுகளையும் தீவிரப் போக்குகளையும் கட்டுப்படுத்தியுள்ளோம். தீவிரப் போக்கு என்பது நாம் எந்தக் கோணத்தில் இருந்து பார்க்கின்றோம் என்பதையொத்தது.

எம்மைப் பொறுத்தவரை மிகவும் சாதாரண கருத்து வெளியிடலாக உள்ள இந்த ஆவணம் தெற்கில் பலரைப் பேயாட்டம் ஆட வைத்துள்ளது. முதலமைச்சரைக் கைது செய்ய வேண்டும் என்று கோருகின்றது ஒரு கட்சி. ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றால் முதலில் பிரச்சினையின் சகல பரிமாணங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அறிவு பூர்வமாக அதனை அணுக வேண்டும். உணர்ச்சி பூர்வமாக அணுகுவதால் பிரச்சினைகள் மேலும் வலுவடைவன.

எமது மொழி, இடங்கள், மதங்கள், கலாசாரப் பின்னணி என்பன மற்றையோரால் சூறையாடப்படாமல் அவற்றைப் பாதுகாத்து சுமுகமாக எல்லோருடனும் சகஜவாழ்வு வாழக்கூடிய விதத்திலேயே எமது வரைவை முன்வைத்துள்ளோம் என்றார் முதலமைச்சர். (செ-4)

# புனேயை வென்றது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

பிரிமியர் தொடரில் தோனியின் புனே அணி ஹட்ரிக் தோல்வி அடைந்தது. நேற்று பெங்களூர் அணிக்கு எதிரான லீக் போட்டியில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

புனேயில் நேற்று நடந்த 9ஆவது பிரிமியர் கிரிக்கெட் தொடருக்கான 16ஆவது லீக் போட்டியில் புனே - பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற புனே அணி முத லில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

### டி வில்லியர்ஸ் விளாசல்

பெங்களூர் அணிக்கு லோகேஷ் ராகுல் (7) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய டி வில்லியர்ஸ் 25 பந்தில் அரைசதம் எட்டினார். மறுமுனையில் அசத்திய ஹோலி, இத்தொடரில் 3ஆவது அரைசதம் அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 155 ஓட்டங்கள் சேர்த்த போது ஹோலி (80), டி வில்லியர்ஸ் (83) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். பெங்களூரு அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்கள் எடுத்தது. வோட்சன் (1), சர்பராஸ் கான் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### ரஹானே அரை சதம்

சவாலான இலக்கை விரட்டிய புனே அணிக்கு டு பிளசி (2) ஏமாற்றினார். வலது கெண்டைக்கால் பகுதியில் ஏற்பட்ட தசைபிடிப்பு காரணமாக கெவின் பீட்டர்சன் (0) ரிட்டயர்ட் ஹேர்ட் ஆனார். ஸ்ரீவ் ஸ்மித் (4) ர்ன் அவுட் ஆனார். பொறுப்பாக ஆடிய ரஹானே (60) அரைசதம் கடந்தார். தோனி (41) அரைசத வாய்ப்பை இழந்தார். வோட்சன் வீசிய 19 ஆவது ஓவரில் பெரேரா (34), ரவிச்சந்திரன் அஷ்வின் (0) ஆட்டமிழந்தனர். கடைசி ஓவரில் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட் டன.

ரிச்சர்ட்சன் வீசிய 20வது ஓவரில் பாட்யா (21), முருகன் அஷ்வின் (0) ஆட்டமிழக்க அந்த ஓவரில் 7 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தன.

புனே அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது.



அன்கித் சர்மா (3) ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் சார்பில் ரிச்சர்ட்சன் 3 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.

ஏற்கெனவே குஜராத், பஞ்சாப் அணிகளிடம் அடி வாங்கிய புனே அணி தொடர்ந்து 3ஆவது தோல்வியை பெற்றது. பெங்களூரு அணி 2ஆவது வெற்றியை பதிவு செய்தது.




போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூரின் டி வில்லியர்ஸ் தெரிவானார்.

### போட்டித் துளிகள்




அபாரமாக ஆடிய பெங்களூரு அணி யின் ஹோலி, டி வில்லியர்ஸ் ஜோடி 2 ஆவது விக்கெட்டுக்கு 155 ஓட்டங்கள் சேர்த்தது. இதன் மூலம் ஒட்டுமொத்த ரி20 அரங்கில் 3 ஆவது முறையாக 150 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்த முதல் ஜோடி என்ற சாதனை படைத்தது.

பெங்களூர் அணியின் ஹோலி, டி வில் லியர்ஸ் ஜோடி 11ஆவது முறை யாக 50 அல் லது அதற்கு மேல் ஓட்டங்கள் சேர்த்தது. இதன் மூலம் பிரிமியர் தொடர் வரலாற்றில் அதிக முறை 50 அல்லது



அதற்கு மேல் ஓட்ட ங்கள் சேர்த்த ஜோடிகள் வரிசையில் 3 ஆவது இடம்பிடித்தது. முதலிரண்டு இடத்தில் பெங்களூரின் ஹோலி-ஹெய்ல் (15 முறை), சென்னையின் மைக் கல் ஹசி-முரளி விஜய் (13) ஜோடிகள் உள்ளன.

நேற்றைய போட்டியில் பெங்களூரு துடுப்பாட்ட வீரர்கள் 28 பந்துகள் மட்டுமே ஒரு ஓட்டம் கூட எடுக்காமல் வீணடித்தனர்.

இதன்மூலம் பிரிமியர் தொடர் அரங்கில் குறைந்த டொட் போல் சந்தித்த அணிகளுக்கான பட்டியலில் 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டது. முதலிடத்தில் சென்னை அணி (25 டொட் போல், எதிர் மும்பை, 2013) உள்ளது.

### பீட்டர்சன் காயம்

புனே அணியின் கெவின் பீட்டர்சன் ஒரு பந்து மட்டுமே சந்தித்த நிலையில் வலது கெண்டைக்கால் பகுதியில் ஏற்பட்ட தசைப் பிடிப்பு காரணமாக 'ரிட்டயர்ட் ஹர்ட்' ஆனார். (க)

# "அன்டிகனி" நாடக ஆற்றுகை

கலாநிதி. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பிலும், க.ரதிதரன் அவர்களின் நெறியாள்கையிலும் உருவான "அன்டிகனி" எனும் நாடக ஆற்றுகை நாடக அரங்கக்கல்லூரியின் தயாரிப்பில் யாழ்.பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் அலகின் அனுசரணையோடு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேடையேற்றப்பட்ட வுள்ளது."அன்டிகனி" கிரேக்க அரங்கு கி.மு. 5 ஆம் நூற்றாண்ட ளவில் வளர்ச்சி அடைந்த காலத்தில் தோற்றம் பெற்ற அவலச்சுவை நாடக ஆசிரியர்களுள் சிறப்பானவராக திகழ்ந்த சோஃபகிளீஸ் அவர்களால் எழுதப்பட்ட நாடகமாகும்.

இந்நாடகம் "தெய்வநீதிக்கும் அரச நீதிக்கும் இடையிலான முரண் பாட்டின்" அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது.

ஈழத்தில் தமிழில் இ.முருகையனால் "கர்வ பங்கம்" என்ற தலைப்பிலும், குழந்தை ம.சண்மு கலிங்கத்தால் "அன்டிகனி" என்ற தலைப்பி லும் மொழிபெயர்க்கப்பட்டு ள்ள இந் நாடகம் உயர்தர வகுப்பு மாணவர் களின் பாடத்திட்டத்திலும் இணைக்கப் பட்டிரு ப்பதால் மாணவர் களுக்கு மிகவும் பயனு டையதாய் அமையும்.

ஆர்வலர்கள் நாடகத்தை கண்டுகளித்து பயன்பெறலாம். நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம் என நாடக அரங்கக்கல்லூரியின் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## 12 லட்சம் ரூ.பெறுமதியான சிகரெட்டுக்கள் அரசுடைமை

12 இலட்சம் பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.டுபாயிலிருந்து நேற்று முன்தினம் குறித்த சிகரெட்டுக்கள் கொண்டு வரப்புட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் கட்டுநாயக்க விமான நிலையத்தின சுங்கப் பிரிவினரன் சுற்றிவ ளைப்பின் போதே இவை கைப்பற்றப் பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன்போது 36100 சிக ரெட்டுக்கள் இவ் வாறு கைப் பற்றப்பட்டுள்ளதாகவும், இதன் பெறுமதி 12 இலட்சம் ரூபா என் றும் குறிப் பிடப்பட்டு ள்ளது.

அத்துடன் குறித்த சிக ரெட்டு களை கொணடு வந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதப் பணம் விதிக்கப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவி னர் தெரிவித்துள்ளனர். (இ-5)

## சங்காபிஷேகம்

யாழ்.கொட்டடி,சீனிவாசகம் வீதி அருள் மிகு ஸ்ரீஞான வைரவர் சுவாமி கோயில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனத்தின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேக கிரியை கள் ஆரம்பமாகி விசேட பூஜையுடன் 12 மணிய ளவில் மகேஸ்வர பூசை இடம் பெறும். (இ-5)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03.09.1983 | **திரு.கந்தசாமி வசந்தகுமார்** | மறைவு 21.04.2016

01 வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவை வதிவிடமாகக் கொண்ட எமது அலுவலகத்தின் ஊழியரான திரு.கந்தசாமி வசந் தகுமார் அவர்களின் இழப்பில் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள் கின்றோம்.

(4275)

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.**

# மரண அறிவித்தல்

## அமரர் லீலாவதி நடராஜா



55, சங்கிலியன் வீதி நல்லூரைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி நடராஜா 22.04.2016 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு நடராஜாவின் (ஓய்வு பெற்ற கணக்காளர், சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப் பாணம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான முத்தையா- கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் நந்தரூபன் (நோர்வே), ராஜரூபன் (நோர்வே), சியாமளா (லண்டன்), தனிஸ்ரூபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரேணுகா, சுகிர்தா, கிரியா, ஜெயராஜ், தர்சினி ஆகியோரின் மாமியாரும் நிவேதா, சுவேதா, ஜீனா, றீனா, நிவின், கெவின், ஷவோன், சானு, றித்தோஸ், விசானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்லத்தம்பி மற்றும் இராசதுரை, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பவளம் மற்றும் மகேஸ்வரி, கருணாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.04.2016 இன்று சனிக்கிழமை கொழும்பு -08 ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாள்ஸ் பிளேஸ்,**
**தெஹிவளை.**

TP: **011 271 4319**
**077 023 3322**
**0047 957 70545**

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள்.**

(4276)

# இராசி பலன்

23.04.2016
(சித்திரை 10, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பிரதமை பிற்பகல் 12.54 மணிவரை
சுவாதி முற்பகல் 9.51 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
அமிர்த சித்தம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| | அச்சுவினி அதிகாலை 5.53 இற்கு விரு-சந் | | குரு ராகு |
| | சனி செவ் | சந் | |

**மீனம்:** உறவினர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், கோப மாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்பட லாம், முயற்சிகள் இழுபறியா கும்.

**மேடம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி யான தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, முயற்சிகள் கைகூடும், ஆனை முகனை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** உடல்நலன் சீராகும், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையா ள்வீர்கள், முயற்சிகளில் முன்னே ற்றம் ஏற்படலாம், பிரபலமான வர்களின் சந்திப்பு இடம்பெற லாம்.

**மிதுனம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகை கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அக் கறை காட்டுவீர்கள், சான்றோர்க ளின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பிரியமானவர் களின் சந்திப்பு இடம்பெற லாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** வருமானம் உழைப்பதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், உங் களின் செயற்பாடுகளில் உற்சா கம் பிறக்கும்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடும்.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங் கும் நாள், நண்பர்களால் வளர் ச்சி கூடும் நாள், பகை விலகும், நினைத்த காரியங்களில் முன் னேற்றம் காண்பீர்கள்.

**வளவன்**

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எண் ணங்கள் நிறைவேற ஆறுமுகத் தானை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், சயனசுகக் குறை வான நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், செலவுக் கேற்ப வருமானம் வந்து சேர லாம்.

**கன்னி:** மக்கள் போற்றும் வாழ்வமைய விக்கினேஸ்வரனை வழிபட வேண்டிய நாள், பணத் தேவை கள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

## ரோலர் மீன்பிடியை தடைசெய்ய வேண்டாமெனக் கோருவது

# லட்சக்கணக்கான மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும்

## சுமந்திரனின் சட்டவரைபை ஆதரிக்க கோருகிறார் சுப்பிரமணியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 500 குடும்பங்கள் ரோலர் மீன்பிடி தொழிலை நம்பி உள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 23 ஆயிரம் குடும்பங்கள் சாதாரண மீன்பிடி தொழிலை நம்பி உள்ளனர். இவ்வாறு இருக்க வடக்கு மாகாண சபை ரோலர் மீன்பிடி தொழிலை தடை செய்ய வேண்டாம் என கோருவது வடக்கில் உள்ள இலட்சக்கணக்கான மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகுமென யாழ்.மாவட்ட கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் என்.வி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபை இது தொடர்பில் சரியான தொரு நிலைப்பாட்டினை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் ரோலர் படகு கடற்றொழிலை முற்றாக தடை செய்ய வேண்டுமெனவும், இவ்வாறு தடைசெய்வதன் மூலமே பிற நாட்டு மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் வந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதனை கட்டுப்படுத்த முடியும் எனவும், ரோலர் கடற்றொழிலில் ஈடுபடுவர்களது படகு பறிமுதல் செய்யப்படல் வேண்டும் என்ற பல விடயங்களுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றில் புதிய சட்ட வரைபு ஒன்றினை சமர்ப்பித்திருந்தார். இந்த சட்டவரைபு மாகாண சபைகளின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட வேளை, குறித்த சட்ட மூலம் தொடர்பான விவாதம் வடக்கு சபையில் நடைபெற்றது.

இதன் போது உறுப்பினர்களில் பெரும்பாலானோர் குறித்த சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்டால் ரோலர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பாதிப்பினை எதிர்நோக்க வேண்டி வரும். ஆகையால், அவர்களுக்கான மாற்றுவழி குறித்து ஆராயப்பட்டதன் பின்னர் குறித்த சட்ட மூலத்திற்கு ஒப்புதல் வழங்க முடியும் எனவும் அதுவரை குறித்த சட்ட மூலத்தை அமுல்படுத்துவதை, இடைநிறுத்தம் செய்யுமாறும் மத்திய அரசிற்கு பரிந்துரை செய்திருந்தது.

வடக்கு மாகாணத்தில் ரோலர் மீன்பிடி முறைமையை தடை செய்யுமாறு காலம் காலமாக நாங்கள் கோரி வருகின்றோம். போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றோம். முதலில் எமது பிரதேசங்களில் நடைபெறும் சட்டவிரோத மீன்பிடி முறைமையை தடை செய்தால் தான் இந்திய மீனவர்களது சட்ட விரோத மீன்பிடி முறைமையை தடை செய்ய முடியும்.

ஆனால் வடக்கு மாகாண சபை இது தொடர்பில் மீனவர் சங்கங்களுடன் கலந்துரையாடாமல் தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளது. வடக்கு மாகாண சபையின் இந்த முடிவு ரோலர் படகு தொழிலை ஊக்குவிப்பது போன்றுள்ளது. இதனால் இந்திய மீனவர்களது சட்ட விரோத மீன்பிடியும் அதிகரிப்பதோடு எமது கடல் வளங்களும் அழிவடையும் நிலை ஏற்படும்.

வடக்கில் உள்ள ஆயிரத்து 500 ரோலர் தொழில் செய்யும் குடும்பங்களின் நிலையை பார்க்கும் வடக்கு மாகாண சபை யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் உள்ள 25 ஆயிரம் மீனவ குடும்பங்களின் நிலையை ஏன் பார்க்கவில்லை? இதேபோல் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் எத்தனை ஆயிரம் மீனவர்கள் உள்ளனர்? இவர்களது தொழில் ரோலர் முறை தொழிலினால் தினம் தினம் அழிவடைந்து செல்கின்றது.

தற்போது இந்திய அரசும் ரோலர் படகு தொழிலை தடைசெய்ய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் இந்த பரிந்துரை எல்லாவற்றையும் குழப்பும் செயலாகும். உடனடியாக குறித்த சட்ட மூலத்திற்கு வடக்கு மாகாண சபை தனது ஆதரவினை வழங்கி மீனவர் சமூகத்தின் அழிவை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். மேலும் ரோலர் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு மாற்று வழியும் வழங்கப்பட வேண் டும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார். (இ-4)

## அழுத்தும் நிஜங்கள் நூல் அறிமுக விழா

கலாபூஷணம் நடராசா இராமநாதனின் அழுத்தும் நிஜங்கள் சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா அல்வாய் வடக்கு குச்சம் ஞான வைரவர் தேவஸ்தான முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு ஓய்வுநிலை அதிபர் கி.கணேசன் தலைமை தாங்கவுள்ளார். சாகித்தியரத்னா தெணியான் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்விற்கு சு.குணேஸ்வரன், கொற்றை பி.கிருஷ்ணானந்தன், வே. அகிலன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ




## 'வாழ்க்கைப் பாதை; அதுவே கீதை'

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு யாழ்.சின்மயா மிஷன் நடத்தும் ஞான யக்ஞம் வாழ்க்கைப் பாதை, அதுவே கீதை என்னும் நிகழ்ச்சி நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கை, இல. 9 இல் சின்மயா ஞான வேல் ஆச்சிரமத்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 07. 05.2016 சனிக்கிழமை வரை தின மும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை நடைபெறவுள்ளது.

மேலும் யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா, தியானப் பயிற்சிவகுப்புக்களையும் நடத்தவுள்ளார்.

இப் பயிற்சியும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 7 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி தினமும் காலை 6.30 முதல் 7.30 மணிவரை நடைபெறும் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவர்கள் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும் அனுமதிகள் யாவும் இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ். பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களின் ஆசிய பசுபிக், அவுஸ்திரேலிய பிராந்திய பொறுப்பாளரும் அபுமலை இராஜஸ்தானில் உள்ள தலைமையகத்தின் நல்லுலகிற்கான கல்லூரியின் நிர்வாகப் பணிப்பாளருமான இராஜயோகினி டாக்டர் நிர்மலா கஜாரியாவை யாழ்ப்பாணத்தில் அண்மையில் சந்தித்த போது...

## புதிய யோகா பயிற்சி நெறிகள் நல்லூரில் ஞாயிறன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக அரங்க நிறுவனம் நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு நாளைஞாயிற்றுக்கிழமைமாலை 4.30மணிக்கு நிறுவன இயக்குநர் எஸ்.உமாசுதன்தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் ஆரோக்கியத்திற்கான யோகா என்னும் விடயம் பற்றியும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவியன் சத்தியசீலன் யோகா சிகிச்சை என்னும் தொனிப் பொருளில் விசேட விரிவுரைகளை வழங்குவார்.

பயிற்சிநெறி-I காலை 6மணி தொடக்கம் 7மணி வரையும் பயிற்சி நெறி-II மாலை 5மணி தொடக்கம் 6 மணிவரையும் மூன்றாவது பயிற்சிநெறி இரவு 6மணி தொடக்கம் 7 மணிவரையும் மூன்று பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

மருத்துவர்கள் மற்றும் யோகா வல்லுநர்களால் இணங்காணப்பட்ட சிறப்பிற்குரிய ஆசனம், பிராணாயாமம்,தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவமுள்ள ஆசானால் பதஞ்சலி யோக முறையில் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடு சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும்.ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயனடைய முடியும். (இ

## அலங்கார உற்சவம்

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தின் துர்முகி வருஷ அலங்கார உற்சவ விஞ்ஞாபனம், இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் நடை பெற்று எதிர்வரும் 3 ஆம் திகதி நிறைவு பெறும்.

மேலும் உற்சவ காலங்களில் தினமும் உபயகாரர்களினதும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அன்பர்களினதும் அனுசரணையுடன் மகேஸ்வர பூஜையும் நடை பெறும். (இ

## நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனம்,சமாதானமும் நல்லிணக்கத்திற்குமான ஒப்புரவு செயற்பாட்டில் நல்லாட்சியை நிலைநாட்டுதல் நிகழ்ச்சித்திட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாதகல் காந்திஜி மண்டபத்தில் மு.ப 10 தொடக்கம் பி.ப 5 மணிவரை நடை பெறும். (இ

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.


காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இரண்டாம் அரையாண்டிற்கானபின்வரும்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு அவற்றுக்கான பதிவுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளாவன, சமையலாளர்,வெதுப்பாளர், அறைபராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம்பரிமாறுபவர்,காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்),இருசக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர்,அலுமினியம் பொருத்துநர்,வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர்,பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும். இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம்,1ஆம் மாடி,வீரசிங்கம் மண்டபம்,இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) எதிர்வரும் 10.05.2016 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என இ.தொ.அ.உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ

# கபடத்தனமான அரசியல் நாடகத்தை ஈ.பி.டி.பி.ஒருபோதும் செய்யவில்லை

## செயலாளர் டக்ளஸ் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை உசுப்பேற்றி வாக்குகளை அபகரிக்கும் கபடத்தனமான அரசியல் நாடகத்தை ஈ.பி.டி.பி. ஒருபோதும் செய்யவில்லை என அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

கேள்வி: உங்கள் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான சந்திரகுமார் திடீரென கட்சியைவிட்டு விலகிச் சென்றுள்ளார். விலகளின் பின்னர் சந்திரகுமார் தரப்பு நிறைய அறிக்கைகளை விடுகிறது. நீங்கள் கனத்த மௌனத்தை பேணுகின்றீர்கள். இதுபற்றி கட்சியின் நிலைப்பாடு என்ன?

பதில்: ஒரு புகையிரதப் பயணம்போல் அரசியல் கட்சி ஒன்றின் பயணத்திலும்பலர் வருவார்கள், போவார்கள். ஒரு ஜனநாயகக் கட்சியில் இவையெல்லாம் சகஜமானவைதான். புகையிரதம் அதன் இலக்கை நோக்கி பயணத்தை தொடர்வதைப் போல், கட்சியின் பயணமும் அதன் இலக்கு நோக்கி தொடரும்.

அவர் முன்னெடுத்த கட்சிப் பணிகள் தொடர்பாகவும், அவரது முயற்சிகள் தொடர்பாகவும், நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காதது தொடர்பாகவும் கட்சிக்குள் எழுந்திருந்த கேள்விகள் தொடர்பாகவும் அவர் தன்னை விமர்சனம், சுயவிமர்சனத்திற்கு உட்படுத்தியிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

கேள்வி: சந்திரகுமார் கிளிநொச்சியில் செல்வாக்கான ஈ.பி.டி.பி பிரமுகர். அவரது விலகல் அங்கு ஈ.பி.டி.பிக்கு சிக்கலை ஏற்படுத்துமா?

பதில்: அப்படி நான் கருதவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் நாம் வரையறுத்துக்கொண்ட எமது கட்சியின் இணக்க அரசியல் வழிமுறையில் நின்று இதுவரை நாம் பாரிய பணிகளை ஆற்றிவந்திருக்கின்றோம். யுத்தத்தால் அதிகம் சிதைவடைந்த பிரதேசங்களில் கிளிநொச்சியும் ஒன்று என்பதால் அங்கு வாழும் மக்களுக்கு பணிகளையாற்றுவதற்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் அங்கு தேவை என்பதற்காகவே எமது கட்சி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரை நான் தெரிவுசெய்து அங்கு அனுப்பியிருந்தேன். அவருடைய விலகலுக்கு பிறகும் கூட எமது கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் தலைமையில் கட்சிப் பணிகள் வழமை போல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கேள்வி: விலகளிற்கு சந்திரகுமார் சொன்ன பிரதான காரணம் ஈ.பி.டி.பியின் அரசியலை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பது. அண்மைய தேர்தல்களில் உங்கள் கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு தென்படுகிறதல்லவா? இது சந்திரகுமாரின் குற்றச்சாட்டில் உண்மையுள்ளதென ஆகாதா?

பதில்: தமிழ் மக்களை உசுப்பேற்றி வாக்குகளை அபகரிக்கும் கபடத்தனமான அரசியல் நாடகத்தை ஈ.பி.டி.பி ஒருபோதும் செய்யவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையும், எமது மக்களை மேலும் அழிவுகளுக்குள் தள்ளிவிடாமல் அவர்களை பாதுகாத்து கௌரவமாக வாழவைப்பதற்கும், தவறான அணுகுமுறைகளால் `அழிந்துபோன எமது தாயகத்தை மீண்டும் அபிவிருத்தியால் கட்டியெழுப்புவதற்குமான வழிமுறைகளையே எமது அரசியலாக முன்னெடுத்து வருகின்றோம்.

எமது அரசியலை விமர்சிப்பவர்கள், தமிழ் மக்களை பாதுகாக்கவும் இல்லை, அழிவுகளைத் தடுத்து நிறுத்தவும் இல்லை. அரசியல் உரிமையைப் பெற்றுத்தரவும் இல்லை, அதுமட்டுமல்ல 2000ஆம் ஆண்டு தமிழ் மக்கள் சார்பில் ஈ.பி.டி.பி முன்வைத்த பரிந்துரைகளையும் ஏற்றுக் கொண்டு சந்திரிகா அம்மையார் கொண்டுவந்த தீர்வுப் பொதியை எதிர்க்கட்சியுடன் சேர்ந்து எரித்தும் எதிர்த்தும் குழப்பியடித்தவர்களும் இவர்கள்தான். இவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க ஆக்கபூர்வமான முயற்சிகளிலும் ஈடுபடவும் இல்லையென்பதும் வெளிப்படையானது. ஈ.பி.டி.பியின் தீர்க்கதரிசனமான அரசியல் பாதையிலேயே இன்று கூட்டமைப்பும் வந்து நிற்கின்றது. நாங்கள் மத்திய அரசுகளுடன் முன்னெடுத்த இணக்க அரசியல் போக்கையே இன்று கூட்டமைப்பும் பின்பற்றியிருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் அரசுகளுடன் இணக்க அரசியல் செய்தது மக்களுக்கு பணியாற்றுவதற்காக, கூட்டமைப்பினர் இன்று இணக்க அரசியல் நடத்துவது, தமது தனிநபர் பெருமைகளுக்காகவும், பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவுமே இணக்க அரசியலை செய்கின்றார்களே தவிர, மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் அவர்கள் முயற்சிக்கவில்லை. இவற்றைப் போல் பல உதாரணங்களை நாம் தீர்க்க தரிசனமாக கூறியதையும் அதுவே பின்னர் நடந்தவையையும் கூற முடியும். எமது வழிமுறையை ஏற்று இணக்க அரசியலுக்கு வந்திருப்பவர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைகளை இன்னும் புரிந்துகொள்ளவில்லை. நாம் கொண்டிருக்கும் கொள்கைகளும், அதற்கான திட்டங்களும் மக்களிடம் முழுமையாக சென்றடையவில்லை என்பது ஒரு பாரிய குறைபாடு. (இ-5)

# 200 அடி பள்ளத்திற்குள் கவிழ்ந்து வான் விபத்து

## சிறு காயங்களுடன் ஒருவர் மீட்பு



(கொழும்பு)

வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பகுதியிலிருந்து அக்கரப்பத்தனை பகுதியை நோக்கி சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகி யுள்ளது.

வட்டவளை டீ கார்டன் பகுதியில் 200 அடி பள்ளத் தில் வீழ்ந்தே குறித்த வான் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியள வில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக வட்ட வளை பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

வானில் இருவர் பயணித்துள்ளதாகவும், சாரதி பாய்ந்து உயிர்தப்பியுள்ளதாகவும் மற்றொருவர் சிறு காயங்களுக்குள்ளாகி வட்டவளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித் தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (இ-5)


யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

**எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.**

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம்.

ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

**(021) 222 8117 / 077 900 8776**

(மு.ப. 9.00 - பி.ப. 1.00)

Sri Lanka Sumithrayo, Jaffna (Probationary Branch)

*(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*

*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*



**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 49செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L/சொந்த தொழில்
தொ.இ: B/5785

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 12
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, BCT/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/5786

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 24
உயரம்: 5'6"
தகைமை/தொழில்;BA/ஆசிரியர்
தொ.இ: B/5790

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 86சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'8'
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: B/5793

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/5063

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 67சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BFA
தொ.இ: G/5066

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 32செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/5070

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 30சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/5072

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



முல்லைத்தீவு அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரைப்பௌர்ணமி உற்சவம் நேற்று முன்தினம் ஆலயத்தில் இடம்பெற்றது. அடியார்கள் காவடி, தூக்குக்காவடி, தீக்காவடி, பால்செம்பு உள்ளிட்ட பல நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக வந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். இதேவேளை எம்பெருமான் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பரத்தில் வெளி வீதிவலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பெண்ணொருவருக்கு 1,500 ரூ. அபராதம்

(மல்லாவி)

மன்னார் நீதவான் நீதிமன்றினுள் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை சுவிங்கம் மென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தின் கடமையில் இருந்த பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் பெண்ணொருவருக்கு ஆயிரத்து 500 ரூபா பணம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றில் வழக்கொன்றிற்காக வந்திருந்த பெண்ணொருவர் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை சுவிங்கம் மென்று கொண்டிருந்தைக் கண்ட நீதிமன்ற பொலிஸார் பிரஸ்தாப நபருக்கு எதிராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் வழக்கொன்றை தாக்கல் செய்து நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட குறித்த பெண்ணுக்கு மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவான் ஆசீர்வாதம் இரேசியன் அலெக்ஸ்ராஜா ஆயிரத்து 500 ரூபா பணத்தை அபராதமாக விதித்தார். (2-15)

# 32 கிலோகிராம் கஞ்சா பொதிகள் தேடுதல் நடவடிக்கையில் சிக்கின

## சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(மல்லாவி)

தலைமன்னார் மேற்கு சிலுவை நகர் காட்டுப்பகுதியில் 32 கிலோ கேரளா கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை இரவு தலைமன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து மன்னார் விசேட அதிரடிப்படையினர் மன்னார், பொலிஸார் ஆகியோர் இணைந்து தலைமன்னார் மேற்குப் பகுதியிலுள்ள சிலுவை நகர் காட்டுப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இதன்போது தலா 10 கிலோ கிராம் கொண்ட மூன்று பொதிகளையும் இரண்டு கிலோ கிராம் கொண்ட ஒரு பொதியையும் உரப்பையொன்றில் இட்டு கட்டிய நிலையில் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையின் போது சென்னையில் வசித்து வருகின்ற உறவினர் ஒருவரின் மூலமாக இவை தனக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இவற்றை மன்னார் பகுதியில் உள்ள ஒருவருக்கு தான் வழங்க இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இவரிடம் விசாரணைகளை மன்னார் பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (2-3-15-28)

# கட்டடங்கள் திறக்கப்படுமா?



(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பல கட்டடங்கள் இன்னமும் திறக்கப்படாது மக்களின் பயன்பாட்டிற்கு விடப்படாது உள்ளன. எனவே இவற்றை விரைவில் திறந்து மக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-302)

# 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவை

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் 46 கிராம சேவகர் பிரிவில் மீள்குடியேறியுள்ள 13 ஆயிரத்து 331 குடும்பங்களில் 2 ஆயிரத்து 938 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டியுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களில் வாழ்வாதார உதவிகள் 7 ஆயிரத்து 610 குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள நிலையில் இன்னமும் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-3-15)

# மோட்டார் சைக்கிளில் சென்ற யுவதியின் சங்கிலி அறுப்பு

(குருமன்காடு)

மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதி ஒருவரின் சங்கிலி மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த இளைஞர்களினால் அறுத்துச் செல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 20 ஆம் திகதி இரவு 7 மணியளவில் வவுனியா கோவில்குளம், முதலாம் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா நகரில் உள்ள அரச வங்கி ஒன்றில் பணியாற்றும் குறித்த யுவதி வேலை முடிந்து தனது வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின்னால் வந்த இளைஞர்கள் குறித்த யுவதி அணிந்திருந்த ஒன்றரைப்பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் யுவதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்ற போதும் முறைப்பாட்டினை பொலிஸார் பதிவு செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (2-3-250)




# வெடிபொருட்கள் அகற்றப்படாமையால் குடும்பங்கள் மீள்குடியேறுவதற்கு தாமதம்

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் இதுவரை வெடிபொருட்கள் அகற்றப்படாமையினால் மக்கள் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகூடிய வெடிபொருள் ஆபத்தான பகுதியாக காணப்படும் மேற்படி பகுதிகளில் கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பணிகள் நிறைவு பெறாமையினாலும் வெடிபொருட்கள் அகற்றப்படாமையினாலும் இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியேறுவதற்கு விண்ணப்பித்துள்ள 257 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது.

இப்பகுதியில் வெடிபொருள் அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தினர் கருத்து தெரிவிக்கும் போது அதிக யுத்தம் இடம்பெற்ற பகுதியாக காணப்படும் இப்பகுதியில் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புக்களும் பரஸ்பரம் வெடிபொருட்களையும் நிலக்கண்ணி வெடிகளையும் புதைத்துள்ளனர்.

இவை மிகக் கூடிய உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் அபாயகரமான பகுதியாக காணப்படுகின்றது.

இதனால் வெடிபொருட்களை அகற்றுவதில் தாமதங்கள் காணப்படுகின்றன.

இப்பகுதிகளில் பணிகளை முன்னெடுக்கும் போது உயிரிழப்புக்கள் கூட ஏற்பட்டுள்ளன. தற்போது நவீன கருவிகள் மூலம் இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீள்குடியமர்விற்காக விண்ணப்பித்துள்ள 257 குடும்பங்கள் வெளிமாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிளிலும் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# மன்னாரில் இரத்ததான நிகழ்வு



(மன்னார்)

மே-1சர்வதேசதொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தலைவர் டபிள்யூ ஏ.டி.விமலரத்னவின் ஆலோசனைக்கு அமைவாக மன்னார் மாவட்ட ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் எஸ்.எச்.எம். இல்ஹாம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.


இரத்ததான நிகழ்வில் ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற அங்கத்தவர்கள் இரத்ததானம் செய்தனர்.

குறித்த நிகழ்வில் மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பீரிஸ் கலந்து கொண்டிருந்தார். (2-3)

# ஓமந்தையில் இரண்டு மாதங்களில் மூன்று மரக்கடத்தல்கள் முறியடிப்பு

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு





வவுனியா, ஓமந்தையில் கடந்த இரு மாதங்களில் மூன்று மரக்கடத்தல் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். சமன்குமார தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் இடம்பெறுவரும் மரக்கடத்தல்கள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 7 ஆம் திகதி டாட்டா வாகனம் ஒன்றில் கடத்தப்பட்ட 11 முதிரை மரக்குற்றிகள் ஓமந்தை, கொம்பு வைத்தகுளம் பகுதியில் வைத்து பிடிக்கப்பட்டதுடன், அவ்வாகனத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டார். குறித்த நபருக்கு எதிராக வவுனியா நீதிமன்றின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த 23 ஆம் திகதி டிப்பர் வாகனம் ஒன்றில் கடத்தப்பட்ட 23 முதிரை மரக்குற்றிகள் ஓமந்தை, வண்ணாங்குளம் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டன. இம் மரக் கடத்தலுடன் தொடர்புடைய 3 பேர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஓமந்தை, கோவில் குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 52 பாலை மரத் திராந்திகளும் மீட்கப்பட்டுள்ளன. தற்போது பொலிஸாரின் நடவடிக்கை காரணமாக ஓமந்தையில் மரக் கடத்தல்நடவடிக்கைகள்கட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(2-250)

# தர்மபுரம் கிழக்கு மக்களுக்கு காணி தொடர்பான பதிவுகள்

## நேற்று நடைபெற்றன

(சோலைநகர்)

கண்டாவளைபிரதேசசெயலகத்தினால் கிளிநொச்சி தர்மபுரம் கிழக்கில் சுமார் 250 இற்கு மேற்பட்ட மக்களுக்கு காணி தொடர்பான பதிவுகள் நேற்று நடைபெற்றதோடு காணிக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இப் பதிவுகள் கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன் தலைமையில் இடம்பெற்றன.

இதில் கண்டாவளை பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்பின் பிரநிதிகள் எனப்பலரும் பங்கேற்றனர்.

கிளிநொச்சி தர்மபுரம் கிழக்கு பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு கட்டம் கட்டமாக இக் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தர்மபுரம் கிழக்கு கிராம சேவை உத்தியோகத்தர் த.விஜயசாந்தி தெரிவித்துள்ளார். (2-309)

# முச்சக்கரவண்டிகள் மோதி விபத்து; சாரதிகள் உள்ளிட்ட மூவர் படுகாயம்!



இரண்டு முச்சக்கர வண்டிகள் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதிகள் உள்ளிட்ட மூவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று காலை 7.45 மணியளவில் முல்லைத்தீவு கொக்காவிலிலுள்ள 238 ஆவது கிலோ மீற்றர் மைல்கல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியினை பின்னால் சென்ற முச்சக்கரவண்டி முந்திச் செல்ல முற்பட்ட போதே இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் இரண்டு முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (2-28)

# வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு சென்ற மகள் வீடு திரும்பவில்லை

## வவுனியா பொலிஸ் நிலையத்தில் தாயார் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரியும் மகள் வேலைக்குச் செல்வதாக கூறி விட்டு வீட்டிலிருந்து சென்றவர் இது வரை வீடு திரும்ப வில்லையென வவு னியா பொலிஸ் நிலையத்தில் தாயார் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

பிரஸ்தாப யுவதி 19 வயதுடையவர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் வசித்து வந்த குறித்த யுவதி கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் தனியார் நிறுவனத்திற்கு வேலைக்குச் செல்வதாக கூறிவிட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் தாயார் முறைபொன்றை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யுவதி தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும் அந் நிறுவனத்திற்கு வேலைக்குச் செல்வதாக கூறிவிட்டுச் சென்றதாகவும் அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# பொருத்து வீடுகளைப் பெற்றுக்கொள்ள வவுனியாவில் 9,000 பேர் விண்ணப்பம்



பொருத்து வீடுகளைப் பெறுவதற்கு வவுனியாவில் ஒன்பதாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக வவுனியா மாவட்ட திணைக்கள புள்ளி விபரத்ததகவலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழான பொருத்து வீடுகளைப் பெறுவதற்கு வவுனியாவில் ஒன்பதாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக மாவட்ட திணைக்கள புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் காரணமாக இடம பெயர்ந்த மற்றும் மீள் குடியேறியுள்ள நிலையில் உளள ஒன்பதாயிரம் பேரே வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். இருப்பினும் இவ் வீட்டுத்திட்டம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து வீடு தேவையான பலர் இன்னும் விண்ணப்பிக்காத நிலையிலும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-250)




# பாதுகாப்பற்ற புகையிரத கடவையை

# கடக்க முற்பட்ட வேளை குடும்பஸ்தர் புகையிரத்துடன் மோதுண்டு படுகாயம்



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இன்ரசிற்றி புகையிரதத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்திய சாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் பரந்தன் உமையாள்புரம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்ட வேளை இடம் பெற்றது.

இதில் உமையாள்புரம் பகுதியைச் சேர்ந்த அற்புதநாதன் அகிலன் (வயது-36) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இன்ரசிற்றி புகையிரதத்துடன் மேற்படி பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற கடவையை சவாரி மோட்டார் சைக்கிள் கடக்க முற்பட்ட வேளையிலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது.

குறித்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையை 30இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துவதோடு கிளிநொச்சியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையினாலேயே பெரும்பாலான புகையிரத விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தககது. (2-281)

# முள்ளிவாய்க்கால் பிள்ளையார் ஆலய

# முள்ளிவாய்க்கால் பிள்ளையார் ஆலய குருக்கள் வீட்டுத் திருட்டு முறியடிப்பு

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிள்ளளையார் ஆலயக்குருக்கள் சி.கணேசசர்மாவின் வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு திருடர்கள் திருட முயற்சித்துள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குருக்களின் வீடு ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு முதிரைக்கதவும் கொத்தி உடைக்கப்பட்டுள்ளது.


உடைக்கப்பட்ட கதவை குருக்களும் இரு புதல்வர்களும் இறுக்கத்தள்ளிப் பிடித்துக்கொண்டு அயலவர்களை தொலைபேசி ஊடாக அழைத்துள்ளனர்.

அச்சமயம் உடைக்கப்பட்ட கதவின் ஊடாக திருடர்கள் கோடரியால் எறிந்து குருக்களை தாக்கியுள்ளனர்.

பின்னர் அவ்விடத்திற்கு அயலவர்கள் ஒன்று கூடியதையடுத்து உடனடியாக திருடர்கள் இரும்புக் கம்பிகளால் உயர்மின் கம்பிகளுக்கு எறிந்து ஒன்றுடன் ஒன்றை முட்டவைத்து மின் தடையை எற்படுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்(2-28)

# உலக புவி தினத்தையொட்டி — பொதுநோக்கு மண்டபங்களில் மரநடுகை



நாடளாவிய ரீதியில் நேற்றையதினம் உலக புவி தினம் கொண்டாடப்பட்டது.

இதற்கமைய கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களிலும் இத்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இத்தினத்தையொட்டி மரநடுகை இடம்பெற்றது.

இம் மரநடுகையானது நேற்று முற்பகல் 10 மணியளவில் கண்டாவளை பொது நோக்கு மண்டபத்திலும் ஆனையிறவு பொது நோக்கு மண்டபத்திலும் முன்னெடுக்கப்பட்டது.



இந்த மரங்களை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் இணைந்து மேற் கொண்டனர். (2)

# இலங்கை கல்வி நிர்வாக சேவை SLEAS போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - பொது அறிவு

1.இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கியமான கல்விச் சீர்திருத்தங்கள் நிகழ்ந்த காலப் பகுதிகளாவன.

(1) 1905-1907,1912-1915,1930-1933,1983-1984

(2)1922-1923,1931-1933,1958-1960,1970-1971

(3)1960-1961,1967-1968,1977-1978,2005-2006

(4)1943-1947,1972-1976,1981-1984,1997-1998

2.சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட தேசிய நிறுவகம்

(1)சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களம்

(2)சிறுவர் செயலகம்

(3)சிறுவர் நீதிமன்றம்

(4)தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

3.நிறுவனத்தில் நோக்கு என்பதனால் கருதப்படுவது

(1)எதிர்காலத்தில் நிறுவனம் அடைய வேண்டிய உன்னத நிலைமை

(2)நிறுவனத்தின் பணி நடவடிக்கைகள் திட்டம்

(3)பொது மக்கள் நிறுவனம் பற்றிக் காணும் பிரதிமை

(4)நிறுவனத்தின் அடிப்படைக் கடமைப் பணிகள்.

4.சர்வதேச எழுத்தறிவு தினத்துக்குரித்தான மாதமும் திகதியும்

(1) மார்ச் 8 (2) ஏப்ரல் 22 (3)செப்டெம்பர் 8 (4)ஒக்டோபர் 24

5.விஞ்ஞான ரீதியில் சிந்திப்பதற்கு பிள்ளைகளுக்கு பழக்குவதற்கு முடியுமாக அமைவது.

(1)விஞ்ஞானிகளின் சுயசரிதை அடங்கிய தகவல்களைப் பிள்ளை அறிவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளல்

(2)கற்றல் கற்பித்தல் முறையில் அவதானிப்பு ,தேடியறிதல்,செய்து பார்த்தல் என்பவற்றை உள்ளடக்குதல்

(3)இயலுமானவரை விஞ்ஞானபாடங்களை கற்பித்தல்

(4)நவீன தொழில் நுட்ப பாடங்களைக் கற்பித்தல்

6.உள்ளடக்கக் கல்வி என்பதனால் கருதப்படுவது

(1) கலைத்திட்டத்தில் உள்ளடங்கும் அனைத்துப் பாடங்களுக்கிடையிலும் இடைத் தொடர்புகளை ஏற்படுத்தல்

(2) பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன கல்வி முறைகள் பற்றிக் கற்றல்

(3) விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களும் அடங்கலாக அனைத்து மாணவர்களையும் கல்விச் செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்தல்

(4) கல்வியின் விசேட பிரிவுகளிடையே இடைத்தொடர்புகளை ஏற்படுத்தல்

7.கல்விக்காக கணனியைப் பயன்படுத்தல் என்பதால் கருதப்படுவது

(1)கணனிக் கல்விக்காக தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்

(2)கற்றல் கருவியாகக் கணனியைப் பயன்படுத்தல்

(3)கல்வி ஆய்வு நடவடிக்கைகளுக்காக கணனியைப் பயன்படுத்தல்

(4)இணையத்தளத்தைப் பயன்படுத்தி கற்றல்.

8.தற்போதைய ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் ஏனைய ஐக்கிய அமெரிக்க நாடுகளினாலும் ரஷ்யா மீது தடைகள் விதிக்கப்படுவதற்கான பிரதான காரணம் என்ன?

9.சமூக சமத்துவம் மற்றும் நியாயத்தன்மை தொடர்பாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முதல் ஆவணம் எது?

10.இந்தியக் குடியரசினால் பிரகடனப்படுத்திய புதிய அரசு எது?

11.தற்போது ஆசியாவிலே குறைந்தளவு மக்கள் தொகை விருத்தியைக் கொண்டுள்ள நாடு எது?

12.யுனெஸ்கோ (UNESCO) ஒழுங்கமைப்பினது முழுப் பெயரைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதுக.

13.நீலக்கிரகம் என்ற பெயரால் அறியப்படுவது எந்தக் கிரகமாகும்?

14.ஒரு நனோ மீற்றர் என்பது மில்லி மீற்றர் ஒன்றினது எத்தனை பங்காகும்?

15.மனித உடலிலே இன்சுலினை சுரக்கின்ற சுரப்பி யாது?

16.சூரியனின் மேற்பரப்பினது வெப்ப நிலை கெல்வின் பாகையில் எவ்வளவு?

17.முழு இலங்கையினதும் மற்றும் ஒவ்வொரு மாகாணத்தினதும் செல்வந்த நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இணைச் சுட்டியாக 2008 ஆம் ஆண்டிலே இலங்கை செல்வந்தச் சுட்டி (Sri Lanka Prosperity Index) எந்த நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டது?

18.இலங்கையின் புதிய கண்டு பிடிப்புக்களின் ஆணைக் குழு எந்த அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது?

19.கிறீசில் அமைந்துள்ள பாதினோன் தேவாலயத்தின் மாதிரிக் கேற்ப எமது நாட்டில் அமையப்பெற்றுள்ள பிரபல்யமான கட்டடம் எது?

20.தற்போது இலங்கையின் பணவீக்க மட்டத்தினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டி யாது?

21.இலங்கை சமுர்த்தி அதிகார சபை, இலங்கையின் தென் பகுதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கையின் மத்திய அதிகார சபை என்பன ஒன்றிணைக்கப்பட்டு அண் மையில் உருவாக்கப்பட்ட திணைக்களம் எது?

22.இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய சட்டதிட்டத்திற்கேற்ப ஒவ்வொரு அனுமதி பெற்ற வர்த்தக வங்கியினாலும் பேணப்பட வேண்டிய குறைந்த மூலதன ஈட்ட விகிதம் (Minimum Capital Adequacy Ratio) எவ்வளவு?

23.இலங்கைப் பிரஜைகளின் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளைப் பரிசீலிப்பதற்காக சட்ட பூர்வமான அதிகாரத்தைக் கொண்டுள்ள இந் நாட்டின் நீதிமன்றம் யாது?

24. 2014 ஆம் ஆண்டிலே கிளாஸ்கோவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை எந்தப் போட்டி நிகழ்ச்சியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது?

25.இலங்கையிலே ஊழியர் ஆளணியின் பங்குபற்றும் விகிதத்தைக் கணக்கிடுவதற்காக தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நபர்களின் வயதுத் தொகுதி யாது?

26.விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இந் நாட்டினது முதலாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் எந்த வருடத்தில் நடைபெற்றது?

27.நான்கு தடவைகளாக இந் நாட்டின் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது இலங்கை அரசியல்வாதி யார்?

28.இலங்கையினுள் சட்டத்துறை தொழிலில் ஈடுபடுவதற்கு எந்த நிறுவனத்தில் கட்டாயமாகப் பதிவு செய்தல் வேண்டும்?

29.புதிய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ரே விஜேவர்த்தன ஞாபகார்த்த உற்பத்தியாளர் விருதி விழாவின் போது சிறந்த புதிய உற்பத்தியாளருக்கான விருதை வெற்றி கொண்டவர் யார்?

30.இலங்கை பொலிஸ் திணைக்களம் எந்த அமைச்சின் கீழ் உள்ளது?

31.இலங்கைக்குரிய மிகப் பெரிய தீவு எது?

.32.2015 ஆம் ஆண்டின் கான்ஸ் திரைப்பட விழாவிலே மிகப் பெரிய கௌரவத்தைப் பெற்ற இலங்கைத் தமிழ் அகதிகள் மூவரின் கதையைக் கொண்ட பிரான்ஸ்சிய திரைப்படத் தின் பெயர் யாது?

33.உலகத் தொடர்பாடலில் புரட்சி ஒன்று ஏற்பட மூலகர்த்தாவான இந் நாட்டில் வசித்த எதிர்வு கூறலியலாளர் யார்?

34.தற்போதைய இலங்கை பாராளுமன்றக் கூட்டமொன்றில் இருக்க வேண்டிய பாராளு மன்ற உறுப்பினர்களின் குறை நிறைவெண் எவ்வளவு?

35.மரண சாதனங்கள் மற்றும் அட்டோனி தத்துவம் தொடர்பான ஆவணங்களைப் பொறுப் பெடுப்பதற்கு அதிகாரம் கொண்ட அரசாங்கத் திணைக்களம் எது?

36.இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் பெருமளவு பரவியுள்ள அசாதாரண சிறுநீரக நோய்க்குக் காரணமாகக் கருதப்படும் முக்கிய விவசாய இரசாயனம் யாது?

37.உரோம இலக்கங்களில் பிரதிநிதித்துவப்பட முடியாத இலக்கம் எது?

38.ஐக்கிய அமெரிக்க அரசின் தேசிய பாதுகாப்பு முகவரினால் வகைப்படுத்தப்பட்டிருந்த இரகசியத் தகவல்களை உலகிற்கு வெளிப்படுத்திய கணனி வாண்மையாளர் யார்?

39. 7 பில்லியன் கனவுகள், ஒரு கோள், பேணத்தகு நுகர்வு எனும் தொனிப் பொருளின் கீழ் இந்த வருடத்தில் கொண்டாடப்பட்ட சர்வதேச தினம் யாது?

40.சமாதான அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்தும் ஆசிய நாடு எது?

.1.உக்ரேன் புரட்சியாளர்களுக்கு உதவி வழங்கியது என்ற நம்பிக்கையால் ஐக்கிய அமெ ரிக்க அரசுகளும் ஐரோப்பிய சங்கமும் அண்மையிலே பொருளாதார தடைகளை எந்த நாட்டுக்கு எதிராக விதித்தன?

42.சர்வதேச தேதிக் கோடு எந்த சமுத்திரத்தினூடாகச் செல்வதாகக் கருதப்படுகிறது?

43.உலக நீதி முறை செயற்றிட்ட சுட்டிக்கேற்ப தற்போது சட்டவாட்சியில் உயர்தரத்தை கொண்டுள்ள ஆசிய நாடு எது?

44.உலகிலேயே அதிக சனத்தொகையைக் கொண்ட நகரம் எது?

45.உலகிலேயே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்காக GSP வர்த்தக நன்மைகளை வழங்கும் வலய அமைப்பு யாது?

46.ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமைகளுக்கான தற்போதைய உயர் ஸ்தானிகர் யார்?

.47.கடதாசிகளை வெட்டியும் மடித்தும் வெவ்வேறு உருவங்களை உருவாக்கும் ஜப்பானிய கலையின் பெயர் என்ன?

48.ஒரே மாதத்தில் இரண்டாவது தடவை முழு நிலவு தோன்றும் போது அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

49.உரோமன் எண் முறையில் குறிக்க முடியாத எண் எது?

50.உரோமன் இலக்கத்தில் CD எனக் குறிப்பிடப்படும் எண்ணை அரபு இலக்கத்தில் எழுதுக.

51.ஊசிகளை உடலில் செலுத்தி பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் பாரம்பரிய சீன மருத்துவ முறை யாது?

52.அடிப்படை நிறங்கள் 03 எவை?

53. சுத்தமான தங்கம் எத்தனை கரட் ஆகும்?

54. விமானங்களில் பயன்படுத்தப்படும் கறுப்புப் பெட்டி எந்த நிறத்தில் காணப்படும்?

55.ஈ-மெயில்களை அனுப்புவதற்கும் பெறுவதற்கும் வசதியளிக்க MS OFFICE தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மென்பொருள் எது?

56.பாலின் ஒப்பு அடர்த்தியை அளக்க உதவும் மானியின் பெயர் என்ன?

57.ஒளி ஆண்டு என்ற அளவீட்டு அலகு எதனை அளப்பதற்கு பயன்படுத்தப்படுவதாகும்?

58.Abraham Maslow வின் தேவைக்கூம்பில் கடைசியில் பூர்த்தி செய்யப்படும் தேவை எது?

59.பலம், பலவீனம் சந்தர்ப்பங்கள் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய முகாமைத்துவ ஆய்வு முறை எது?


60.மாலைதீவினது அரசகரும மொழி யாது?

*(விடைகள் விரைவில்)*

**ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்**

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—89

# பயனுறு நுண்ணங்கிகளின் தொழில்நுட்பம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நாம் வாழும் பூமி அதிசயிக்கத்தக்க பல அம்சங்களைக் தன்னகத்தே கொண்டது. இதன் தோற்றுவாயை அதிலுள்ள விந்தைகளை விஞ்ஞானம் இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றது. இப் பூமியிலுள்ள உயிரினங்களில் முக்கியமாக நுண்ணங்கிகளின் செயற்பாடு அனைத்து உயிர்களுக்கும் அவசியம் தேவையானதாகும். குறிப்பாக தாவரங்களுக்கு நுண்ணங்கிகளின் செயற்பாடு அளப்பரியது. இது இயற்கை எமக்களித்த வரம் ஆகும். நுண்ணங்கிகளை நாம் தேவையான அளவில் சரியாக பயன்படுத்தினால் எமக்குத் தேவையான அனைத்து பயன்பாடுகளையும் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நுண்ணாங்கிகளின் உலகம் அளப்பரியது. அவற்றில் அதிகமானவை நன்மை தரும் உயிரினங்களாகும். இவற்றை நாம் முறைப்படி இனங்கண்டு கொணடால் அவற்றின் பயன்பாட்டினை முழுமையாக பெற்றுக்கொள்ளலாம். இந்த வகையில் உலகில் பல கண்டுபிடிப்புக்கள் நுண்ணங்கிகளை வைத்து பதிவிலிடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பயனுறு நுண்ணங்கிகளின் தொழில்நுட்பம் (Effective Microorganisms) உயிர்திசு உயிர்பசளைகள் (Biofilm biofertilizer), உயிர்க்கொல்லிகள் அல்லது உயிர்ப் பீடைநாசினிகள் (Biopesticides) என்பனவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். இவற்றினது கண்டுபிடிப்புக்கள் மனிதனது வாழ்வியலில் குறிப்பாக வேளாண்மையில் அதிகளவில் பயன்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில் பயனுறு நுண்ணங்கிகள் தொழில்நுட்பம் பற்றி தரப்பட்டுள்ளது.

பயனுறு நுண்ணங்கிகள் தொழில்நுட்பத்தில் இயற்கையாக உள்ள நன்மை தருகின்றதும் தாவரங்களில் நோயை உருவாக்காததுமான நுண்ணங்கிகள் பலவற்றை ஒன்றிணைத்து நுண்ணாங்கிகள்கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை ஜப்பானிலுள்ள பேராசிரியர் றெறுவோஹிகா உருவாக்கி அதனை வர்த்தக ரீதியில் உலக நாடுகளெங்கும் கிளைகள் அமைத்து அதனை அனைவரும் பெறும்படியாக உருவாக்கியிருக்கின்றார். இவற் றுக்கு உலக நாடுகளனைத்தும் தனி மதிப்பே உருவாக்கப்பட்டுள்ளது. இது இலக்ரிக் அமில பக்றீரியாக்கள்,மதுவம் மற்றும் ஒளித் தொகுப்பு பக்றீரியாக்கள் என பலவகை நுணணங்கிகளைக் கொணடுள்ள கலவையாகும். இந்த நுண்ணங்கிகளைப் பயன்படுத்துவதனால் எந்தவிதமான பக்கவிளைவுகளும் மனிதருக்கோ தாவரங்களுக்கோ இன்னும் விலங்குகளுக்கோ ஏற்படாது. ஏனெனில் இவை இயற்கையாகவே எமது மண்ணில் காணப்படுவதனாலும் மேலும் ஆய்வுகளின் படி எந்த விதமான பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாதமையும் நிரூபிக்கப்பட்டுள்ளது. திரவ ஊடகத்தில் தயாரிக்கப்படும் இந்த நுண்ணங்கிக்கலவை பொதுவாகவே சேதனக் கழிவுகளை விரைந்து உக்கவைத்து கூட்டுரமாக மாற்றிவிடக்கூடியது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் ,இந்த நுண்ணாங்கிக்கலவையின் மூலம் சிறந்த சூழல் வேர்த்தொகுதியைச் சுற்றி உருவாக்கப்படுகின்றது. நன்மை தருகின்ற நண்பர்களின் அரவணைப்பில் வளருகின்ற எதுவும் நன்றாகத்தான் இருக்கும் என்பதற்கு இங்கே தாவரங்களும் எடுத்துக் காட்டு. நன்மை தருகின்ற நுண்ணங்கிகள் வோத்தொகுதியைச் சுற்றிகாப்பரணை உருவாக்கி நோயாக்கிகளிலிருந்து பாதுகாப்பதோடு தாவரம் இலகுவில் ஊட்ட ச்சத்துக்களை அகத்துறிஞ்சுவதற்கு ஏதுவாக பெரிய மூலக்கூறுகளை உடைத்து சிறிய மூலக் கூறுகளாக ஆக்கிவிடுகின்றன. இந்த நுண்ணாங்கித் தாக்கத்தால் பிரந்தழியும் சேதன மூலக் கூறுகள் வேர்மயிர்களினால் அக்கத்துறிஞ்சப்படுகின்றன.

வளியை விட மண்ணில்நுணணங்கிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். மண் சிறந்ததொரு ஊடகமாகும். பலவிதமான உயிரினாங்களின் சங்கமமாக இருக்கின்றதாலும் அவற்றுக்கான போசாக்கினை வழங்குகின்றதாலும் மண்ணின் சிறப்பு உயர்வாகவே கருதப்படுகின்றது. மேலொட்டி மற்றும் ஒட்டுண்ணித் தாவரங்களைத் தவிர அனைத்து தாவரங்களுக்கும் மண் ஊடகம் அவசியமானதாகும். ஆனாலும் தற்போது தொழில்நுட்ப வளர்ச்சியில் நீர் ஊடகத்திலேயே ஊட்டச் சத்துக்களனைத்தையும் கலந்து (Hydrophonics) பயிர்கள் வளர்க்கப்படுகின்றன.

பயனுறு நுண்ணங்கிகள் தொழில்நுட்பம் ஜப்பான் நாட்டில் உருவாக்கப்பட்டாலும் இலங்கைக்கு அதனை தருவித்த பெருமை மறைந்த பேராசிரியர் ரவிசங்கக்காரவையே சாரும். இலங்கையில் இத்தொழில் நுட்பத்தின் பயன்பாட்டினை ஊக்குவித்த பெருமை இவருக்கே போய்ச் சேரும். இருபத்தேழு வருடங்களாக பேராசிரியர் றெறுவோ ஹிகாவுடன் இணைந்து பணியாற்றியதை அனைத்து நாடுகளும் நினைந்து கொண்ட போது எமக்கும் அது பெருமையாக இருக்கின்றது. சாந்தமான குணத்தையும் மண்ணியலில் அறிவாற்றலையுமுடைய பேராசிரியர் ரவிசங்கக்கார 2014 இல் எதிர்பாராத சிறு விபத்தில் மரணமானார். அவருடைய பங்களிப்பின் ஆழம் அவரின்மேல்கொணட பற்றினை ஏனைய உலக நாடுகளின் பயனுறு நுண்ணாங்கிகள் தொழில்நுட்பத்தின் இணைப்பாளர்கள் தெரிவித்த கருத்துக்களிலிருந்து அறியக்கிடைக்கின்றது. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிறந்த கல்விமானாக விளங்கிய இவரது பங்களிப்பு விவசாயதுறையில் அதீதமானதும் அவரின் மாணவர்களின் பங்களிப்புகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

நல்லதொரு தொழில்நுட்பம் எமக்குசேதன விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு கிடைத்துள்ளது. இந்த தொழில்நுட்பத்தின் பயன்பாடு அனைத்து விவசாய பெருமக்களுக்கும் கிடைக்க ஆவன செய்யவேண்டும். இந்த நுண்ணங்கிகளை எமது பிரசேதத்து மண்ணிலிருந்து பிரித்தெடுத்து வளர்த்து எமக்குரியதான நுணணங்கிகள் கலவையாக பயன்படுத்தமுடியும். தினமும் சேரும் சேதனக்கழிவுகளை விரைந்து கூட்டுரமாக தயாரிக்க வழிகிடைத்திருக்கின்றது. நுண்ணாங்கிகள் அனைத்திற்கும் சக்தியை கொடுக்கும் தன்மை அதிகமாகவே இருக்கின்றது. நுண்ணங்கிளின்றி இந்த மண் மரணித்து விட்டதாகவே கருதலாம். மண்ணிற்கு உயிர்கொடுக்கின்ற ,நன்மை தருகின்ற நுணணங்கிகளை பாதுகாத்து இன்னும் அதில் வளர்த்து மண்ணை வளமானதாக நாம் பேணிக் கொள்ளலாம். சூழலைமாசடையவைக்கின்ற நுண்ணாங்கிகளைத் தவிர்த்து நன்மை தருகின்றவற்றை தெரிந்தெடுத்து நாம் பெருக்கிக்கொள்ளலாம்.

இதன் மூலம் நாம் பயன்படுத்துகின்ற அசேதன,இரசாயனபசளைகள், பீடை நாசினிகள் என்பனவற்றின் பாவனையைக் குறைத்துக் கொள்ள முடியும்.

அத்துடன் தெருவோரமும் வீடுகளிலும் இன்னும் சந்தைகளிலும் சேரும் சேதனக் கழிவுகளை சிறந்த முறையில் கூட்டுரமாக மாற்றுவதற்கும் இந்த தொழில் நுட்பம் பயன்படும்.

எமது பகுதியிலுள்ள கழிவுகளை மீள்சுழற்சி செய்ய நன்மை தரும் நுண்ணாங்கிகளை பயன்படுத்த இனி வருங்காலத்தில் சிறந்த பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

அதற்கான காலம் கனிந்து வருகின்றது எனலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 86




மறைந்த பேராசிரியர் சங்கக்கார இத்தொழில்நுட்ப கண்டுபிடிப்பாளர் பேராசிரியர் றெறுவோ ஹிகாவுடன்

# ஐ.எஸ்ஸுக்கு எதிரான போருக்கு உதவுங்கள்

## வளைகுடா நாடுகளிடம் வல்லாதிக்க தலைவர் கோரிக்கை

(வோஷிங்டன்)

**உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிரான போருக்கு தொடர்ந்து உதவுமாறு வளைகுடா நாடுகளின் தலைவர்களிடம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கோரிக்கை விடுத்துள்ளார்.**



அமெரிக்காவுக்கும் வளைகுடா நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக நல்லுறவு நீடித்து வருகிறது. அதேநேரம் அணு ஆயுத உற்பத்தி.செய்வதாகக் கூறி ஈரானுடன் அமெரிக்கா மோதல் போக்கை கடைப்பிடித்து வந்தது. வளைகுடா நாடுகளும் ஈரானும் எதிரிகள்.

இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டன. இதையடுத்து, வளைகுடா நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் சிறிது விரிசல் ஏற்பட்டது. ஈரானுடன் அமெரிக்கா நெருங்கிப் பழகுவதாக வளைகுடா நாடுகள் குற்றம்சாட்டின.

இந்நிலையில்தான் இந்த ஆண்டுடன் பதவிக்காலம் முடிய உள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இறுதிப் பயணமாக கடந்த புதன் கிழமை சவுதி அரேபியாவுக்கு சென்றார்.

அங்கு சவுதி மன்னர் சல்மான் உள்ளிட்ட 6 வளைகுடா நாடுகளின் தலைவர்களை சந்தித்துப் பேசினார். அவர்களுடன் புகைப் படம் எடுத்துக் கொண்டார். இந்த சந்திப்பின்போது, ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புக்கு எதிரான போருக்கு தொடர்ந்து உதவுமாறு ஒபாமா கோரிக்கை முன்வைத்தார்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது. ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான இந்தப் போரில் வளைகுடா நாடுகளும் தங்களை இணைத்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கெதிராக பி-52 குண்டு வீச்சு விமானங்கள்

(வோஷிங்டன்)

ஈராக்கிலும், சிரியாவிலும் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளுக்கு எதிராக இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த பி-1 ரக குண்டு வீச்சு விமானங்களுக்குப் பதிலாக, பி-52 ரக குண்டு வீச்சு விமானங்களை அமெரிக்கா பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

1950 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட பி-52 குண்டு வீச்சு விமானங்கள், அமெரிக்கப் படைகளால் பயன்படுத்தப்படுகிறது.

நீண்ட தொலைவு பறந்து சென்று தாக்கி, பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த விமானங்கள், ஈராக்கிலும், சிரியாவிலும் துல்லியமான தாக்குதல்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இதுகுறித்து ராணுவ செய்தித் தொடர்பாளர் ஸ்டீவ் வாரென் தெரிவித்ததாவது,

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான வான்வழித் தாக்குதலில், பி-52 குண்டு வீச்சு விமானங்கள கடந்த திங்கட்கிழமை முதல் பயன்படுத்தப்படுகின்றன.

மொசூல் நகருக்கு 35 கி.மீ. தொலைவிலுள்ள கய்யாரா நகரில், ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆயுதக் கிடங்கு, பி-52 விமானம் மூலம் குண்டு வீசி அழிக்கப்பட்டது.

குண்டுகளை வீசும் பி-52 விமானங்கள் பெருமளவில் சேதத்தை ஏற்படுத்தக் கூடியவை என்றாலும், தற்போது இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் ஏவுகணைகள் மட்டுமே அதில் பொருத்தப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் உயிரிழப்பு அதிகரிக்குமோ என்ற அச்சம் தேவையில்லை.

ஈராக்கிலும், சிரியாவிலும் கடந்த 20 மாதங்களாக நிகழ்த்தப்பட்டு வரும் துல்லியமும், நேர்த்தியும் கொண்ட வான்வழித் தாக்குதல் முறையை பி-52 குண்டு வீச்சு விமானங்களும் தொடர்ந்து மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## முன்னாள் ஜனாதிபதியின் சொத்துக்களை முடக்க துருக்கி அரசு அதிரடி நடவடிக்கை

ஏமன் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே. அவர் அந்த நாட்டின் மிகப்பெரும் கட்சியான பொதுமக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் ஆவார்.

துருக்கியில் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள சலேயின் சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன. ஐ.நா. சபையின் முடிவுக்கு ஏற்ப, துருக்கி அரசு இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது. அதே நேரத்தில் சலே, துருக்கியில் எவ்வளவு சொத்து சேர்த்து வைத்திருந்தார் என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

ஏமன் நாட்டில் நீண்ட காலம் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது, அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்புக்கு, அதாவது 60 பில்லியன் டொலர் அளவுக்கு (சுமார் ரூ.3.96 லட்சம் கோடி) அவர் சொத்துக்களை குவித்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அவருக்கு 20 நாடுகளில் சொத் துக்கள, ரொக்கம், பங்குகள், தங்கம், பிற மதி ப்பு வாய்ந்த பொருட்கள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

### பனாமா ஆவணக் கசிவு

## பாகிஸ்தானில் 12ராணுவ அதிகாரிகள் பணி நீக்கம்

பனாமா ஆவணக் கசிவு விவகாரத்தை தொடந்து ஊழல் குற்றச்சாட்டின்கீழ் பாகிஸ்தானில் 12 ராணுவ அதிகாரிகளை தளபதி ராஹில் செரீப் பதவியில் இருந்து நீக்கினார்.

மத்திய அமெரிக்க நாடான பனாமா, உலக நாடுகளின் தலைவர்கள் வரிஏய்ப்பு செய்து, சொத்துகளை வாங்கிக் குவிக்கும், பணத்தை பதுக்கும் சொர்க்காபுரியாக திகழும் ரகசியம் வெளிச்சத்துக்கு வந்தது. பாகிஸ்தானில் அந்நாட்டு பிரதமர் நவாஸ் செரீப், அவரது குடும்பத்தினர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள், தொழிலதிபர்கள் சட்டவிரோதமாக முதலீடு செய்து உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்புக்கு எதிரான விமர்சனம் அதிகரித்தது. பனாமா ஆவணங்களில் மொதம் 220 பாகிஸ்தானியர்கள் பெயர் இடம் பெற்றுள்ளது. பிரதமர் நவாஸ் செரீப்பின் மூன்று மகன்களும் முக்கிய இடத்தை இதில் பெற்று உள்ளனர். இருப்பினும் பாகிஸ் தான் பிரதமர் நவாஸ் செரீப் குற்றச்சாட்டை மறுத்துவிட்டார், என் னுடைய பிள்ளைகள் வெளிநாட் டில் இருந்து தொழில் செய்து வருகின்றனர் என்று கூறியுள்ளார். இப்பிரச்சி னையில் புதிய நடவடிக்கையாக ஆவணத்தில் இடம் பெற்ற சுமார் 12 ராணுவ அதகாரிகளை அந்நாட்டு தளபதி ராஹில் செரீப் பதவி நீக்கம் செய்துள்ளார் என்று பாகிஸ்தான் ஊடகச்செய்திகள வெளியாகியுள்ளன. மேஜர் ஜெனரல் மட்டத்திலான 2 அதிகாரிகள் உட்பட 12 அதிகாரிகள் அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஊழல குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று செய் திகள் வெளியாகியுள்ளன. ஊழலை வேரோடு அழிக்கவில்லை என்றால் தீவிரவாதத்தை யும அழிக்க முடியாது என்று ராஹில் செரீப் கூறியுள்ளார். (இ-5)

## இதுவே என் கடைசி உரையாக இருக்கலாம்

### பிடல் காஸ்ட்ரோ தெரிவிப்பு



(ஹவானா)

இதுவே என் கடைசி உரையாகக்கூட இருக்கலாம். நமது லத்தீன் அமெரிக்க நண்பர்களுக்கும் பிற நாட்டு நண்பர்களுக்கும் கியூப மக்கள் எப்போதும் வெற்றியாளர்களே என்ற செய்தியை தெரிவிக்க வேண்டும்" என பிடல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பை பிடல் காஸ்ட்ரோவின் சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ ஏற்றுக்கொள்வார் என அந்நாடு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பும் அதன் நிமித்தமாக பிடல் காஸ்ட்ரோ ஆற்றிய உரையும் இந்த உலகுக்கு ஒரு ஆணித்தரமான செய்தியை தெரிவித்திருக்கிறது.

கியூபாவின் மூத்த தலைவர்கள் மறைந்தாலும்கூட அந்நாட்டின் புரட்சிகர சிந்தனை தலைமுறைகள் கடந்து நிற்கும் என்பதே அச்செய்தி.

கியூப காங்கிரஸ் கூடி கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைமை பொறுப்பை 84 வயதான ரவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைப்பது என்ற முடிவை எடுத்தது.

முக்கிய முடிவு எட்டப்பட்ட அந்த ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் முடிந்த பின்னர் கியூப அரசு தொலைக்காட்சியில் தோன்றினார் பிடல் காஸ்ட்ரோ.

தலைநகர் ஹவானாவில் உள்ள பாரம்பரிய அரங்கில் பிடல் காஸ்ட்ரோ உரையாற்றினார். அவர் பேச்சை கேட்க குழுமியிருந்த விருந்தினர்கள் சிலர் காஸ்ட்ரோவின் உணர்ச்சிகரமான உரையைக் கேட்டு கண்ணீர் சிந்தினர்.

அவர் பேசியதாவது.

இதுவே என் கடைசி உரையாகக் கூட இருக்கலாம். நமது லத்தீன் அமெரிக்க நண்பர்களுக்கும் பிற நாட்டு நண்பர்களுக்கும் கியூப மக்கள் எப்போதும் வெற்றியாளர்களே என்ற செய்தியை தெரிவிக்க வேண்டும்.

நான் விரைவில் 90 வயதை தொட்டு விடுவேன். அதன்பின்னர் நானும் மற்ற வயோதிபர்களைப் போலவே இருப்பேன். காலம்என்னை மறையச் செய்யும். ஆனால், கியூபாவின் கம்யூனிஸ்டுகள் இந்த புவியில் ஒரு சிறந்த உதாரணமாக திகழ்வர்.

கம்யூனிஸ சித்தாந்தத்தை உத்வேகத்துடன் அதற்குண்டான உரிய மரியாதையுடனும் பின்பற்றினால் மனித குலத்திற்கு ஆகச் சிறந்த பொருளாதார, கலாசார நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை உணர்த்தலாம்.

நமது கோட்பாடுகளை நிலைநிறுத்த சமரசமின்றி போராட வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-5)

# கேட்கும் உரிமை இல்லை

(டில்லி)

வெளிநாடுகளில் எனக்கு உள்ள சொத்து விபரங்களை கேட்க வங்கிகளுக்கு உரிமை கிடையாது என்று தொழில் அதிபர் விஜய் மல்லையா தெரிவித்துள்ளார்.

என்னைப் போன்ற வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் தங்களுடைய வெளிநாட்டு சொத்து விபரங்களை தெரிவிக்கவேண்டிய கட்டாயம் கிடையாது என்று மல்லையா தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மல்லையா தரப்பில் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு உள்ள 41 பக்க அறிக்கையில், வெளிநாட்டில் உள்ள என்னுடைய சொத்துக்கள் மற்றும் குழந்தைகள் சொத்து விபரங்களை கேட்க எனக்கு கடன் கொடுத்தவர்களுக்கு உரிமை கிடையாது. என்னுடைய குழந்தைகள் வெளிநாட்டவர்கள், அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள் அதேபோன்று பிரிந்து வாழும் என்னுடைய மனைவியும் வெளிநாட்டு வாழ் இந்தியர் ஆவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)




# சரியான தலைவன் இல்லாமல் தட்டுக்கெட்டு நிற்கிறது தமிழினம்

## சீமான் தெரிவிப்பு

(சென்னை)

**தகப்பன் இல்லாத வீடு தட்டுக்கெட்டு நிற்பதுபோல் சரியான தலைவன் இல்லாமல் தமிழ்நாடும் தமிழினமும் தட்டுக்கெட்டு நிற்கிறது என நாம் தமிழர் கட்சியின் இணைப் பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**



நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய சீமான் தற்போது நடைபெறவுள்ளது தேர்தல் அல்ல, மாற்றத்திற்கான புரட்சிக் களம் என்று தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் அரண்மனை அருகே நாம் தமிழர் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் சீமான் கலந்துகொண்டார். அப்போது அவர் பேசியதாவது, தமிழ்த்தேசிய நலத்தின் இறையாண்மை உரிமையை கேட்கிறோம். தமிழ் மண்ணை தமிழன் ஆண்டு இருந்தால் இவ்வளவு பெரிய துன்பம், துயரம், வறுமை, ஏழ்மை வந்து இருக்காது.

தமிழன் நாட்டை தமிழன் ஆள வேண்டும் என்பது அந்த இனத்தின் அடிப்படை உரிமை. எல்லை தாண்டி செல்வதற்காக மீனவர்கள் சிறை பிடிக்கப்படவில்லை. தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக சிறை பிடிக்கப்படுகின்றனர். தேர்தல் அறிக்கையில் விவசாய கடனை தள்ளுபடி செய்வதாக கூறுகிறார்கள்.

இந்த விவசாயியை கடனாளியாக ஆக்கியது யார்? கடன் வாங்கி கல்வி கற்க வைத்தது யார்? தகப்பன் இல்லாத வீடு தட்டுக்கெட்டு நிற்பது போல் சரியான தலைவன் இல்லாமல் தமிழ் நாடும், தமிழ் இனமும் தட்டுக்கெட்டு நிற்கிறது. கருணாநிதியும், ஜெயலலிதாவும் நம்மை அடிமைப்படுத்த நினைக்கின்றனர்.

ஆட்சியில் இருக்கும் போது மதுவிலக்கை பற்றி வாய் திறக்காத ஜெயலலிதா மக்களிடம் வாக்கு கேட்க வரும் போது மதுவிலக்கை படிப்படியாக குறைப்பதாகக் கூறுகிறார். முதலில் அந்த இரண்டு தலைவர்களுக்கும் சொந்தமான மது ஆலைகளை மூடட்டும். காமராஜர் காலத்தில் உண்மையும், நேர்மையும் நிறைந்த எளிமையான ஆட்சி நடைபெற்றது.

ஊழல், இலஞ்சம், மதுவை ஒழிப்பதாக சொல்கிறார்கள். மக்கள் அவர்களையே ஆட்சியை விட்டு ஒழிக்க வேண்டும். உண்மையான, நேர்மையான ஆட்சியை நிறுவ உங்கள் பிள்ளைகள் துடிக்கிறோம். பலமுறை அ.தி.மு.க.- தி.மு.க. விற்கு வாக்களித்து அதிகாரத்தைகொடுத்து விட்டீர்கள்.

மறுபடியும் நீங்கள் ஜெயலலிதாவுக்கோ, கருணாநிதிக்கோ வாக்களித்து அதிகாரத்தை கொடுக்காதீர்கள். பணத்தை கொடுத்து வாக்கை பறிக்கலாம் என்று இந்த ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். இது தேர்தல் அல்ல. மாறுதலுக்கான, புரட்சிக்கான களம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று சீமான் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இந்தியாவில் முதன்முறையாக கடலுக்கடியில் புல்லட் ரயில்



உலகில் பல நாடுகளில் கடலுக்கடியில் புல்லட் ரயில்கள் இயக்கப்படுகின்றன. அந்தவகையில் முதன்முறையாக இந்தியாவில் மும்பை-அகமதாபாத் இடையே கடலுக்கடியில் புல்லட் ரயில் இயக்கப்படவுள்ளது..

508 கி.மீ. தூரம் கொண்ட இந்த ரயில் பாதையில் 21 கி.மீ. வரையிலான பாதை மட்டும் கடலுக்க டியில் அமைக்கப்படவுள்ளது. 97, 636 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படவுள்ள இந்த இத்திட்டத்திற்காக ஜப்பானிடமிருந்து 81 சதவிகிதம் கடன் பெறப்பட்டுள்து.

இந்த சேவைக்கான கடன் ஒப்பந்தத்தின் படி மின் சாதனங்கள், சிகனல் சாதனங்கள் உள்ளிட்டவைகள் ஜப்பானில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த புல்லட் ரயில் தொடர்பாக ஜப்பான் நாட்டுடனான ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதியில் கையெழுத்தாகவுள்ளது. கடலுக்கு அடியிலான புல்லட் ரயில் சேவை திட்டம் கட்டுமான பணிகள் 2018 ஆம ஆண்டு இறுதியில் தொடங்கப்பட உள்ளதாக இத்திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பை தானே கடற்பகுதி வழியாக அமைக்கப்படவுள்ள இந்த சேவை மூலம் தற்போது 7 மணி நேரத்தில் கடக்கும் 500கி.மீ தூரத்தை 2 மணி நேரத்தில் கடக்கமுடியும். (இ-5)

# மகாத்மா காந்தியின் பேர்த்தியை கௌரவித்த பிரான்ஸ் அரசாங்கம்

(சென்னை)

இந்தியாவுக்கு அகிம்சை வழியில் போராடி சுதந்திரம் வாங்கித் தந்தவர் மகாத்மா காந்தி.

கல்வி, கலாசாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு இவரின் பேர்த்தி தாரா காந்தி பட்டாசார்ஜி அளித்து வரும் பங்களிப்பை போற்றும் விதமாக பிரான்ஸ் அரசு கௌரவித்துள்ளது.

இது பற்றி பிரான்ஸ் தூதர் பிரான்கோயிஸ் ரிச்சர் கூறுகையில், தனது தாத்தாவைப் போல அமைதி, கலாசாரம், கல்வி, வளர்ச்சிக்கு தாரா ஆற்றிவரும் தொண்டுக்காகவும், மகாத்மா காந்தியை பாராட்டுவதற்காகவும் அவரை கௌரவித்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

இவருக்கு பிரான்சின் மிக உயரிய Order of Arts and Letters விருது வழங்கப்பட்டுள்ளது.(இ-5)





# ஜெயலலிதா மீது கொலை வழக்கு

## ராமதாஸ் வலியுறுத்து

அ.தி.மு.க. பிரசாரக் கூட்டத்தில் தொண்டர்கள் இறந்ததற்கு ஜெயலலிதாவே பொறுப்பு என்றும் அவர் மீதுகொலைவழக்குப்பதிவுசெய்யவேணடும் என்றும் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடியில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதாவின் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றவர்களில் இருவர் வெயில் கொடுமை தாங்க முடியாமலும், நெரிசலில் சிக்கியும் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த செய்திகளை அறிந்து பேரதிர்ச்சியும், வருத்தமும், தாங்க முடியாத வேதனையும் அடைந்தேன்.

எனவே மகுடஞ்சாவடி பொதுக் கூட்ட பலிகளுக்காக இந்திய தண்டனைச் சட்டத்தின் 304ஆவது பிரிவின்படி அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். மேடையில் தாம் மட்டும் அமர்வதற்காக 20 தொன் அளவுக்கு 8 குளிரூட்டிகளை பொருத்தும்படி நிர்வாகிகளுக்கு ஆணையிடும் முதலமைச்சர் ஜெயலலிதா, கட்சியினருக்கு அடிப்படை வசதி கூட செய்து தராததற்கு இதுவே சரியான தண்டனையாக இருக்கும்.

இனிவரும் நாட்களிலாவது இத்தகைய கொடுமைகள் தவிர்க்கப்பட வேண்டும். அதற்காக பகலில் சுட்டெரிக்கும் வெயிலில் பரப்புரைக் கூட்டங்கள் நடத்துவதை அரசியல் கட்சிகள் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# 250 பெண்கள் படுகொலை!

## ஐ.எஸ்.அட்டூழியம் தொடர்கிறது

(லண்டன்)

ஈராக்கில் பாலியல் அடிமைகளாக மாற மறுத்த 250 பெண்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொலை செய்துவிட்டனர் என்று அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியா, ஈராக்கில் செயறபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பெண்களை பாலியல் அடிமைகளாக்கி அவர்களை துன்புறுத்தி விற்பனை செய்யும் செய்திகள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பாலியல் அடிமைகளாக மாற மறுக்கும் பெண்களை அவர்கள் கொலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கு ஈராக்கில் பாலியல் அடிமைகளாக மாற மறுத்த சுமார் 250 பெண்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவித்தனர் என்று செய்தி வெளியாகியுள்ளது. மொசூல் நகரில தீவிரவாதிகளை சிறிது காலம் தருமணம் செய்துக் கொள்ள ஐ.எஸ். தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து திருமணம் செய்ய மறுத்துக் கொண்ட பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். பாலியல் அடிமைகளாக மாற மறுத்த பெண்களின் உறவினர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-22.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.19 | 147.00 |
| பிரிட்டன் | பவுண்ட் | 204.98. | 212.29 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.07 | 167.51 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.30 | 152.43 |
| கனடா | டொலர் | 112.17 | 116.86 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 110.35 | 115.51 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.96 | 110.01 |
| இந்தியா | ரூபா | 2.1642 | ------- |
| சீனா | யுவான் | 22.2063 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 477.0113 |
| ஓமான் | ரியால் | 373.7420 |
| கட்டார் | ரியால் | 39.5183 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3698 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1767 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 30 | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 70 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 70 | 80 | 120 | 100 |
| தக்காளி | 100 | 100 | 60 | 80 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 100 | 50 | 60 | 70 | 80 | 50 |
| கரட் | 120 | 100 | 90 | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 40 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 40 | 20 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 90 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 90 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 140 | 140 | 120 | 200 |
| லீக்ஸ் | 130 | 100 | 120 | 120 | 160 | 150 |
| பீற்றூட் | 100 | 100 | 65 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 50 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 220 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 120 | 160 | 140 |
| கத்தரிதம்பள்ள | 40 | 60 | — | — | 50 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 300 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 15-30 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 160 | 250 | 110 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 40 | 30 | — | 120 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 55 | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஜனாதிபதி பிரேமதாச படுகொலை 163

### விடுதலைப்புலிகள் வேலையா?

குண்டு வைத்து பிரேமதாசவைப் படுகொலை செய்தது, விடுதலைப்புலிகளின் (எல்.ரி.ரி.ஈ) திட்டமிட்ட சதி வேலையாக இருக்கும் என்று சந்தேகிக்கப்படுவதாக ரூபவாஹினி அறிவித்தது.

ஆனால், விடுதலைப்புலிகளோ அல்லது வேறு எந்த அமைப்புமோ பொறுப்பு ஏற்கவில்லை.

### தற்காலிக ஜனாதிபதி

பிரேமதாச மரணத்தைத் தொடர்ந்து தற்காலிக ஜனாதிபதியாக டி.பி.விஜயதுங்கவே பதவி ஏற்றுக்கொண்டார்.

விஜயதுங்க பிரதமராக இருந்து வந்தார். அவருக்கு தலைமை நீதிபதி ஜி.பி.எஸ். டி.சில்வா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

விஜயதுங்கக்கு 71 வயது. கடந்த 1989 ஆம் ஆண்டு பிரதமராகப் பிரேமதாசவால் நியமிக்கப்பட்டவர்.

### வாழ்க்கைக் குறிப்பு

படுகொலை செய்யப்பட்ட பிரேமதாசவுக்கு 68 வயது.

அவர் 1924 ஆம் ஆண்டு சலவைத் தொழிலாளி குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறந்த பிறகு அவருடைய பெற்றோர் கிராமத்தில் இருந்து நகரத்திற்கு குடிபெயர்ந்தனர்.

அவர் புத்த மதத்தைச் சேர்ந்தவர். அந்த மதத்தில் சிறு வயது முதலே மிகவும் தீவிர பற்று கொண்டார்.

கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்து முடித்த அவர், பிறகு ஒரு கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

### அரசியலில் குதித்தார்

பிரேமதாச தனது 15 ஆவது வயதிலேயே அரசியலில் குதித்தார். இதன்மூலம் பெரிய அரசியல் தலைவர்களின் கவனம் இவர் மீது திரும்பியது.

1956 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஆனார். கட்சி அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்னதாகக் கொழும்பு நகர சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பாராளுமன்றம்

அதன்பிறகு 1955 ஆம் ஆண்டு கொழும்பு நகர சபைின் துணை மேயரானார். அந்த வருடம் பாராளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

1965 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். அன்று முதல் கொழும்பு மத்திய பாராளுமன்ற தொகுதியில் தொடர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

வாக்காளர் மத்தியில் தனக்கென்று ஒரு தனி அடித்தளத்தைப் பிரேமதாச அமைத்துக் கொண்டார்.

1968 ஆம் ஆண்டு இலங்கை ஊராட்சி துறை மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் அவரது கட்சி தோற்றது. இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அவர் எதிர்க் கட்சித் தலைவராகச் செயற்பட்டார்.

### செல்வாக்கு

புத்த மதத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பிரேமதாச தனது செல்வாக்கை வளர்த்துக் கொண்டார். இதன் காரணமாகத்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போது ஒப்பந்தத்தை எதிர்த்து பிரேமதாச கருத்து வெளியிட்டார்.

ஜெயவர்த்தனவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். இதைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜெயவரத்தன அவரை பிரதமராக ஆக்கினார்.

### ஜனாதிபதி தேர்தல்

1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாச வெற்றி பெற்றார்.

பிரேமதாசவுக்கு 25,69,199 வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு 22,99,770 வாக்குகளும் கிடைத்தன.

1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி பிரேமதாச ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

அதன் பின்னர் புதிய ஜனாதிபதியாக சந்திரிகா பதவி ஏற்றார். அவருக்கு வயது 49.

பிரதமராகப் பதவி வகித்த பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோரின் மகள்தான் சந்திரிகா.

இலங்கை அரசியல் சட்டப்படி, இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதி தேர்தலும் தனித்தனியாக நடக்கின்றன.


அமெரிக்காவில் உள்ளது போல் இலங்கையிலும் ஜனாதிபதிக்கே முழு அதிகாரம்.

பாராளுமன்றத்துக்கு 16 ஆம் திகதி நடந்த தேர்தலில் சந்திரிகா (மக்கள் கூட்டணி) வெற்றி பெற்று பிரதமர் ஆனார்.

### ஜனாதிபதி தேர்தல்

பின்னர், நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் அவர் போட்டியிட்டார்.

அவரை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் காமினி திசாநாயகா வெடி வைத்துக் கொல்லப்பட்டார்.








(தொடரும்)

# அரசியல் பழிவாங்கல் குறித்து கவனம் செலுத்த வேண்டும்

## பூஜிதவிடம் மகிந்த கோரிக்கை



(கொழும்பு)

**அரசியல்வாதிகள் பழிவாங்கப்படுவது தொடர்பாக புதிய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கவனம் செலுத்த வேண்டும் எனவும் இந்த விடயம் தொடர்பில் அவர் சாதகமான முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.**

எம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது அவர் அதனைத் தெரிவித்தார்.

தமது அரசாங்கம் பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தது.

எனினும் இன்று அந்த திட்டங்கள் யாவும் மந்த நிலைக்கு சென்றுள்ளன என்று மகிந்த குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு தமது அரசாங்க காலத்தின்போது பாரிய நன்மைகள் கிடைத்தன. எனினும் இன்று அவை யாவும் கிடைக்காமல் போயுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சீஐடியும் நிதிமோசடிகளுக்கு எதிரான பொலிஸ் பிரிவும் புதிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# எமக்கும் அதிகாரம் வேண்டும்



## சுமந்திரன் வலியுறுத்தல்

சிறுபான்மை இன மாகவுள்ள நாங்கள் அரச அதிகாரங்களை எங்களது கைகளில் ஏற்று நடைமுறைப் படுத்த வேண்டும். எங்களுக்கும் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருந்தால் அடிப்படையில் ஒற்றையாட்சி முறையினை இல்லாது ஒழிக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினையும் இல்லாமல் செய்ய வேண்டும். இரண்டையும் செய்யாமல் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினை நினைத்துக்கூட பார்க்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் தெளிவுபடுத்துவதோடு, அதில் உள்வாங்குவதற்காக கருத்தறியும் முழுநாள் செயலமர்வொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினம் மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நடத்தியது.

'நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையிலிருந்து வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற மீயுயர் தன்மையை மீளமைத்தல் எண்ணிக்கையில் சிறிய சமூகங்களின் அரசியல் நோக்கு' என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உரையாற்றினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாங்கள் வழமையாக பேசும் ஆட்சி முறையின் அடிப்படை அம்சமே பெரும்பான்மை ஆட்சி என்பதாகும். பெரும்பான்மை ஆட்சியே ஜனநாயகத்தின் அடிப்படை என்றாலும் அதுபேரின ஆட்சியாக மாறமுடியாது.

இலங்கை அரசியலமைப்பு சட்டம் பேரினவாதத்தினை முன்கொண்டு செல்லும் ஒரு வாகனமாகவே அமைக்கப்பட்டுள்ளது. அதில் அதிகாரப்பகிர்வு என்பதனை கொண்டுசெல்லமுடியாது.

அதனால்தான் 13 ஆம் திருத்த சட்டத்தின்கீழ்கொண்டு வரப்பட்ட மாகாணசபைகள் தோல்வியான மாகாண சபைகளாக உள்ளன. அதிகாரப் பகிர்வு அர்த்தமான வகையில் உருவாக்கப்பட வேண்டுமாகவிருந்தால் அடிப்படை அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். இதில் நிறைவேற்று அதிகாரத்தினை ஒரு மையப்பகுதியில் குவிப்பதை மட்டுமே ஏற்றுக்கொள்ளும். அதனால் தான் இந்த அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பது ஒரு புதிய அரசியலமைப்பில் இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் திடமாகவுள்ளோம்.

இந்த நாட்டில் உள்ள நிறைவேற்று அதிகாரம் முழுவதுமாக ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. ஒருவருடைய கைகளிலேயே உள்ளது. இதுவே தற் போதைய அரசியலமைப்பின் அத்திபாரம். ஆகும்.

அவ்வாறு உள்ள நிலையில் அதனை வேறு அலகுகளுடன் பகிரமுடியாது. ஒற்றையாட்சியின் கீழ் ஒரு மையத்திலேயே அதிகாரங்கள் இருக்க வேண்டும். அதனை வேறு அலகுகளுடன் பகிர முடியாது. மயிரிழையில் 13வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் நடைமுறையில் அது செயற்பட முடியாத நிலையில் இருக்கின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இருந்தால் அது சிறுபான்மை சமூகத்திற்கு சாதகமாக இருக்கும் என்ற எண்ணம் பலகாலமாக இந்த நாட்டில் இருந்துவந்தது. இன்றும் சிலர் மத்தியில் அந்த சிந்தனை இருந்து வருகின்றது.

இரண்டு கட்சி முறைமை இருக்கும் ஒரு நாட்டில் ஒருவர் ஜனாதிபதியாக வர வேண்டுமானால் சிறுபான்மை மக்களின் ஆதரவுடனேயே ஜனாதிபதியாக வரமுடியும், அதனால் எப்போதும் அரசியலை தீர்மானிக்கும் சக்திகளாக சிறுபான்மை மக்கள் உள்ளனர். அவ்வாறு இருக்கும்போது சிறுபான்மை சமூகத்தினை மீறிச்செயற்பட முடியாது என்ற நப்பாசை சிலர் மத்தியில் இருந்து வருகின்றது. அது நப்பாசை மட்டுமே ஆகும.

ஏனென்றால் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மட்டுமே வாக்குகள் தேவை, எனினும் அவர் வெற்றி பெறுவதற்கு பெரும்பான்மை சமூகத்தின் ஆதரவும் அதிகமாக தேவை. எனவேதான் வெற்றி பெற்றதும் பெரும்பான்மை சமூகம் தங்களுக்கு பாதகம் என்று சிந்திக்கும் விடயங்களை செய்யாதவராக பெரும்பான்மை சமூகத்திற்கு கூடிய ஆதரவினை வழுங்குபவராக இருந்து வருவதே எமது அனுபவமாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## முத்திரை வடிவில் போதைப்பொருள்

மாலபே உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் மாணவர்களை இலக்காக கொண்டு முத்திரை போன்று வடிவமைக்கப்பட்டு போதைப்பொருள்விற்பனை செய்யப்படுவது தொடர்பில் புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த விசாரணைக்கமைய மாலபே கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒருவரால் இணையத்தின் ஊடாக இந்த போதைப்பொருள் அதிகபடியான விலையின் கீழ் விற்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனடிப்படையில் , குறித்த மாணவரை கைது செய்ய விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட மாணவரை நேற்று முன்தினம் மாலை அத்தனகல்ல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதை தொடர்ந்து இம்மாதம் 27ஆ ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். (இ-5)

## மே 02 முதல் சிற்றுண்டிகளின் விலை அதிகரிப்பு

உணவுப் பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டிச சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் உணவுப் பொருட்களின் வலை அதிகரிக்கப்படவுள்ளது.

பெறுமதி சேர் வரி அதிகரிப்பின் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஏற்பாட்டாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சிற்றுண்டிகளின் பெறுமதி சேர் வரி அதிகரிப்புத் தொடர்பில் தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

# கேலியும் கிண்டலும்

நான்கு பேர் சேர்ந்தால் அரட்டை அடிக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்?

அப்படியே அரட்டை அடிக்க நேர்ந்தாலும் கேலிக்குரிய பொருளாக வேறு விடயம் அல்லது வேறு நபரை வைத்துக் கொள்ளாமல் அந்தக் கும்பலிலே ஒருவரை வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற அவசியம் தான் என்ன?

இது பலருக்குப் புரிவதில்லை.

உடல் குறைபாடுகள், உள்ளக் குறைபாடுகள், சூழ்நிலைக் குறைபாடுகள் ஆகியவற்றை வைத்துக் கண்டபடி கேலி செய்வார்கள் இவர்கள்.

நாம் நகைச்சுவையை உதிர்க்க வேண்டும். அதைக் கேட்டுப் பலரும் சிரிக்க வேண்டும். இதுவே இவர்களது விருப்பம், எண்ணம், மற்றவற்றைப்பற்றி இவர்களுக்கு கொஞ்சமும் அக்கறையும் இல்லை.

நீங்கள் இவ்வாறு செய்யலாமா என்று இவர்களிடம் கேட்டால், சேச்சே சும்மா விளையாட்டுக்குத் தான். அவர் ஒன்றும் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார். அதை மனத்திலும் வைத்துக் கொள்ளமாட்டார் என்றெல்லாம் போலிச் சமாதானங்களை சொல்லுவார்கள். இந்த வாதமே தவறு என்பதை விபரம் அறிந்தவர்களும் அனுபவஸ்தர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒருவரது மனநிலை எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஏற்கனவே நடந்த சம்பவங்களை ஒட்டியும் இனி நடக்க போகும் சம்பவங்களை ஒட்டியும் அவர்களது மனநிலை பாதிக்கப்பட்டிருக்கலாம். நாலு பேர் நடுவில் நம் மனநிலையை வெளிக் காட்டிக் கொள்வானேன்? என்று அவர்கள் கம்பனிக்காகச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

கேலியும் கிண்டலும் செய்பவர்கள் இந்த உண்மையை உணராமல் எதைச் சொன்னாலும் தமாஷ் என்ற பாணியில் பேசிக் கொண்டிருப்பார்கள். இதனால் சம்பந்தப்பட்டவர்களது உள்ளுணர்வு கடுமையாகப் பாதிக்கப்பட்டு விடும்.

இந் நிலையில் சிறுவயதினர் அப்போதே தன் எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். மனம் பொறுக்காத பெண்கள் அழுது விடுவார்கள். சில ஆண்களுக்குக் கை நீளும்; வார்த்தைகள் தடிக்கும்.

ஓரளவு பக்குவப்பட்டவர்கள் ஒதுங்க முனைவார்கள். சிலர் கேலி பேசுபவர்களை வெறுக்கத் தொடங்குவார்கள். இவற்றால் கொஞ்சமும் விரும்பத்தகாத சூழ்நிலையும் உருவாகும்.

பாராட்டுக்களை அவையிலே சொல் வோம். குறைபாடுகளை நான்கு சுவர்களுக்கு நடுவே சொல்லுவோம். அதாவது பாராட்டுக்களை நான்கு பேர் நடுவே சொல்வோம். குறைபாடுகளை நான்கு சுவர்களுக்கு நடுவே சொல்வோம். ஆனால் நமக்கு மிகவும் வேண்டியவர்களது உள்ளுணர்வுகளைப் புண்படுத்தி அதன் மூல மாகப் பலரை சிரிக்க வைப்பது என்பது எந்த விதத்திலும் நியாயமான செயலாகாது.

லேனா தமிழ்வாணன்




## மாபெரும் மேதை



பட்டிணபுரி என்ற நாட்டை மித்திரன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவரது ஒரே மகள் மலர்விழி. அவளை அருமை, பெருமையாக வளர்த்து எல்லாக் கலைகளையும் கற்க ஏற்பாடு செய்தார். அவள் வளர்ந்து அழகியாகவும், அதிபுத்திசாலியாகவும் ஆனாள்.

அப்போது மித்திரனுக்கு அவளது விவாகம் பற்றிய கவலை ஏற்பட்டது. அவளை மணப்பவன் அந்நாட்டின் அரசனாவானே! எனவே, அவளது அறிவுக்கு இணையாக உள்ளவனையே அவளது கணவனாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என நினைத்தார்.

ஒருநாள் மன்னனின் தர்பாருக்கு ஒரு பண்டிதர் வந்தார்.

"அரசே! சகலசாஸ்திர விற்பன்னன் பக்ரிநாத் என்பவன் நான். என் நாடு மாளவம், காசி, தட்சசீலம் ஆகிய இரு வித்தியா பீடங்களிலும் உள்ள பண்டிதர்களை வென்று எனக்கு நிகர் யாரும் இல்லை என்று பெயர் பெற்றவன்.

"நான் இங்கு மூன்று கேள்விகளைக் கேட்பேன். இந்த நாட்டுக் குடிமகன் யார் வேண்டுமானாலும் அவற்றிற்குப் பதில் கூறலாம். அவற்றிற்குச் சரியான விடைகளைக் கூறி விட்டால்... அப்படிக் கூறியவனிடம் இதுவரை நான் பெற்ற பதக்கங்களைக் கொடுத்து, அவனை வணங்கி விட்டுப் போய் விடுவேன்.

"சரியான விடைகளைக் கூறாமல் போனால்... உங்கள் ஆஸ்தான பண்டிதர்கள் எனக்கு மரியாதை காட்டி, பல்லக்கில் அமர்த்தி அதனைச் சுமந்து என்னை வழி அனுப்பி வைக்க வேண்டும்," என்றார் மிடுக்காக.

பக்ரிநாத்தின் ஆணவப் பேச்சு பண்டிதர்களையும், மன்னனையும் வெறுப்படைய செய்தது.

"நீங்கள் விட்ட சவாலை நாம் ஏற்கிறோம். உங்கள் கேள்விகளுக்கான விடைகள் மூன்று நாட்களுக்குள் கிடைக்கும். அதுவரை நீங்கள் என் விருந்தினர் விடுதியில் தங்கி இருங்கள்" எனக் கூறினார் மன்னர்.

"சரி. என் முதலாவது கேள்வி இது. யாரும் இல்லை எனக் கூறும் ஒரு உண்மையைக் கூற வேண்டும். ஆனால், அது முழுக்க முழுக்கப் பொய்யாக இருக்க வேண்டும்.

"என் இரண்டாவது கேள்வி... கேளாத ஒலியும் பாராத காட்சியும் யாவை? மூன்றாவது கேள்வி... ஆண்டி முதல் அரசன் வரை எதற்கு மிக எளிதில் அடிமை ஆகிறான்? இக்கேள்விகளுக்கு சரியான விடைகள் தேவை" எனக் கூறி அரசனது விருந்தினர் விடுதிக்குச் சென்றார்.

அக்கேள்விகளைக் கேட்ட ஆஸ்தான பண்டிதர்களும், மன்னனும் திகைத்துப் போயினர். பண்டிதர்கள் அக்கேள்விகளுக்கான விடைகள் பற்றி விவாதித்தனர். என்னென்னவோ விடைகளைக் கூறினர். ஆனால், மன்னனுக்கோ அவை எதுவும் சரியானதாகப் படவில்லை.

அந்தப்புரத்திற்குச் சென்று தன் மகளின் அறையை அடைந்தார் மன்னர். தர்பாரில் நடந்ததை எல்லாம் அவளிடம் கூறி, "மலர்விழி... நாம் இதில் தோற்றுவிடுவோமோ என்று பயமாக இருக்கிறது. ஆனால், நீ இருக்கிறாயே என்ற தைரியம் எனக்கு இருக்கிறது. இதனால் நீ இக்கேள்விகளுக்கு விடைகளைச் சொல் பார்க்கலாம்"என்றார்.

"எனக்கும் விடை தெரியவில்லை... ஆனாலும் நம் அமைச்சரின் புதல்வர் அமரேஷ் .. (தொடரும்)

## 04.2016 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1635 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரசுப் பள்ளி, பொஸ்டன் இலத்தீன் பள்ளி, மசாசு செட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1639 - புனித ஜார்ஜ் கோட்டை மதராசில் கட்டப்பட்டது.
- 1660 - சுவீடன் மற்றும் போலந்து ஆகியவற்றிற்கிடையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டது.
- 1867 - சக்கரம் ஒன்றில் படங்களைச் செருகி தொடர்படமாகக் காட்டக்கூடிய சோயிட்ரோப் (zoetrope) என்ற கருவிக்கான காப்புரிமத்தை வில்லியம் லிங்கன் என்பவர் பெற்றார்.
- 1896 - நியூயோர்க் நகரில் உள்ள புகழ் பெற்ற கோஸடர் அண்ட் பயால்ஸ் மண்டபத்தில் (Koster and Bial's Music Hall) "வாட்வில்லி" குழு வினரால் "இரண்டு அழகிகள் குடை நாட்டியம் ஆடுவது" போன்ற காட்சி காண்பிக்கப்பட்டது. இது தான் விட்டாஸ்கோப் என்ற ஆரம்பகால திரைப்படம் காட்டும் கருவி மூலம் திரையில் காண்பிக்கப்பட்ட முதல் காட்சி ஆகும்.
- 1905 - யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலில் தானுந்து கொண்டுவரப்பட்டது.
- 1932 - நெதர்லாந்தில் 153-ஆண்டுகள் பழமையான டி ஆட்ரியான் என்ற காற்றாலை தீயில் எரிந்து அழிந்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் முப்படைகள் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் கிரேக்க மன்னர் இரண்டாம் ஜோர்ஜ் ஏதன்ஸ் நகரை விட்டு வெளியேறினார்
- 1948 - அரபு- இஸ்ரேல் போர், 1948: இஸ்ரேலின் முக்கிய துறைமுகம் ஹைஃபா பாலஸ்தீனர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.
- 1966 - முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நிறைவடைந்தது.
- 1982 - கொங்க் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1984 - எயிட்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1990 - நமீபியா ஐ.நா மற்றும் பொதுநலவாய நாடுகள் அமைப்புகளில் சேர்க்கப்பட்டது.
- 1993 - இந்திய அரசியல் கட்சி இந்திய தேசிய லீக் உருவானது.
- 1993 - எரித்தீரியாவில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் எதியோப்பியாவிலிருந்து பிரிவதற்கு எரித்திரியர்கள் பெருமளவில் ஆதரவாக வாக்களித்தனர்.

### பிறப்புகள்

- 1791 - ஜேம்ஸ் பியூக்கானன், ஐக்கிய அமெரிக்காவின் 15 ஆவது ஜனாதிபதி (இ. 1868)
- 1858 - மாக்ஸ் பிளாங்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (இ. 1947)
- 1867 - ஜொகான்னெஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1928)
- 1897 - லெஸ்டர் பியர்சன், நோபல் பரிசு பெற்ற கனேடியப் பிரதமர (இ. 1972)
- 1902 - ஹால்டோர் லாக்ஸ்னெஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர (இ. 1998)
- 1935 - இ. முருகையன், ஈழத்துக் கவிஞர் (இ. 2009)
- **1938 - எஸ். ஜானகி, தென்னிந்தியத் திரைப்படப பின்னணிப் பாடகி**

### இறப்புகள்

- 1616 - வில்லியம் ஷேக்ஸ்பியர், ஆங்கில நாடக எழுத்தாளர் (பி. 1564)
- 1951 - சார்ல்ஸ் டோவ்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1865)
- 1992 - சத்யஜித் ராய், உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர (பி. 1921)
- 2007 - போரிஸ் யெல்ட்சின், முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி (பி. 1931)
- 2009 - ரூபராணி ஜோசப், இலங்கை மலையகப் பெண எழுத்தாளர்

### சிறப்பு நாள்

- உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம்

### எஸ். ஜானகி



எஸ். ஜானகிஏப்ரல் 23, 1938 ஆம்ஆண்டு ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் பள்ளபட்லா என்ற ஊரில் ராமமூர்த்தி - சத்தியவதி தம்பதிகளுக்கு தெலுங்கு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் இந்தியாவின் புகழ் பெற்ற திரைப்படப் பாடகி. இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி உட்பட பல இந்திய மொழிகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான பாடல்களைப் பாடியவர். பல பாடல்களைத் தாமே எழுதி, இசைய மைத்துப் பாடியுள்ளார். நான்கு முறை தேசிய விருது பெற்றவர். 1957 ஆம் ஆண்டில் வெளிவந்த விதியின் விளையாட்டு என்ற படத்தில் இடம் பெற்ற பெண் என் ஆசை பாழானது ஏனோ என்ற பாடல் இவரது முதல் பாடல் ஆகும். அடுத்த நாளே அவருக்கு தெலுங்குப் படத்தில் பாடும் வாய்ப் புக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து பல படங்களில் பாடும் வாய்ப்புக் கிட்டி யது. 25 ஆண்டுகளில் தென்னிந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், கொங் கினி, துளு, சௌராஷ்டிரம், இந்தி, வங்காளம், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடி னார்.

1992 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்திருந்தபோது இவருக்கு ஞானகான சரஸ்வதி என்ற பட்டம் வழங்கப்பட்டது. தமிழ், தெலுங்கு மொழிகளில் பல பக்திப்பாடல்களைத் தாமே எழுதி இசையமைத்துப் பாடியுள்ளார். மௌனப் போராட்டம் என்ற தெலுங்குப் படத்திற்கு முதன் முதலில் இசை யமைத்திருக்கிறார்.

இவரது கணவர் காலஞ்சென்ற ராம் பிரசாத். அவர் தனது மகன் முரளி கிருஷ்ணாவுடன் சென்னையில் வாழ்ந்து வருகிறார். இவர் 1986 இல் தமிழ்நாடு அரசின் கலை மாமணி விருது. 2002 இல் கேரளா மாநில சிறப்பு விருது. நான்கு தடவைகள் சிறந்த பாடகிக்கான தேசிய விருது. 1980 இல் மலையாளப் படம் ஒன்றிற்கும், 1984 இல் தெலுங்குப் படம் ஒன்றிற்கும் தேசிய விருது. பதினான்குமுறை கேரள மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது. ஏழு தடவைகள் தமிழ்நாடு அரசின் சிறந்த பாடகிக்கான விருது. பத்து தடவைகள் ஆந்திர மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது என்று பல விருதுகளைப் பெற்றவர்.

# சு.கவை அழிக்கும் மே தினக் கூட்டம்

## விஜிதமுனி எச்சரிக்கை



(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சி கிருலப்பனையில் நடத்தும் மேதினக் கூட்டம் சுதந்திரக்கட்சியை அழித்து விடும் என்று அமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள அவர், முன்னைய காலங்களிலும் பல்வேறு கால கட்டங்களிலும் சுதந்திரக்கட்சியை அழித்து சிறு கட்சிகள் பலன் பெற்ற சந்தர்ப்பங்கள் ஏராளம் இருந்தன. ஆனால் ஒருபோதும் சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் அதற்கு ஆதரவாக செயற்படவில்லை.

ஆனால் இம்முறை கூட்டு எதிர்க்கட்சியின் சுதந்திரக் கட்சியை அழிக்கும் முயற்சிக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் துணை போகின்றார்.

அவர் காலியில் நடைபெறும் சுதந்திரக்கட்சி மேதினக் கூட்டத்துக்குப் பதிலாக கிருலப்பனையில் நடைபெறும் கூட்டு எதிர்க்கட்சி மேதினக் கூட்டத்துக்கு செல்லவுள்ளதாக அறிவித்துள்ளார்.


இதன் மூலம் உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக்கட்சிக்குத் தான் பின்னடைவு ஏற்படும். அதனை மகிந்த உணரத்தயாராக இல்லை.

கட்சியின் ஒற்றுமையை பாதுகாக்க முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா மற்றும் மகிந்த ஆகியோருக்கு நாங்கள் பல தடவைகள் அழைப்பு விடுத்துள்ளோம்.

எங்களைப் பொறுத்தவரை இன்னும் நான்கு வருடங்களுக்கு நாங்கள் நாடாளுமன்றத்தில் இருக்கப் போகின்றோம். மகிந்தவும் எங்களுடன் இருப்பார்.

ஆனால் கூட்டு எதிர்க்கட்சியின் நடவடிக்கைகள் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் சுதந்திரக்கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## அமைச்சர் அர்ஜூனவால் 800 கோடி துறைமுக அதிகார சபைக்கு இழப்பு பதவி விலகக் கோரிக்கை



துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜூன ரணதுங்கவின் செயற்பாடுகள் காரணமாக துறைமுக அதிகார சபை 800 கோடி ரூபா இழப்பைச் சந்தித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

துறைமுக அபிவிருத்தி அமைச்சராக அர்ஜூன ரணதுங்க நியமிக்கப்பட்டது முதல் அவரது குடும்ப உறவினர்களின் ஆதிக்கம் அமைச்சில் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவே அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் பொருளாதார இழப்புகளை சந்திக்க நேர்ந்துள்ளதாகவும் தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பான விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்க முற்படும் தொழிற்சங்க பிரதிநிதிகளை அமைச்சர அர்ஜூன அச்சுறுத்தி அனுப்பிவிடுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே துறைமுக அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பிலிருந்து அர்ஜூன ரணதுங்க மாற்றப்படும் வரை அவருக்கு எதிராக தொடர் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க துறைமுக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் 17 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## மஞ்சள் கடவையை கடக்க முற்பட்ட சிறுமி மீது வான் மோதி விபத்து

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பகுதியிலிருந்து கொட்டகலை வூட்டன் பகுதிக்கு சென்ற வானில் மோதுண்ட சிறுமி காயங்களுடன் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொட்டகலை லொக்கில் பிரதேசத்தை சேர்ந்த (வயது-7) நிரம்பிய சிறுமி கொட்டகலை வூட்டன் பசார் பகுதியில் மஞ்சள் கடவையை கடக்கும் போது வான் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வானையும், சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனினும் சிறுமிக்கு பெரிதான ஆபத்துக்கள் இல்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 699

றொகான்




சிவகுமார்




கொடிகாமம்




ரகுதரன்




வின்ஜக்ஷன்




சந்துரு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்




*முத்தான வாழ்வு தரும் புத்தாண்டு!*
*பொறுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, பெருமைக்குரிய வாழ்க்கை நடத்தும் கன்னி இராசி நேயர்களே!*




மன்மத வருடம் முடிந்து துர்முகி வருடம் தொடங்கியிருக்கிறது. இப் புத்தாண்டு வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுத்திடுமா? வருங் காலத்தை நலமாக்கிக் கொள்ள வழி வகை செய்து தருமா? பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் முடிவாகுமா? பின்னணியாக இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமா? நினைத்தது நிறைவேறி நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகுமா? என்றெல்லாம் நீங்கள் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்கள் சிந்தனைகளுக்கு செவிசாய்க்கும் விதத்தில் நவக்கிரகங்கள் உலாவரும் நிலை இருப்பதால் புத்தாண்டு பொன்கொழிக்கும் ஆண்டாக அமையப் போகின்றது.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி 31-ஆம் திகதி மாலை நேரத்தில், உங்கள் ராசிநாதன் புதனுக்குரிய கிழமையில் நிகழ்வதால் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திருவாதிரை நட்சத்திரத்தில் பிறப்பதும் யோகம்தான். திருவாதிரை எனபது ராகுவிற்கு உரிய நட்சத்திரமாகும்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு 12-ஆம் இடத்தில் ராகு சஞ்சரிக்கின்றார். மறைந்த ராகு நிறைந்த தனலாபத்தைக் கொடுப்பார். எனவே புத்தாண்டில் பணவசதி சிறப்பாக இருக்கும். தொழில் வெற்றிநடை போடும். மனதில் நினைத்தவற்றை மறுகணமே செய்து முடிக்க வாய்ப்புகள் கைகூடிவரும்.

3-ஆம் இடத்தில் செவ்வாய்-சனி சேர்க்கை பெற்று இருக்கிறார்கள். முன்னேற்றத்தைக் குறிக்கும் இடத்தில் முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் 3-ஆம் இடம, 8-ஆம் இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். 5-ஆம் இடம், 6-ஆம் இடம் ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி.

6, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதி இரண்டும் சேர்ந்து சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் விரும்பும் விதத்தில் சில நல்ல பலன்கள் நடைபெறப் போகிறது. திட்டமிடாது செய்த காரியங்களிலும், திட்டமிட்டுச் செய்யும் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். இத்தனை நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேர்ந்தாலும் 6-ஆம் இடத்தில் கேது இருக்கின்றார். எனவே உத்தியோகம் மற்றும் தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் இடையூறுகள் வரும்.

எதிரிகளின் பலம் ஒரு சில சமயங்களில் மேலோங்கி இருக்கலாம். திடீர் இடமாற்றம், வீடு மாற்றம் உங்களுக்கு வந்து சேரலாம். எனவே ஞானகாரகன் கேதுவை திருப்திப்படுத்த வாரம் தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. வடக்கு நோக்கி வீற்றிருக்கும் விநாயகர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும். 7, 10-க்கு அதிபதியான குரு பகவான் 12இல் மறைவது நன்மை தான். மேலும் வியாழன் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார்.

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் பலமிழந்து சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த நற்பலன்களை கொடுக்கும் என்பார்கள். தாய்வழி ஆதரவு பெருகும். இடம், பூமி வாங்குவதில் இருந்த வில்லங்கங்கள் அகலும். வாகனப் பழுதுகளை முன்னிட்டு பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பயணங்கள் அதிகரிக்கும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். முன்னோர் கட்டிய கோவிலை மீண்டும் புதுப்பித்து குடமுழுக்கு விழாக் காணும் அமைப்பை உருவாக்க முயற்சிப்பீர்கள்.

விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் விரும்பி வந்து சேருவர். சென்ற வருடத்தில் நடைபெறாத சில காரியங்கள் படிப்படியாக நடைபெற்று பரவசப்படுத்தும். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் மாறும்.

### ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை!

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது திருப்திகரமாகவே இருக்கின்றது. உங்கள் ராசிநாதன் புதன் 8 ஆம் இடத்தில் மறைந்திருப்பதால் பயப்பட வேண்டியதில்லை. மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைத் தருவார்.

புதனோடு சூரியன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே கல்வி, கலை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இந்த ஆண்டு வளர்ச்சி ஏற்படும். விருதுகளும், பாராட்டுக்களும் கிடைக்கும்.

2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் உச்சம் பெற்றிருக்கின்றார். எனவே அழகிய வீடு கட்டிக் குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். அது மட்டுமல்லாமல் ஏழரைச் சனி நடைபெறும்பொழுது அடகு வைத்த நகைகளை மீட்கும் சூழ்நிலை உருவாகும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க அதிக முயற்சி எடுப்பீர்கள். அதற்கேற்ற விதத்தில் விரய ஸ்தானத்தில் வியாழன் இருப்பதால் மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்.

குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. அந்த சுக ஸ்தானத்தை குரு பார்ப்பதால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். எதிரிகள் தொல்லை குறையும். இடம் சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர்பதவி கிடைக்கச் செய்த ஏற்பாடுகள் பலன் தரும். ஒவ்வாமை நோய் அகலும்.

அஷ்டம ஸ்தானத்தை குரு பார்த்து புனிதமடைவதால் நீண்ட நாட்களாக நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். ஆக்கப்பூர்வமாக சிந்தித்து அனுகூலத்தைக் காண்பீர்கள். தூரத்து உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும. பணி ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் பணி கிடைத்து வருமானம் வரும் வாய்ப்பு கிட்டும்.

### ஆடி 18இல் தேடி வரும் குரு!

துர்முகி வருடம் ஆடி மாதம் 18ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்த குருப்பெயர்ச்சி யின் விளைவாக உங்களுக்கு அற்புதமான மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது. ஜென்ம குருவால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயம் கூடுதலாகவே கிடைக்கும். குரு ஜென்மத்தில் இருந்தபடியே சப்தம பார்வையாக தன் வீடான மீனத்தைப் பார்க்கப் போகின்றார். எனவே களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது.

மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் தங்கு தடையின்றி கேட்கும். மக்கள் செல்வங்களின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். தூரதேசத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா என்று சிந்திப்பீர்கள். அஞ்சல்வழி அனுகூலங்கள் உண்டு.

குறிப்பாக குரு பகவான் கூடவே இருக்கும்பொழுது அதன் அருளால் அனைத்து செயற்பாடுகளிலும் வெற்றி கிடைக்கும். ஆற்றல் பளிச்சிடும் நேரமிது. வீடு மாற்றம் முதல் விரும்பும் மாற்றம் வரை வந்து சேரப்போகின்றது. ஜென்மத்தில் சஞ்சரிக்கும் குரு 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கிறது. அந்த மூன்று இடங்களும் நன்றாக இருந்தால் தான் வாழ்க்கை முழுமை பெறும். எனவே அந்த இடங்களை குரு பார்ப்பதால் அடுக்கடுக்காக யோகங்கள் வந்து சேரும் அல்லவா?


குரு பார்வை பதியும் பஞ்சம ஸ்தானம் புனிதமடைவதால் பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்துப் பலன்களும் கிடைக்கும். செல்வாக்கு உயரும். தேசப்பற்றும், தெய்வப்பற்றும் மிக்க ஒருவரின் ஒத்துழைப்பால் வாசமலர் போன்ற வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். கௌரவம், அந்தஸ்து உயரும். கடைதிறப்பு விழாக்கள் முதல் கட்டிடத் திறப்பு விழாக்கள் வரை நடத்திப் பார்க்கும் நேரமிது. நீங்கள் உதவி செய்ததன் விளைவாக சிலருக்கு பதவிகள் வந்து சேரும். சொத்துக்களாலும், சொந்தங்களாலும் நற்பலன்கள் உண்டு. அத்தை, மாமன் உறவில் இருந்த விரிசல் மறையும்.

சப்தம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் தந்தைவழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொன் நகை வாங்கி புன்னகை புரிவீர்கள். பூர்வீக இடத்தில் வீடு கட்டலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். வரவு திருப்தி தரும்.

### மங்கையருக்கான மகத்தான பலன்கள்!

துர்முகி வருடத்தில் கன்னி ராசியில் பிறந்த பெண்களுக்கு பணக்கவலை மாறும். மனநிம்மதிக்கு வழிபிறக்கும். தாய்வழி ஆதரவோடு தக்க விதத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

சொத்துக்களின் சேர்க்கை உண்டு. சொந்தங்களின் பாராட்டுக்களும் கிடைக்கும். குருவின் பார்வை பலத்தால் கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். உடன்பிறப்புகள் மட்டும் பகை பாராட்டுவர். அவர்களை அனுசரித்துச் செல்வது தான் நல்லது. ஜென்ம குரு மாறியதும் உடல் நலத்தில் சிறு சிறு தொல்லைகள் தோன்றலாம். மாற்று மருத்துவத்தை மேற்கொள்வதன் மூலம் உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஜூன் மாதத்திலேயே பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் வந்து சேரும்.



குழந்தைகளை அதன் போக்கில் விட்டுவிடாமல் உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பிள்ளைகளின் வெளிநாட்டுப் படிப்பை முன்னிட்டு செய்த முயற்சிகள் வெற்றி தரும். அட்சய திருதியையில் மட்டுமல்லாமல் நினைக்கும் பொழுதெல்லாம் ஆபரணங்களை வாங்கும் யோகம் உருவாகும். ராகு-கேது மற்றும் குரு வழிபாடு நன்மையை வழங்கும்.

### குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!

குருவின் வக்ர காலத்தில் கூடுதல் நன்மை கிடைக்கும். குறிப்பாக நான்காமிடம் மற்றும் ஏழாமிடத்திற்கு குரு அதிபதியாக விளங்குவதால் இடம், பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். நூதனப் பொருட்சேர்க்கை உண்டு. நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும். வாட்டியெடுத்த வறுமை விலகும். தோட்டம், வயல் போன்றவை வாங்கத் தொகையைச் செலவிடுவீர்கள். தீட்டும் திட்டங்கள் ஒவ்வொன்றும் நிறைவேறும். மருத்துவச் செலவு குறையும். மனைகட்டிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டுவந்து சேர்ப்பர்.

சனியின் வக்ர காலத்தில் சிந்தனைகள் சிதறும். செல்லம் கொடுத்து வளர்த்த பிள்ளைகளால் உள்ளத்தில் சுமை கூடும். பணப் பொறுப்பு சொன்னதன் விளைவாக நட்பு ஒன்று பகையாகலாம். நல்ல மனிதர்கள் என்று நம்பி செயற்பட்ட சில காரியங்கள் பாதியிலேயே நிற்கலாம். உறவினர்களுக்கிடையே உரசல்களும், மன உளைச்சல்களும் அதிகரிக்கலாம். இது போன்ற காலங்களில் குருவையும், சனியையும் வழிபடுவது நல்லது.

### வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!

புதன்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு வாருங்கள். தேய்பிறை அஷ்டமியில் பைரவரை வழிபடுவதன் மூலம் செல்வ நிலை உயர வழிபிறக்கும்.


நாளை துலாம்...

## முத்தான வாழ்வு தரும் புத்தாண்டு!

## தவறான பாதையில் விக்னேஸ்வரன்

# சமஷ்டி என்ற பெயரில் பிரிவினைவாதம் அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது

## அமைச்சர் சம்பிக்க கொக்கரிப்பு



(கொழும்பு)

**சமஷ்டி என்ற பெயரில் தமிழ்த்தலைமைகள் முன்னெடுக்கும் பிரிவினைவாத பாதைக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சபையின் பிரச்சினைகளை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் அண்மைக்கால செயற்பாடுகள் நாட்டை குழப்பும் வகையில் அமைந்துள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் அது தொடர்பில் வினவியபோதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தின் மூலம் நாட்டில் பிரிவினை வாதம் தலைதூக்கிய நிலையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து பிளவுபடவிருந்த நாட்டை மீட்டெடுத்தோம். விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்டம் முடிவுக்கு வந்த போதிலும் கடந்த காலங்களில் தமிழ் அரசியல்வாதிகள் பிரிவினைவாத கொள்கையில் செயற்பட்டனர். எனினும் முன்னைய குடும்ப ஆட்சியில் மேற்கொண்ட சர்வாதிகார ஆட்சிமுறையும் அடக்கு முறையும் அனைத்து தரப்பையும் அதிருப்திக்குள்ளாகியது. அதனாலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் தலைமைகள் தமது பிரிவினைவாத கொள்கையில் இருந்து விடுபட்டு ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக மாற்றம் என்ற நிலைப்பாட்டில் ஒன்றிணைந்தனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவையும் பெற்று ஒட்டுமொத்த இலங்கையர்களின் மாற்றமான ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினோம். அதில் தமிழ் அரசியல் தலைமைகளும் பங்குகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியமை வரவேற்கத்தக்க ஒன்றாகவே கருதுகின்றோம். எனினும் இப்போது சமஷ்டி என்ற பெயரில் தமிழ் தலைமைகள் முன்னெடுக்க முயற்சிக்கும் பிரிவினைவாத பாதைக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. வடக்கு கிழக்கு மாகாணங்களை மொழிசார் பிராந்தியமாகவோ அல்லது இனம் சார் பிரந்தியமாகவோ பிரிக்க முடியாது. இலங்கையில் அனைத்து பகுதிகளிலும் சகல மக்களும் வாழ்வதற்கான உரிமை உண்டு. வடக்கில் தமிழர்கள் மட்டுமே வாழமுடியும் என்ற தீமானம் எடுப்பதாயின் தெற்கில் வாழும் தமிழர்களின் நிலைமை என்னவாகும் என்பதையும் தமிழ் அரசியல் தலைமைகள் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தர வேண்டும். அவர்களின் காணிகளில் அவர்களை குடியமர்த்த வேண்டும். அந்த நோக்கத்தில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. ஆனால் அதிகாரப் பகிர்வு என்பது நாட்டை பிரிக்கும் வகையில் அமைந்துவிடக் கூடாது. எனினும் இன்று விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண சபையின் நோக்கம் மீண்டும் பிரிவினையின் பக்கம் சார்ந்து செல்கின்றது. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தாது நாட்டை குழப்பும் வகையில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

வடமாகாண சபையும் விக்னேஸ்வரனும் பயணிக்கும் பாதை தவறானது. இவர்களின் பாதையை மாற்றிக்கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றிணைந்து பயணிக்க ஆரம்பிக்க வேண்டும்.

அதை விடுத்து சர் வதேச பிரிவினைவாத கொள்கையிலும் புலம்பெயர் அமைபபுகளின் நிகழ்ச்சி நிரல்களை கையாண்டும் இலங்கைக்குள் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது என அரசாங்கம் இவர்களுக்கு எச்சரிக்கி ன்றது.

வடக்கு மக்களுக்கு உரிய வகையில் உரிமைகள் பகிரப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பலப்படுத்தப் படும். அதை விடுத்து சட்டத்துக்கும் அரசியல் அமைப்பிற்கும் முரணான வகையில் நாட்டை சீரழிக்கும் செயற் பாடுகளை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது என அவர் மேலும்தெரிவித்தார். (இ-5)

## பாதாள உலகக் கேடிகள் குருவிட்ட சிறைச்சாலைக்கு

வெலிக்கடை சிறைச்சாலைக்குள்இருந்தவாறேபோதை வஸ்து வியாபாரம் உட்பட பல்வேறு பாரிய குற்றச் செயல்களில் மும்முரமாக ஈடுபட்டு வந்த பாதாள உலகக் கேடிகள் சிலர் குருவிட்ட சிறைச்சாலையின் தண்டனைக் கூடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வெலிக்கடை சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இருந்தவாறே போதைப்பொருள் வியாபாரம், ஆட்கடத்தல், கப்பம் வாங்குதல் போன்ற பல்வேறு பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த பிரபல பாதாள உலகக் கேடிகள் சிலரே குருவிட்ட சிறைச்சாலையின் தண் டனைக் கூடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அச்சிறைச்சாலைக்குள் 53 கைப்பேசிகளைக் கடத்திச் சென்ற மரணதண் டனைக் கைதியொருவரும் இந்த இடமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறார் எனவும் தெரியவருகின்றது.(இ-5)

## முயல்-ஆமை ஓட்டப் பந்தயம் போல் அரசின் நடவடிக்கைகள்- வாசுதேவ



மக்கள் தற்போது பாரிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருவதாகவும் இப்போதையை அரசின் நடவடிக்கைகள் முயல்-ஆமை ஓட்டப்பந்தயம் போல இருப்பதாகவும்வாசுதேவ நாணயக்கார எம்.பி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தால் மக்கள் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர். மக்களுக்கு சலுகை தருவதாக ஏமாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, நாடு பொருளாதார பின்னணியில் பின்னடைந்துள்ளதாகவும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், மக்களின் தேவைகளை நிறைவேற்றாத எந்த அரசும் ஆட்சியில் இருக்க தகுதி இல்லை எனவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# கூட்டு எதிர்க்கட்சியினருக்கு சாலிகா மைதானம் இல்லை

## இ.போ.ச.திடீர் அறிவிப்பு

கூட்டு எதிர்க்கட்சியின் மேதின நடவடிக்கைகளுக்கு சாலிகா மைதானத்தை தர முடியாது என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியினரின சார்பில் நடத்தப்படும் கிருலப்பனை மேதினக் கூட்டத்தின் பேரணியை நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்தில் இருந்து ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்காக இலங்கை போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் உரிய கட்டணமும் செலுத்தி முன் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், சாலிகா மைதானத்தை மேதின நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ஒதுக்கித் தர முடியாது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தற்போது கைவிரித்துள்ளது.

இது குறித்து கூட்டு எதிர்க்கட்சியின் ஆதரவு பெற்ற தொழிற்சங்கத்துக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது கூட்டு எதிர்க்கட்சியினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், மேதின ஏற்பாடுகளுக்கு விழுந்த பாரிய அடியாகவும்கருதப்படுகின்றது.

இந்நிலையில், இதனை அப்பட்டமான அரசியல்பழிவாங்கலாக சித்தரிக்கும் கூட்டு எதிர்க்கட்சியின் தொழிற்சங்க முக்கியஸ்தர் சோமவீர சந்திரசிறி ,கூட்டு எதிர்க்கட் சியினருக்கு அதிகரித்து வரும் பொதுமக்களின் ஆதரவு கண்டு அரசாங்கம் அச்சமடைந் துள்ளதாக குற்றம் சாட்டி யுள்ளார்.

அத்துடன் சாலிகா மைதானத்தை தரமுடியாது என்று கைவிரித்திருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தின் தயவை நாடப் போவதாகவும் அறிவித்துள்ளார். (இ)

## விபத்தில் 4 பேர் படுகாயம்




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஜீப் மற்றும் ஆட்டோ மோதியே இவ்விபத்துச் சம்பவம் நிகழ்நதுள்ளது. (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

145

## “மதுரை வீரன்” மூலம் வசூல் சக்ரவர்த்தி ஆனார் எம்.ஜி.ஆர்

இரு பெரும் நடிகர்கள் சேர்ந்து நடித்த படம் என்பதால் ரசிகர்கள் ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர். ஆனால் அது எம்.ஜி.ஆர். படமாகவோ சிவாஜி படமாகவோ அமையாதது மட்டுமல்ல ஒரு நல்ல படமாகவும் அமையவில்லை.

முக்கியமாக கதை சரியாக இல்லாததால் படம் தோல்வி அடைந்தது.


இந்த தோல்வியை ஈடு செய்யும் வகையில் 1955 இல் குலேபகாவிலியை தயாரித்தார் ரமண்ணா. எம்.ஜி.ஆருடன் டி.ஆர்.ராஜகுமாரி, ஜி.வரலட்சுமி, ஈ.வி.சரோஜா, ராஜசுலோசனா, சந்திரபாபு ஆகியோர் நடித்தனர். ஜனரஞ்சக படமான குலேபகாவலி வெற்றிகரமாக ஓடியது.

இதன்பின் தமிழ் நாட்டின் முதல் வண்ணப்படமான அலிபாபாவும் 40 திருடர்களும் படத்தில் எம்.ஜி.ஆர். நடித்தார். ளமாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த இப்படம் 1956 பொங்கல் தினத்தில் வெளிவந்து முரசு கொட்டியது.

### மதுரை வீரன்

பழம் பெரும் படத்தயாரிப்பாளரான லேனா செட்டியார் தமது கிருஷ்ணா பிக்சர்ஸ் சார்பில் மதுரை வீரன் கதையை பிரமாண்டமாகத் தயாரித்தார். எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக பானுமதி, பத்மினி ஆகிய இருவரும் நடித்தனர்.

மற்றும் டி.எஸ்.பாலையா, ஓ.ஏ.கே.தேவர், ஆர்.பாலசுப்பிரமணியம், டி.கே.ராமச்சந்திரன், ஈ.வி.சரோஜா, எம்.ஆர்.சந்தானலட்சுமி, மாடிலட்சுமி, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் ஆகியோரும் நடித்தனர்.



கர்ண பரம்பரைக் கதையான மதுரை வீரனுக்கு திரைக்கதை வசனம் எழுதினார் கவிஞர் கண்ணதாசன்.

பாடல்களை கண்ணதாசனுடன் உடுமலை நாராயண கவி, தஞ்சை ராமையாதாஸ் ஆகியோர் எழுத ஜி.ராமநாதன் இசையமைத்தார். டைரக்‌ஷன் யோகானந்த்.

### கதை

கழுத்தில் மாலையுடன் குழந்தை பிறந்தால் நாட்டுக்கு ஆகாது என்கிறார் ஜோதிடர். அதைக் கேட்டு குழந்தையை காட்டில் விட்டு விடுகிறார் அரசர். குழந்தையை செருப்பு தைக்கும் தொழிலாளியும் அவர் மனைவியும் (என்.எஸ்.கிருஷ்ணன் - டி.ஏ.மதுரம்) எடுத்து வீரன் என்று பெயரிட்டு வளர்க்கிறார்கள்.

வீரன் வளர்ந்து வீரம்மிக்க இளைஞன் (எம்.ஜி.ஆர்.) ஆகிறான்.ஒரு சமயம் அரசகுமாரி பொம்மியை (பானுமதி) காப்பாற்றுகிறான். அவள் வீரனைக் காதலிக்கிறாள்.

பொம்மியின் முறை மாமன் நரசப்பன் பொம்மியை காவலில் வைத்து கட்டாயத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறான். ஆனால் வீரன் தக்க தருணத்தில் பொம்மியைக் காப்பாற்றி சிறை எடுத்து செல்கிறான். அவனுடைய வீரத்தை மெச்சிய விஜயரங்க சொக்கன் பொம்மி வீரனுக்கே உரியவள் என்று தீர்ப்புக் கூறுகிறான்.

பொம்மியை மணக்கிறான், வீரன். திருமலை நாயனுக்கு தளபதியாக நியமிக்கப்படுகிறான்.

அரசவை நர்த்தகி (பத்மினி) வெள்ளையம்மாள் வீரனைக் காதலிக்கிறாள்.

விரனுக்கு எதிராக நரசப்பனும் குடிலனும் சதி செய்கிறார்கள். அவனைப்பற்றி மன்னனிடம் பொய்க்குற்றச் சாட்டுக்களை சுமத்துகிறார்கள். இதனால் வீரனை குற்றவாளி என்று மன்னர் தீர்மானித்து மாறுகால், மாறுகை வாங்க உத்தரவிடுகிறார்.

கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லப்படுகிறான் வீரன். (தொடரும்)

# இந்திய சார்பு ரணில் அரசுடன் சீனா எப்படி நெருங்கியது?



இலங்கையின் பிரதமரின் சீனாவிற்கான பயணத்தின் இறுதியில், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது மகிந்த ஆட்சிக்காலத்தில் இருந்த நிலைக்கு மீளத் திரும்பிவிட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ‘ரைம்ஸ் ஒவ் இந்தியா’ வலைத் தளத்தில், ஆர்.எஸ். வாசன் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பைத் தமது கைகளில் எடுத்தபோது, தேசிய பொருளாதாரம் மற்றும் வெளிவிவகாரக் கோட்பாடு ஆகியன தொடர்பாக முன்னாள் மகிந்த ராஜபகஷ அரசாங்கத்தால் விடப்பட்ட தவறுகள் சரிசெய்யப்படும் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். இலங்கையின் தேசிய நலன்களை மகிந்த ராஜபக்ஷ சீனாவிற்கு ஒட்டுமொத்தமாக விற்றுவிட்டதாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சீனாவிற்குப் பயணம் செய்த போது இப்பயணம் தொடர்பாக மிகப் பாரிய எதிர்பார்ப்புக் காணப்பட்டது. ஆனால், ரணிலின் அண்மைய சீனப் பயணமானது ஏமாற்றத்தைத் தந்துள்ளது. அதாவது வரும் பத்தாண்டுகளில் பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களில் பல தரப்பினர் பாரியளவில் பங்கெடுக்க முடியும் என்ற உந்துதலை வழங்கியுள்ளது.

1.4 பில்லியன் டொலர் செலவில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டமானது ரணிலின் சீனப் பயணத்தின் போது முதன்மைப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது கடலிலிருந்து 233 ஹெக்ரேயர் பரப்பில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இதில் 88 ஹெக்ரேயர் பரப்பானது சீனாவிற்கு 99 ஆண்டுக் குத்தகையிலும் 20 ஹெக்ரேயர் நிரந்தரக் குத்தகையிலும் வழங்கப்படுவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் மூலம் இச்சிறப்பு வலயத்தில் சீனச் சட்டம் அமுல்படுத்தப்பட முடியும்.

சீனாவால் முதலீடு செய்யப்பட்ட சில ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட சூழல்சார் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு கொழும்புத் துறைமுக நகரத் திட்டமும் இடைநிறுத்தப்பட்டது. சீனாவால் முதலீடு செய்யப்பட்ட திட்டங்கள் மூலம் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் நாடுகளுக்கு வர்த்தக மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பதற்கான எவ்வித வாய்ப்பும் காணப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.

ஏனெனில் சீனாவானது தனது நாட்டைச் சேர்ந்த கைதிகளைப் பயன்படுத்தி இத்திட்டங்களை மேற்கொள்வதால் உள்நாட்டு மக்களுக்கான தொழில் வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளதை ஆபிரிக்க நாடுகளில் காணமுடியும்.

ஆனால் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு ஓர் ஆண்டின் பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கு 8 பில்லியன் டொலர் கடன் சுமை அதிகரித்தது. இதனால் இதனை ஈடுசெய்வதற்கு எந்தவொரு தெரிவும் காணப்படாததால், ரணில் விக்கிரமசிங்க சீனாவிற் கான பயணத்தை மேற்கொண்டதுடன் இத்திட்டத்தைத் தொடர்வதற்கான சமிக்ஞையையும் வழங்கினார்.

இலங்கையானது சீனாவின் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளது என்பதைப் பயன்படுத்திய சீனா இது தொடர்பில் அழுத்தம் கொடுத்தது. இதனால் இலங்கையும் சீனாவுடனான உறவைப் புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சீனாவிற்கான தனது அண்மைய பயணத்தின் போது பொருளாதாரம், முதலீடுகள், தொழிநுட்பம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, நிதிச் சேவைகள், நீர் விநியோகம் மற்றும் விஞ்ஞானம் ஆகியன உட்பட பல்வேறு ஒத்துழைப்பு உடன்பாட்டை ரணில் ஏற்றுக்கொண்டார். இலங்கையானது ஏற்கனவே சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(தொடரும்)

வாக்குறுதி கொடுப்பவன் அதற்கு கடனாளி ஆகிறான்.

-தலாமுத்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒருபோதும் தமிழருக்கு உதவா!

முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இப்படியொரு முடிவுக்கு வந்தது ஆச்சரியமாயினும் இதில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மையை தமிழ் மக்கள் நின்று நிதானமாக ஆராயவேண்டியது அவசியமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை 2016ஆம் ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற விடயம் பிசுபிசுத்துப் போவது உறுதியாகி விட்டது.

எனினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் 2016இல் தீர்வு என்று ஏற்கெனவே கூறியதன் அடிப்படையிலேயே கடந்த பொதுத்தேர்தலில் தனது கட்சிக்கான வெற்றியை தக்கவைத்திருந்தார்.

இந்நிலையில் 2016இல் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படாது என்பது நிறுதிட்டமாகி விட்ட நிலையில்,

2016இல் தீர்வு என்று முன்னர் கூறியது தனது சொந்தக் கருத்து என சம்பந்தர் தெரிவித்தார்.

இதனால் பலத்த விமர்சனங்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மாற்றுவழி ஒன்றை அவசரமாக முன்வைக்காவிட்டால், கூட்டமைப்புக்கு மிகப்பெரிய தோர் நெருக்கடி ஏற்படும் என்று கருதிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், அவசர அவசரமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுசும் ஒன்றுபட்டு அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் என்ற படத்தைக் காட்சிக்கு விட்டுள்ளனர்.

வடபுலத்தில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியமைக்காக தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று கூறிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களை காப்பாற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிச்சயம் முன்வரும் என்பது தெரிந்த விடயமே.

ஏனெனில் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடைபெறக்கூடாது என்பதில் இப்போது இணைந்துள்ள கூட்டமைப்பு-முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் மிகவும் உறுதியாக இருந்தனர்.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்துக்குச் சென்று போர்க்குற்ற விசாரணையை தடுப்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடுமையாகப் பாடுபட்டார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட போது, ஒரு சகோதர இனமாகிய முஸ்லிம் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் எல்லாவற்றையும் இழந்து வெந்த மனதோடு வந்த தமிழ் மக்களுக்கு வார்த்தையாலேனும் ஆறுதல் கூறாத முஸ்லிம் அரசியல் கட்சிகள்; விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்தை முதன்மைப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தினர். இதற்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரு சிலரும் ஆமாம் போட்டனர்.

ஆக, தமிழ் மக்கள் வெந்து நொந்து போன போது ஏன்? என்று கேட்காத ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் தமிழ் மக்களுடன்-தமிழ் அரசியல் தலைமையுடன் இணைந்து அதிகாரப் பரவலாக்கலைக் கேட்க மாட்டாது என்பது சர்வ நிச்சயம்.

இருந்தும் கூட்டமைப்புக்கு தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் அக்கட்சியைக் காப்பாற்றுவதற்காக மட்டும் ஒற்றுமை போல நடித்தல் நடக்கிறதே தவிர மற்றும் படி முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் தமிழர்களுடன் இணைந்து அதிகாரப் பகிர்வைக் கேட்க முன்வராது என்பதே உண்மை. இந்த உண்மையை காலம் நிச்சயம் நமக்கு உணர்த்தும்

# எண்ணெய் ஆலையில் பயங்கர வெடிவிபத்து

## 3 பேர் உயிரிழப்பு

(வெராகுருஸ்)

மெக்சிகோவின் தென் கிழக்கில் உள்ள வெராகுருஸ் மாகாணத்தில் உள்ள துறைமுக நகர் கோட்சாகோல்காஸ். இங்கு அரசுக்கு சொந்தமான பெமக்ஸ் எனப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உள்ளது.

இந்த ஆலையில் நேற்று முன்தினம் வழக்கம் போல ஏராளமான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் ஆலையின் ஒரு பகுதியில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

குறுகிய நேரத்தில் ஆலை முழுவதும் தீப்பற்றி கொழுந்து விட்டு எரிய தொடங்கியது. தொழிலாளர்கள் அனைவரும் உயிரை காப்பாற்றிக் கொள்ள அலறி அடித்துக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர். அந்த பகுதியே புகை மண்டலமாக காட்சியளித்தது.

உடனடியாக தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். நீண்ட நேர போராட்டத்துக்கு பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இருந்த போதிலும் இந்த கோர விபத்தில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 136 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 13 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து உடனடியாக தெரியவரவில்லை. மெக்சிகோவில் உள்ள எண்ணெய் ஆலைகளில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவது வாடிக்கையாகி உள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இதே ஆலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி தொழிலாளர் ஒருவர் உயிரிழந்தார். அதே போல் கடந்த 2013-ம் ஆண்டு மெக்சிக்கோ நகரில் உள்ள பெமக்ஸ் ஆலையின் தலைமையகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 37 பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது. (இ-5)

## இலவச திரைத்துறை பயிற்சிப் பட்டறை

யாழ்.என்டர்ரைன்மன்ற் மற்றும் பனைமரக்காடு கலைக்குழு இணைந்து நடத்தும் இரண்டு நாட்கள் இலவச திரைத்துறைப் பயிற்சிப் பட்டறை நிகழ்வில் இலங்கையின் முன்னணி இயக்குநர் பிரசன்ன விதானகே வழிகாட்டலில் முற்போக்கு தமிழ் சிங்கள வளவாளர்கள் பயிற்சி வழங்கவுள்ளனர்.

இதில் 23 ஆம் திகதி திரைக்கதை பயிற்சியும் 24 ஆம் திகதி திரைக்கதை மற்றும் நடிப்பு பயிற்சியும் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகள் யாழ்ப்பாணம் கச்சேரியடி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறும். (இ

## கும்பாபிஷேகம்

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.28 மணி முதல் 11.15 மணிவரை நடைபெறும்.(இ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமை ப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து **யாழ் பிரதேசத்தில** மாதகல், ஜம்பு கோளப் பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர் மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதியிலிருந்து புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதியிலிருந்து புகையிரதக் கடவை வரை, முள்ளி நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ்.மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்டெட் (துளசி மகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், றக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம, US ஹொட்டல், பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (இ.மி.ச), கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), நாவற்குழி சங்கேன் கொன்ஸ்ரக்சன் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, முல்லைத்தீவு விமானப் படை- I மற்றும II, முல்லைத்தீவு 59வது படைப் பிரிவு (14ESR- 01 மற்றும 14ESR- 02), வற்றாப்பளை விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், மாரியன் பற்று நோக்கு கூட்டுறவுச் சங்கம் குமுழமுனை, மத்திய வங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், North Cargill's Agri foods, 651வது படைப்பிரிவு முகாம், 652வது படைப் பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவ பாசறை II, இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார்குளம், வெள்ளிமலை, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## மாத்தறை சார்க் கலாசார நிலையம் தென்னாசிய கூட்டுறவை வலுப்படுத்தும்

### ஜனாதிபதி மைத்திரி கருத்து

(கொழும்பு)

மாத்தறையில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள சார்க் கலாசார நிலையம் தெனனாசிய மக்களுக்கிடையில் கலாசார கூட்டுறவை மேம்படுத்துவதற்குப் பெரிதும் உதவும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சார்க் செயலாளர் நாயகம் அர்ஜுன் தாப்பா நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போதே ஜனாதிபதி இதனைத தெரிவித்தார்.

மாத்தறையில் எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சார்க் கலாசார நிலையத்தின் நிர்மாணப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஜனாதிபதி வினவினார்.

இலங்கை எந்தவொரு கருத்திட்டத்திற்கும் சார்க் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ஒரு மில்லியன் தொடக்கம் 1.5 மில்லியன் வரையிலான அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கும் என்றும் தாப்பா தெரிவித்தார்.

இதன்படி முன்மொழிவுகளைக் கத்மண்டுவிலுள்ள சார்க் செயலகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு வெளிவிவகார அமைச்சுக்கு தாம் அறிவுறுத்தல் வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை இவ்வருட இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள சுகாதார அமைச்சர்கள் மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சார்க் செயலாளர் நாயகம் இதன் போது அழைப்பு விடுத்தார். (செ-12)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



ஒழுக்க நெறி நில், வீரனாயிரு. முழு மனமும் ஊன்றியவனாயிரு. பிறழாத ஒழுக்கமுடையவனாயிரு. எல்லையற்ற துணிவுடையவனாக இரு. மதத்தின் கொள்கைகளைப் பற்றி உன் மூளையைக் குழப்பாதே. கோழைகளே பாவம் புரிவர். வீரர்கள் ஒருபோதும் புரியார். ஒவ்வொருவரையும் நேசிக்க முயற்சி செய்.


வஞ்சனையால் பெரும் பணி எதையும் செய்ய இயலாது. அன்பாலும் உண்மையை நாடும் ஆசையாலும் பேராற்றலாலும் தான் பெரும் செயல்கள் யாவும் நிறைவேறுகின்றன. ஆதலால் உனது ஆண்மையை வெளிப்படுத்து.


இச்சமயம் மிகவும் வேண்டியது ராஜஸம். சாத்வீக மனிதர் என நீங்கள் கருதுபவர்களில் நூற்றுக்கு தொண்ணூறுக்கு மேற்பட்டவர்கள்ஆழ்ந்த தாமத்தில் மூழ்கியவர்களே. இப்போது நமக்கு வேண்டுவது ஏராளமான அளவுள்ள ராஜஸ சக்தியே.காரணம் நாடு முழுவதும் தாமசம் எனும் போர்வையால் மூடப்பட்டுள்ளதே. இந்நாட்டு மக்களுக்கு உணவும் உடையும் அளிக்கவேண்டும். அவர்களை விழிக்கச் செய்யவேண்டும். இன்னும் மிகுந்த சுறுசுறுப்பு உடையவர்களாக இருக்கவேண்டும். இல்லையேல் அவர்கள் மரத்தையும் கல்லையும் போல சடமாகி விடுவர்.

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் -2016

# கொக்குவில் கே.சி.சி.சி. திருநெல்வேலி சி.சி.

இறுதிப் போட்டிக்கு தகுதி





கேசிசிசிவெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்தியசனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் 1991 ஆம் ஆண்டில் இருந்து 23 வருடங்களாக நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு அரையிறுதி ஆட்டங்களில் காலை நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி சி.சி.அணி மானிப்பாய் பரீஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 30 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களை பெற்றது. நிதர்ஸன் -36, ஆன்சிவி-55, சாஜித்-31, சேன்தன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் சுரேந்திரன் -03, சுரேஸ்-02, சதீஸ் , பிரபு தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி. அணி 27.3 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களை பெற்றது. அசோக்-50, லவகாந்-26, சிவராஜ் ஆட்டமிழக்காது -35, சுரேஸ்-34, பிரபு ஆட்டமிழக்காது-38 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கோபிரசாத்-03, நிதர்ஸன், உமாசங்கர் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

மாலை நடைபெற்ற போட்டியில் கே.சி.சி.சி. அணி சென்றலைட்ஸ் அணியை 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 30 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 276 ஓட்டங்களை பெற்றது யனுதாஸ் -62, ஆதித்தன்-49, ஜெயரூபன்-36, ராகுலன்-30, சபாநந்-28, சத்யன்-27 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் வதுஸன் -03, யனோசன், டார்வின், மயூரன், ஜெரிக் துஸாந் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களை பெற்றது. செல்ரன்-52, யனேஸன்-41, யூலியஸ் ஆட்டமிழக்காது 29, வதூசனன் 29, ஜேம்ஸ்-25, வினோத்-29 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் உத்தமன்-03 , ராகுலன், சிலோஜன், சத்யன், சாம்பவன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். மேற்படி இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று 23.04.2016 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கடந்த வருடம் இவ்வெற்றிக் கிண்ணத்தை திருநெல்வேலி சி.சி. அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (கு)





வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற போது...

## சிறீஸ்கந்தன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி

சுதுமலை தெற்கு இளைஞர் கழகமும் எஸ்.எஸ்.சி. விளையாட் டுக் கழகமும் இணைந்து நடத்தும் அமரர் சிறீஸ்கந்தன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி சனி,ஞாயிறு தினங் களில் நடைபெறவுள்ளது. பங்கு பற்ற விரும்பும் அணிகள் 077 969 29 84 077 550 8693 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். வெற்றிபெறும் அணிக்கு வெற்றிக்கண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (கு)

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄

புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் புற்றளையில் மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியினை நடத்துகின்றது.

அதன்படி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புலோலி ஸ்டார் போய்ஸ் விளையாட்டுக்கழகமும்

முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் போட்டியில் உபய கதிர்காமம் UK அணியை எதிர்த்து தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகமும் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் கொக்குவில் ஏ.பி. விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானம்ஸ விளையாட்டுக்கழகமும் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் போட்டியில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄

யாழ். மாவட்ட விளையாட்டு விழாவினை முன்னிட்டு அரியாலை விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாண அணியை எதிர்த்து சாவகச்சேரி அணியும் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுவில் அணியை எதிர்த்து வேலணை அணியும் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் நல்லூர் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் அணியும் மோதவுள்ளது.

⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄

அணிக்கு ஆறு பேர் கொண்ட 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது இன்று சனி மற்றும் நாளை ஞாயிறு தினங்களில் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

**தேர்ந்தெடுக்கப்பட்ட 16 கழகங்கள் பங்குபற்றும் இத்தொடரின் முதல் சுற்றுப்போட்டிகள் சனிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகும் என போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.** (கு)

## வடக்கின் உதைபந்தாட்ட சமர் இன்று; விண்மீன்-றோயல் பலப்பரீட்சை







ஊரெழு றோயல் விளையாட்டு கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் வடக்கின் சமர் உதைப் பந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை இடம் பெறும் இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் அணி கஜந்தன் தலைமையிலான ஊரெழு றோயல் அணியுடன் மோதவுள்ளது. இரு அணிகளும் சம பலம் பொருந்தியதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை போட்டி இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறும். (கு)

# 3 வீடுகள்; பஸ் மீது தாக்குதல்...















யாழ் நகர் பகுதியில் உள்ள 4 வெவ்வேறு இடங்களில் ஆயுதங்களுடன் சுற்றிய இளைஞர் குழுவினரால் 3 வீடுகள் ஒரு மணி நேர இடைவெளிக்குள் காட்டுமிராண்டிதனமாக சேதமாக்கப்பட்டதுடன் தென்னிலங்கையில் இருந்து வந்த தனியார் பேருந்து ஒன்றும் மீதும் கற்கள்வீசி சேதமாக்கப்பட்ட அடாவடிச்சம்பவம்ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றுள்ளது.

யாழ் நகர் பகுதியில் நேற்றைய தினம் அதிகாலை 2 மணி தொடக்கம் 3 மணி வரையான நேர இடைவெளியில் குறித்த விஷமத்தனமான தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் நேற்றைய தினம் அதிகாலை 2 மணியளவில் 3 மோட்டார் சைக்கிள்களில் சென்ற 7 பேர் அடங்கிய ஆயுத குழுவினர் அரியாலை நாவலர் வீதி பகுதியில் அமைந்துள்ள வீட்டின் கதவை உதைந்து வீட்டினுள் சென்று கற்களால் வீசி தாக்கியதுடன் வீட்டின் முன் நின்ற வாழை மரங்களை வெட்டியும் சாராயப் போத்தல்களால் யன்னல்கள், சுவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சத்தம் கேட்டு அருகில் உள்ள வீடுகளில் மின் விளக்கு ஒளிர்ந்தவுடன் வீட்டின் மதில் மேலால் ஏறிப்பாய்ந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் சோமசுந்தரம் அவனியூ ரயில் கடவைக்கு அருகில் உள்ள வீட்டு வளவினுள் சென்று கற்களால் எறிந்து வீட்டின் கதவு மற்றும் யன்னல் கண்ணாடிகளை சேதமாக்கி விட்டு சென்றுள்ளனர்.

தொடர்ந்து அரசடி வீதி கந்தர்மட சந்திக்கு அருகில் அமைந்துள்ள் உள்ள வீடு ஒன்றில் புகுந்த ஆயுததாரிகள் கதவினை வாளினால் சரமாரியாக கொத்தியதுடன் கற்கள் வீசி வீட்டின் யன்னல் கண்ணாடிகளை உடைத்துள்ளனர். அத்துடன் வீட்டின் முன் நின்றிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளனர்.

குறித்தநேர இடைவெளிக்குள் யாழ்.கனகரட்ணம் வீதியில் அமைந்துள்ள தங்குமிட விடுதி ஒன்றுக்கு முன்னால் தரித்து நின்ற தென்னிலங்கையில் இருந்து பயணிகளை ஏற்றி வந்திருந்த பயணிகள் பேருந்தின் முன், பின் மற்றும் ஒரு பக்க கண்ணாடிகள் அனைத்தும் கற்கள் வீசப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த விசமத்தனமான செயல் குறித்த ஒரு இளைஞர் குழுவினால் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மோதலின் வெளிப்பாடாக இருக்கலாம் என பொலிஸாரின் விசாரணைகளில் மூலம் சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்றவுடன் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தும் உடனடியாக பொலிஸார் அங்குவரவில்லை என்றும் 2 மணித்தியாலங்களின் பின்னரே பொலிஸார் சம்பவ இடங்களுக்கு வந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக நேற்றிரவு வரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழில் மாணவர்களுக்கிடையிலான மோதலினால் மாணவர்கள் ஆயுதங்களுடன கைது செய்யப்படுவதும் தொடர்ச்சியாக பல்வேறு இடங்களில் இவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதும் பொது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தினை உருவாக்கியுள்ளது. (செ-9)

## "சமஷ்டியும் தமி...

யுடனும் பேச இருந்த நான் யாழ் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றேன். எப்பொழுதுமே நேரத்தை வீணாக்க எனக்கு விருப்பமில்லை. கட்டிலில் படுத்திருந்த என்னை உங்களுக்கான கருத்துமடல் என்ற எண்ணம் உசுப்பேற்றிவிட்டது. தொடர்ந்து படுக்க முடியாத நிலை. சற்று நேரத்திற்கு முன்தான் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் கருத்தொன்றை வலம்புரியில் வாசித்தேன். தமிழ் அரசியல் கட்சிகளே சமஷ்டியைக் கோருகின்றன. -தமிழ் மக்கள் அதைக் கோரவில்லை - ஜே.வி.பி என்று முன்பக்கத்தில் தலையங்கம் இருந்தது.

மேற்படி கருத்தை முன்வைத்து முதல் மடலை முடித்தால் என்ன என்றது மனம். உடனே எழுதத் தொடங்கிவிட்டேன். உண்மையில் தமிழ் மக்கள் சமஷ்டியைக் கோரவில்லையா? அன்று தொடக்கம் இன்று வரையில் பெரும்பான்மைக் கட்சியாக வடக்கிலும் கிழக்கிலும் நிலைபெற்றிருக்கும் ஒரே தமிழ்க் கட்சி என்றால் அது·தமிழரசுக் கட்சி. அதைத்தான் ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி என்று கூறிவந்தனர் தென்னவர். சமஷ்டிக் கட்சியின் முக்கியமான கருத்து நாட்டில் சமஷ்டி ஆட்சி நடக்க வேண்டும் என்பதே. தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு என்று ஒரு அதிகார அலகு இருக்க வேண்டும்.

சிங்களவருக்கு எவ்வாறு சிங்கள மொழியும்,சிங்கள வசிப்பிடங்களும் முக்கியமோ அவ்வாறே தமிழ் மக்களுக்கும் அவர்க்ள் மொழியும் சரித்திரபூர்வமான வாழ்விடங்களும் முக்கியமானவை என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். ரில்வின் சில்வா இவற்றை அறியாதவர் அல்ல. அண்மைக் காலங்களில் எமது அடிப்படைகளை நாம் ஆணித்தரமாக எடுத்து விளம்பத் தொடங்கியதும் கட்சிகள் பொது அமைப்புக்கள் எதைக் கூறினாலும் தமிழ் மக்கள் ஒருவேளை அவர்கள் கருத்துக்களை ஆதரிக்க மாட்டார்கள் என்ற நப்பாசை ரில்வினைப் பற்றிக் கொண்டுள்ளது போலும். தமிழ் மக்கள் எதைக் கொடுத்தாலும் திருப்திப்படுவார்கள் என்ற எண்ணம் அவர் மனதில் மேலோங்கியிருக்க வேண்டும். அல்லது அவர்களை வெருட்டி வழிக்குக் கொண்டுவரலாம் என்று கூட அவர் நினைத்திருக்கலாம்.

சமஷ்டி முறை என்பது வெறும் அரசியல் அல்லது சட்டரீதியான தீர்வு மட்டுமல்ல. அது யதார்த்தமுமாகும். போரின் போது சேர்ந்தோ சேராமலோ பங்கேற்ற புதிய அரசியல் கட்சிகள் கூட சமஷ்டி முறைத் தீர்வையே தேர்ந்தெடுத்துள்ளன. மக்களுக்கு சமஷ்டி மீது விருப்பில்லை என்று கூறும் ரில்வின் சில்வா, தமிழ் மக்கள் இதுகாறும் சமஷ்டி முறையையே தேர்தல்களில் ஆதரித்து வந்தார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் சமஷ்டி என்ற சொல்லுக்கு அவர் காட்டும் அச்சம் வியப்பைத் தருகின்றது. ஏதோ தீண்டத்தகாததைத் தமிழ் அரசியல் கட்சிகள் தீண்டியுள்ளதாகவும் அதிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு தன்னைச் சார்ந்துள்ளதாகவும் நினைத்து அவர் பேசுவது விந்தையாகத் இருக்கின்றது. ஏதோவிதமான சமஷ்டி வழிமுறை ஒன்று தான் சிங்கள மக்களுடன் தமிழ்ப் பேசும் மக்கள் சுய மரியாதையுடன் சேர்ந்துவாழக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஊர்ஜிதம் செய்யும்.

தமிழ்ப் பேசும் மக்கள் சமஷ்டி வழிமுறையை நிராகரித்துள்ளார்கள் என்றால் தமது சுயமரியாதையை விலை பேச ஆயத்தமாக உள்ளார்கள் என்று அர்த்தம். சமஷ்டி முறை ஏகாதிபத்தியத்தை மகிழ்ச்சிப்படுத்தவல்லது என்று கூறும் ரில்வின் சில்வா, தமது கட்சி சார்பில் எமது மக்களுக்குத் தரவிழைவதைப் பார்த்தோமானால் ஒற்றையாட்சியின் கீழ் சகல மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள். இதனால் இனங்கள் அண்மைப்படுத்தப்படுவன என்றுள்ளார். தேசிய ஒற்றுமை வலியுறுத்தப்படும் என்கின்றார். பொதுப் பிரச்சினைகளுக்கு சகல இனங்களும் சேர்ந்து முகம் கொடுப்பன என்கின்றார்.

ரில்வின் சில்வா, சரித்திரத்தை மறந்து பேசுகின்றார். ஒரு காலத்தில் சமஷ்டி வேண்டாம் என்று கூறியவர்கள் தமிழ் மக்கள். 1926ல் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க, ஒக்ஸ்பொர்ட் சர்வதேச கலாசாலையில் படித்துவிட்டு வந்து இங்கு பேசிய போது ஏதோ வகையிலான சமஷ்டி முறையே எமக்குச் சிறந்தது என்றார். அப்போது தமிழர்கள் இல்லை அது தேவையில்லை. சம உரிமைகள் தற்போது எமக்கு ஆங்கிலேயரின் கீழ் கிடைக்கின்றன. நாட்டின் எல்லாப் பாகங்களிலும் எம்மால் வசிக்கவும, தொழில் புரியவும், காணிகளை வாங்கி விற்கவும் முடிகின்றது. ஆனால் சமஷ்டி எம்மைத் தனிமைப்படுத்தி விடும் என்றார்கள். சமஷ்டியை மறுத்தார்கள்.

உண்மையில் தமிழ்ப் பேசும் மக்களைத் தனிமைப்படுத்தி வட கிழக்கிற்குள் அடைத்து வைக்கும் எண்ணத்துடன் தான் பண்டாரநாயக்கா அன்று சமஷ்டியை வலியுறுத்த விழைந்தார் என்பதே எனது கணிப்பு. அது எம்மால் ஏற்கப்படாததால்த்தான் அவர் பதவிக்கு வந்ததும் சமஷ்டி கோரிய எம்முடன் சேர்ந்து சமஷ்டிக்கு வழி வகுக்காமல் அவர் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார். அத்துடன் வன் கலவரங்களை ஊக்குவித்து இலங்கையில் பரவலாக வாழ்ந்து வந்த தமிழ மக்களை அவர்கள் வாழ்ந்து வந்த தெற்குப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததும் ரில்வின் சில்வாவின் கருத்தை சிங்கள மக்கள் முன் வைத்திருந்தார்களானால் அதனைத தமிழ் மக்கள் ஏற்றிருப்பார்கள். சகல மக்களுக்கும் சம உரிமை என்ற கருத்து எமக்கெல்லாம் ஏற்புடைத்தாக இருந்திருக்கும். நாட்டின் தெற்குப் புறங்களில் இருந்து கொழும்பில் இருந்து தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டு வடகிழக்கு மாகாணங்களில் தஞ்சம் புகுந்த பின்னர் சகலருக்கும் சம உரிமைகள் வழங்குகின்றோம் என்பது மேலும் எம்மை பெரும்பான்மைச் சமூகத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விழையும் ஒரு வழிமுறையாகவே தெரிகின்றது. ஏன் என்றால் நாடுபூராகவும் பல இடங்களில் தமிழ்ப் பேசும் மக்களின்வாழ்க்கை முறையும், வாழ்வாதாரங்களும், கல்வியும் மொழி உரித்துக்களும் பறிபோய்விட்டன.

அதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் போர் தொடுத்து போரினால் சகலதையும் பறிகொடுத்து நிற்கின்றனர். நடைமுறையில் இராணுவ ஆட்சியின் கீழ் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பெரும்பான்மை இனமானது சகல உரிமைகளையும் தன் வசம் ஐக்கியப்படுத்தியுள்ளது. ஒற்றையாட்சி முறை நடைபெறுகின்றது. அதன் கீழ் தமிழ் மக்களின் காணிகள் பறிபோகின்றன. அவர்களின் பாரம்பரிய இடங்களில் வெளியார் வந்து வாழ அரசாங்கம் வழி வகுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ரில்வின் சில்வா, கூறும் சம உரிமைகள் என்பது தனியுரிமைகளாக இருக்க முடியுமே தவிர குழும உரிமைகளாக முடியாது. அதாவது பெரும்பான்மையினத்தவர்கள் எமக்கிடும் பிச்சையாகவே இச் சம உரிமைகளை நாம் கருத வேண்டியிருக்கும்.

எனவே பூர்வ வாழ்விடங்களை,எமது கலாசார சூழலை நாம் பாதுகாத்துப் பேணி வர வேண்டுமானால் எமது சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டு நாமும் இந் நாட்டு மக்களே என்ற எண்ணத்தை வலியுறுத்த ஆவன செய்ய வேண்டும். அதற்கு சமஷ்டி வழிமுறையே சிறந்தது. சம உரிமைகள் என்பது வெறும் கண்துடைப்பு. என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# இருதேசம்...

அரசினால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றது. இதனடிப் படையில் வடக்கு மாகாண சபையும், புதிய அரசமைப்புக்கான கருத்துக்களை முன்வைப்பதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது.

இந்தக் குழுவினர் மூன்று உப பிரிவுகளாகப் பிரிந்து அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வரலாறு சார்ந்த விடயம், அரசியல் ரீதியான விடயம், அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விடயம் என்று மூன்று குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டிருந்தது

இந்த மூன்று குழுக்களும் ஒன்றுகூடி இறுதி வரைபை தயாரித்து அதனை நேற்றையதினம் வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களது ஒப்புதல்களுக்காக சமர்ப்பித்தனர்.

அதில் முக்கியமாக கூறப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கையை தழுவி காணப்படுகின்றது.

இந்தியாவில் மாநிலங்கள் மொழி ரீதியாக பிரிக்கப்பட்டு உள்ளதை போன்று இலங்கையானது அடிப்படையில் இரண்டு பரந்த மாநிலங்களாக அதாவது பெரும்பான்மையாக தமிழ் பேசும் பிரதேசத்தை கொண்ட வட மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு மாநிலமாகவும் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

சிங்களம் பேசுவோரினை கொண்ட மாநிலமானது அதனுள் பிரிக்கப்படல் வேண்டுமா? என்ற கேள்வியானது சிங்கள மக்களால் தீர்மானிக்கப்பட முடியும், இவ்விரு பரந்த மொழி ரீதியான மாநிலங்களிலும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் வடக்கு மற்றும் கிழக்கில் ஓர் அலகாகவும் தமிழ் பேசும் மலையக தமிழர்கள் நாட்டின் ஏனைய பகுதியில் ஒரு அலகாகவும் இனங்காணப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

என்றவாறாக அது தொடர்ந்து செல்கின்றது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள இருமாநிலங்கள் என்ற விடயம் இரு தேசம் ஒரு நாடு என்ற அர்த்தத்தை கொண்டிருப்பதாக கூறிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் இது மாற்றியமைக்கப்படல் வேண்டும் என விடாப்பிடியாக நின்றார்.

மேலும் இவ் விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு மாறுபட்டது எனவும், கூட்டமைப்புக்கு வெளியே உள்ளவர்களால் தான் இது கூறப்பட்டு வருகின்றது என அவர் குறிப்பட்டார்.

இதே கருத்துப்பட உறுப்பினர் அஷ்மினும் ஆரனோல்ட்டும் குறித்த தீர்வு திட்டம் மீதான விவாதத்தை இன்னொரு நாள் மீண்டும் நடத்த வேண்டும் என கூறினார்கள்.

எனினும் உறுப்பினர்களான சர்வேஸ்வரன் மற்றும் சிவாஜிலிங்கம், அவைத்தலைவர் சிவஞானம் ஆகியோர் இரு மாநிலங்கள் என்ற விடயம் குறிப்பிடப்படாவிட்டால் அது தீர்வுத்திட்டத்தின் ஒட்டுமொத்த வலிமையையும் இழக்க செய்து விடும் என வாதிட்டனர்.

எனினும் விடாப்பிடியாக நின்ற உறுப்பினர் லிங்கநாதன் தொடர்ந்தும் அதற்கு மறுப்பு தெரிவித்து வந்தார்.

அதேபோல் சுகிர்தனும் இரு தேசம் ஒரு நாடு என்பதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என முரண்டு பிடித்தார். இறுதியில் அந்த இரண்டு மாநிலங்களுடனே தீர்வு திட்டம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த தீர்வு திட்டம் எதிர்வரும் முப்பதாம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான இரா.சம்பந்தனிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை மேற்படி தீர்வுத் திட்டத்தில் தமிழ்மக்கள் ஒரு தேசம் மற்றும் இறையாண்மை என்பன வலியுறுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# தீர்வுத்திட்டம்...

இதில் எதிர்கட்சியில் இருவர் காணப்பட்டனர்.

வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு மற்றும் அரசியல் யாப்புக்கான கொள்கை வரைபு மீதான விவாதம் நடைபெற்றது. இதன் போதே தீர்வு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசினால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றது. இதனடிப் படையில் வடக்கு மாகாண சபையும், புதிய அரசமைப்புக்கான கருத்துக்களை முன்வைப்பதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது.

இந்தக் குழுவினர் மூன்று உப பிரிவுகளாகப் பிரிந்து அரசியல் தீர்வுத்திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வரலாறு சார்ந்த விடயம், அரசியல ரீதியான விடயம், அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விடயம் என்று மூன்று குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டிருந்தது.

பதின்மூன்றாவது திருத்தத்தை தாண்டிய அதேவேளை சமஷ்டியை ஒத்த வகையில் தீர்வுத் திட்டம் இருக்க வேண்டும் என்று கருத்தும் தீர்வு திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாநில சுயாட்சியை மையமாக வைத்தே அரசியல் தீர்வுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தீர்வுத் திட்டம் மீதான விவாதம் நேற்று காலை பத்து மணிமுதல் மாலை ஐந்து மணி வரை நீடித்திருந்தது.

இதன் போது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது திருத்தங்களை முன்வைத்தனர். எனினும் குறித்த தீர்வு திட்டத்தை தான் ஒருவரே தயாரித்ததாக ஒருவர் காட்ட முயன்றதனால், உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு தெரிவிப்பதில் பின்னடிப்பு தெரிவித்தனர்.

குறித்த விவாதம் நடைபெற்று கொண்டு இருக்கும் போதே பெரும்பாலான உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருந்தனர். இருந்தும் மதிய இடைவேளையின் பின்னர் ஓரளவிற்கு ஒத்து போயிருந்தனர்.

இதனால் கடும் இழுபறிகளுக்கு மத்தியில் குறித்த தீர்வு திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. (செ-4)

# முன்னாள்...

குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஊடறுப்பு பிரிவில் இருந்து புனர்வாழ்வு பெறவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர் வவுனியா பயங்கரவாத தடுப்பு முகாமிற்கு நேற்றிரவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபருக்கு திருமணமாகி 2 பிள்ளைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-277)

# 5 கைக்குண்டு...

கின்ற பாதையில் இருந்து 30 மீற்றர்க்கு அப்பால் உள்ள காட்டுப்பகுதியில் கைக்குண்டுகளை கண்டதாக விறகு வெட்ட சென்ற ஒருவரினால் நேற்று 11 மணியளவில் இரணைமடுவில் அமைந்துள்ள இராணுவ படைத் தளத்திற்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து இராணுவ குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த குண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினர் குறித்த காட்டு பகுதியில் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த 5 கைக்குண்டுகளை நேற்று பி.ப 2.45 மணிக்கு மீட்டுள்ளனர்.

இக்கைக்குண்டுகள் விடுதலைப புலிகளின் காலத்தில் அவர்களினால் செய்யப்பட்டவை என தெரிவிக்கபடுகிறது. (செ-15,281)

# 7 தூதுவர்கள்...

லோஸ் ஈ ஓர்லாண்டோ (H.E. Carlos E.Orlando),

துருக்மெனிக்ஸ்தான் குடியரசின் தூதுவராக,பிரகாத் எச்.டேர்ட்லி (Parakhat H. Durdyev),

ஹங்கேரி நாட்டின் தூதுவராக, குயுலோ பெத்ஓ (Gyula PethO), சுலோவேனியா குடியரசின் தூதுவராக சொசெப் டுரொபெனிக் (Zozef Drofenik),

மாலி குடியரசின் தூதுவராக, நியான்கொரோ யே சமேக் (Niankoro Yeah Samake), மொரிசியஸ் நாட்டின் உயரிஸ் தானிகராக, ஜகடிஸ் வர் கொபுர் துன் (Jagdishwar Goburdhun),

மலேசிய நாட்டின் உயரிஸ் தானிகராக, வான் செய்திபின் வான் அப்துல்லாஹ் (Wan Zaidi Bin Wan Abdullah) ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (செ-12)

# முதல்வரை எதி...

சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வாழ்ந்தால் முப்பது கோடியும் சேர்ந்து வாழ்வோம் வீழ்ந்தால் முப்பது கோடியும்சேர்ந்தே வீழ்வோம்என மகாகவி பாரதியின் வீர வசனத்தினையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதில் அரசியல் தீர்வு மற்றும் அரசியல் யாப்புக்கான கொள்கை வரைபு மீதான விவாதம் நடைபெற்றது.

இதன் போது வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபு தொடர்பில் தென்னிலங்கை இனவாத கட்சிகளின் எதிர்ப்பு மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சரினை கைது செய்ய வேண்டுமென சிங்கள ராவய போன்ற இனவாத அமைப்புக்கள் குரல் கொடுத்து வருவதனை சுட்டிக்காட்டியே உறுபபினர்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டதோடு, தனியே முதலமைச்சருக்கு எதிராக போர்க்கொடி தூக்குவது வடக்கு மாகாண சபையின் முப்பது ஆளுங் கட்சி உறுப்பினர்கள் மீது வலிந்து போர் தொடுப்பது போன்றது எனவும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுதிட்ட முன் வரைபு தனியே முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்பவரால் மட்டும் உருவாக்கப்பட்டதல்ல. வடக்கு மாகாண சபையின் அனைத்து உறுப்பினர்களாலும் உருவாக்கப்பட்டதே.

ஆனால் தென்னிலங்கை இனவாத கட்சிகள் வடக்கு மாகாண முதலமைச்சரினை மட்டுமே குறிவைத்து அவரை கைது செய்ய வேண்டும் எனக் குரல் கொடுத்து வருகின்றன.

அவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சர் தனியான ஒருவர் அல்ல. அவர் பின்னால் மாகாண சபை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்பதனை விளங்கி கொள்ள வேண்டும்.

ஆயிரம் உண்டு ஜாதி இதில் அன்னியர் புகுவது என்னடி நீதி?, முப்பது கோடியும் வாழ்வோம் விழின் முப்பது கோடியும் சேர்ந்தே வீழ்வோம் என மகாகவி பாரதியார் கூறியிருந்தார்.

இதற்கு ஏற்றது போலவே நாங்களும் வடக்கு மாகாண முதலமைச்சரினை தனித்து விட மாட்டோம். அவருக்கு பக்க பலமாக நாங்கள் உள்ளோம் என தெரிவித்தார்.

மேலும் தென்னிலங்கை இனவாத கட்சிகள் முதலமைச்சரினை கைது செய்யுமாறு கூக்குரல் இட்டு வருகின்றன.

இவர்கள் ஒன்றை விளங்க வேண்டும். எங்களாலும் இவர்கள் கதைப்பது போன்று கதைக்க முடியும் என ரவிகரன் இனவாத சக்திகளுக்கு பதிலடி கொடுத்தார். (செ-4)


## தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு (ரைப்பிங்), நிழற்பிரதி (போட்டோ கொப்பி) தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
(அண்மையில் உள்ளவர்கள், முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
**பிரகாந்த் போட்டோ கொப்பி சென்ரர்**
**திருநெல்வேலி. T.P : 076 622 4473**
(4277)

## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம் பிற்போடல்

மேற்படி எதிர்வரும் 24.04.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**
(C-4405)

## பதவி வெற்றிடம்

- **கணனி பக்க வடிமைப்பாளர்கள்**
  (அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் ஆண்கள், இரவுக் கடமை)
- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (பயிலுநர்கள் ஆண்கள், பகல் இரவுக் கடமை)
- **இயந்திர இயக்குநர்கள்**
  (பயிலுநர் ஆண்கள், இரவுக் கடமை)
- **தொடர்பாடல் (பெண்)**
  (சிங்களம் பேசத் தெரிந்தவர், பகல் கடமை)

குறிப்பு:- யாழ்.நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன்
**24.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு**
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள **வலம்புரி** அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

**- பொது முகாமையாளர்**

## வேலைவாய்ப்பு-பெண்கள் மட்டும்

கோப்பாயில் இயங்கிக்கொண்டு இருக்கும் பெண்களுக்கான ஆடை உற்பத்தி நிறுவனத்துக்கு தையல் பயிலுனர்கள் உடன் தேவை. பருத்திதுறை பேருந்து வழித்தடத்தில் இருந்தும், கோப்பாய் சுற்றாடலில் 10KMக்குள் இருந்து வருவோருக்கும் முன்னுரிமை. சம்பளம் பேசி தீர்மானிக்கலாம். EPF, ETF வழங்கப்படும்.

அளவெடுத்து வெட்டி தைக்க தெரிந்தவர்களும் உடன் தேவை.
சந்தைப்படுத்தலில் திறமையானவர்கள் இருபாலரும் தேவை.

விபரங்களுக்கு, பசுமை உற்பத்தியகம், பகவான் பாதை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்
தொலைபேசி : **0212231414, 0213203030** தொடர்பு நேரம் : **8.30am-4.30pm** வரை
**Email : evergreenmanufactory@gmail.com Web: www.egmfashion.com**
(C-4404)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.